இந்து ஒளி

HINDU OLI

தீபம் - 19 கடிர் - 04



தவத்திரு சிவயோகர் சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்

ஐய வருடம்
பங்குனி

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

March
2015

"இலங்கையின் சைவத்தமிழ் பண்பாடு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் - ஓர் ஆய்வு" நூல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 07. 03. 2015 மாலை வெளியிட்டு வைக்கப்பட்ட நிகழ்வு

சிவச்சாரியார்கள் மங்கள விளக்கேற்றுகிறார்கள்



தவத்திரு யோகர்சுவாமிகளுக்கும் தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டிக்கும் மாலை அஞ்சலி

ஆன்மீகச் சுடரின் அருளுரை

சக்தி இல்ல மாணவிகளின் இறைவணக்கம்

சிவஸ்ரீ மகாதேவா குருக்களைப் பொருளாளர் திரு வே. கந்தசாமி கௌரவிக்கிறார்.



பிரதமவிருந்தினர் நீதியரசர் சத்திய வித்தகர் க. வி. விக்னேஸ்வரனை திரு. தனபாலாவும் திரு. விமலேந்திரனும் கௌரவிக்கின்றார்கள்.

பிரதமவிருந்தினர் நீதியரசர் சத்திய வித்தகர் க. வி விக்னேஸ்வரன் உரையாற்றுகிறார்.

நூலாசிரியர் திரு. செல்வமனோகரனை பிரதமவிருந்தினர் கௌரவிக்கின்றார்.

மாமன்றத் தலைவர் உரையாற்றுகிறார். மேடையில் கலாநிதி ஆறு.திருமுருகன், பிரதமவிருந்தினர், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், நல்லை ஆதீன முதல்வர், பேராசிரியர் கலாநிதி. மா. வேதநாதன், கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா

பேராசிரியர் வேதநாதனை திரு அருளானந்தன் கௌரவிக்கிறார்.

பொதுச் செயலாளரின் நன்றியுரை

உ
சிவமயம்

தீபம் - 19

இந்து ஒளி

சுடர் - 04

ஜய வருடம் பங்குனித் திங்கள் 17ஆம் நாள் (31.03.2015)

பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

தேவாரம்

பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கே னென்னைநீ யிகழ வேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை யம்பலத் தாடு கின்ற
அத்தாவுன் னாடல் காண்பா னடியனேன் வந்த வாறே!

திருவாசகம்

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டும்நான் போற்றி அம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீர்க்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே!

திருவிசைப்பா

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்து உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்கு எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்கு ஆம்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே!

திருப்புராணம்

சொல்லுவது அறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந்து அருளிஎன்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லைஇல் இன்பவெள்ளம் எனக்கு அருள் செய்தாய் போற்றி
தில்லை அம்பலத்துள் ஆடும் சேவடி போற்றி என்ன!

திருச்சிற்றம்பலம்

சிதம்பரத்தில் நாவலர் பெருமானின் உருவச்சிலை நிறுவப்படவேண்டும்

சைவத்தையும் தமிழையும் தனது உயிராக நேசித்த நல்லை நகர் நாவலர் பெருமானை யாரும் மறந்துவிட முடியாது. நாவலர் இல்லை என்றால் ஈழத்திற் சைவம் எழுச்சி பெற்றிருக்க இயலாது. தனியொரு மனிதனாக மாபெரும் சாதனைகளை நிலைநாட்டியவர் நாவலர் பெருமான்.

சிதம்பரத்தில் அவர் உருவாக்கிய பாடசாலைக்கு இந்த ஆண்டு வயது நூற்றிஐம்பது பூர்த்தியாகிறது. சிதம்பரத்தில் வாழும் தீட்சிதர்கள் சமய அறிவு உடையவர்களாக விளங்க வேண்டும் என நாவலர் ஆவல் கொண்டார். காரணம் அச்சியந்திரம் வாங்கச் சென்ற நாவலர் அவ்வேளை சிதம்பரத்தை தரிசிக்கப் போனார். தில்லை வாழ் அந்தணர் மரபில் வந்த தீட்சிதர்களிடம் திருமுறைகள், சைவசித்தாந்தம், அறிவியல், நாகரீகம் போதாமல் இருப்பது கண்டு கவலையுற்றார். அவர்களது நடவடிக்கையை கண்டு கோபமுற்ற நாவலர் தான் வாங்கிய அச்சு இயந்திரத்தை தானே இயக்கி முதல் பிரசுரமாக "சிதம்பரத்து தீட்சிதர்க்கு கண்டனம்" என்ற பிரசுரத்தை வெளியிட்டார். தீட்சிதர்கள் நாவலருக்கு எதிராக திரண்டனர். இந்நிலையில் சிதம்பரத்தில் வாழ்ந்த சைவ ஆர்வலர்கள் நாவலரை வாழ்த்தினர். கண்டனத்தை மட்டும் தெரிவிப்பது தொண்டல்ல, சிதம்பரத்து கூழலை பாதுகாக்க வேண்டும் என நினைத்த நாவலர் பெருமான் நல்லதோர் சிந்தனையை உள்ளத்தில் இருத்தினார். சிதம்பரத்து தீட்சிதர்களின் சந்ததியை காப்பாற்றுவதற்கு அவர்களுக்கென பாடசாலை ஒன்றை நிறுவவேண்டும் என நாவலர் முடிவெடுத்தார். சிதம்பரத்து மேற்கு வீதியில் மாலைகட்டித் தெருவில் சைவப்பிரகாச வித்தியாசாலையை மிகக் கஷ்டப்பட்டு உருவாக்கினார். தீட்சிதப் பிள்ளைகளும் சிதம்பரத்து சுற்றாடலில் வாழ்ந்த பலரும் இப்பாடசாலையில் உயர்ந்த பயன் பெற்றனர். கடந்த நூற்றிஐம்பது ஆண்டுகளாக இப்பாடசாலை நன்முறையில் இயங்கி வருவது சைவ மக்கள் செய்த பெரும்பாக்கியம் எனலாம்.

நாவலர் உயர்நிலைப்பள்ளி என்ற பெயரில் இப்பாடசாலை தற்போது இயங்கி வருகிறது. இப்பாடசாலையை கட்டுவதற்கு நாவலர் பெருமானுக்கு ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் பல அன்பர்கள் உதவியுள்ளனர். இப்பாடசாலையின் கூரைக்குரிய மரங்கள்கூட யாழ்ப்பாணம் இணுவில் நடராஜஐயர் வளவிலிருந்து கொண்டு செல்லப்பட்டதாக நாவலர் பெருமான் சரித்திர நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கட்டுமரத்திலும், பாய்க்கப்பலிலும் எம்மண்ணில் இருந்து பொருட்களை கொண்டு போய் சிதம்பரத்தில் பள்ளிக்கூடம் அமைத்த நாவலரின் ஆளுமையை நினைக்கின்ற போதெல்லாம் வியப்பாக உள்ளது.

இந்திய அறிஞர்கள் நாவலரை பரோபகாரி என்றும், உரைநடையின் ஆரம்ப கர்த்தா என்றும், செய்யுள் நடையிலிருந்த பல நூல்களை வசன நடைக்கு மாற்றிய மகத்தான புருஷர் என்றும் போற்றி வந்துள்ளனர். வசனநடை கைவந்த வல்லாளர் என்ற கௌரவத்தை இன்றும் சொல்லிக் கொள்கிறார்களாம். ஆனால் தமிழ் உலகிற்கு பெரும் தொண்டாற்றிய நாவலர் பெருமானுக்கு தமிழ் நாட்டில் இதுவரை எந்த ஒரு நினைவுச் சின்னமும் உருவாக்கவில்லை என்பது கவலை அளிக்கிறது. இந்தியாவில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் நாவலருக்கு உரிய பெருமைகள் கொடுக்கப்படவில்லை என்பது ஈழத்துச் சான்றோர்களின் கருத்தாகும். சிதம்பரத்தில் நாவலர் பாடசாலை நிறுவிய நூற்றிஐம்பதாவது ஆண்டு நிறைவில் அவர் கட்டிய பாடசாலை வளாகத்திலாவது நாவலர் பெருமானுக்கு உருவச்சிலை நிறுவி அவர் பெருமையை கௌரவப்படுத்த வேண்டிய கடப்பாடு சைவ உலகுக்கு உரியதாகும். இந்த ஆண்டு சிதம்பரத்தில் நாவலர் பெயரால் நல்லதோர் நினைவுச்சின்னம் உருவாக அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக!

எல்லாம் அவன் செயல்

ஆண்டவனையன்றி வேறொரு பொருளு மில்லை. அனைத்தும் அவன் செயல். உனது சுமை முழுவதையுந் திருவடிக் கீழ் இறக்கி வைத்து இளைப்பாறு. கவலைக்கிடங்கொடாதே. நான் செய்தேன் அவன் செய்தானென்று நலியாதே! விழித்திரு.

- யோகர் சுவாமிகள்

அடுத்த சுடர்

மன்மத வருடம் சித்திரை - வைகாசி

வாழ்த்து

பாரொடு விண்ணும் வாழ பாவங்கள் தொலைந்து வீழ
போரொடு புன்மை நீங்கி பாரினில் நாமெல் லோமும்
சீரொடு சிறப்புப் பெற்று சரிநிகர் சமமாய் வாழ
பூரணன் தாழ்கள் பற்றி பிரார்த்தனை செய்வம் நாளும்!

இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற
இந்து ஆராய்ச்சி நிலையத்தின் வெளியீடு
தவத்திரு சிவயோகர் சுவாமிகளின்
ஐம்பதாவது குருபூசை ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்
ஜய வருடம் பங்குனி (31.03.2015)

ஆசிரியர் குழு :
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்

ஒரு பிரதியின் விலை	ரூபா 50.00
வருடாந்தச் சந்தா (உள்நாடு)	ரூபா 300.00 (தபாற் செலவு தனி)
வருடாந்தச் சந்தா (வெளிநாடு)	US டொலர் 15

அகில இலங்கை இந்து மாமன்றம்

A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

இணையத்தளம்	: http:/www.hinducongress.lk
மின்னஞ்சல்	: hinducongress@gmail.com
தொலைபேசி	: 0112434990, தொலைநகல் : 0112344720

இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.

HINDU OLI

Publication of
HINDU RESEARCH CENTRE OF
ALL CEYLON HINDU CONGRESS
Thavathiru Siva Yagar Swamigal Gurupooja
Special Issue - 31.03.2015

Editorial Board :
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Dr. M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar

Price	Rs. 50.00
Annual Subscription (Inland)	Rs. 300.00 (Excluding Postage)
Annual Subscription (Foreign)	U. S. $ 15 (Including Postage)

ALL CEYLON HINDU CONGRESS
A.C.H.C. Bldg.
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720

Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.

ISSN : 2012 - 9645

ஆன்மீகச்சுடரின்

அருள் மடல்

சீரிய வாழ்வுக்கு சிரமதானம்

மனித வாழ்வில் மகத்தான கைங்கரியங்களை நிறைவேற்றி மானிடத்தின் பெறுமதியை ஒவ்வொருவரும் சீராக பேணவேண்டும். இறைவன் தந்த அவயவங்களை இனிய காரியங்களுக்கு பயன்படுத்த வேண்டும். தானும் வாழ்ந்து பிறரையும் நல்ல வண்ணம் வாழ வைப்பதற்கு முயற்சி செய்பவனே உத்தம மனிதன் எனலாம். ஊதியம், வேதனம் எதுவுமின்றி பலரது நன்மை கருதி தொண்டு செய்யும் பண்பாடு இந்து சமயத்தில் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. இதனாலேயே பல இந்துக் கோயில்கள், குளங்கள், மடங்கள், தருமபீடங்கள் உருவாகின. இப்பண்பாடு பிற்காலத்தில் நிறுவன அமைப்பாக, குழுவாக உருப்பெற்றது.

சர்வதேசத்துக்கே சிரமதானம் என்ற பெயரில் தொண்டினை அறிமுகம் செய்தவர்கள் இந்துக்களே. அன்னதானம், அறிவுத்தானம் வரிசையில் சிரமதானத்தையும் தம் சிரசிலே ஏற்றி பேணியவர்கள் இந்துக்கள். கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தம் செய்த அஹிம்சாமூர்த்தி காந்திமகான் சிரமதானத்தை மதித்தவர்; ஊக்குவித்தவர். ஜெயப்பிரகாஸ் நாராயணன் என்று அழைக்கப்பட்ட இந்திய பேரறிஞர் சிரமதான இயக்கத்தை நிறுவனமாக வளர்த்தெடுத்தவர். இன்று சிரமதானத்தை மேலை நாட்டவர்கள் ஆர்வமாக கைக்கொள்கிறார்கள். கீழைத்தேயத்தவர்கள் சிரமதானத்தை கைவிட்டு வருகிறார்கள். பல குளங்கள், கேணிகள் ஈழத்திலும் இந்தியாவிலும் சிரமதானத்தால் உருவாக்கப்பட்டதை நாம் அறிவோம். ஆனால் இன்று ஒரு கேணியை சிரமதானம் மூலம் சுத்தம் செய்யும் சமூகம் நம்மிடம் இல்லை. எந்த ஒரு பொதுப்பணிக்கும் ஊதியம் கொடுக்கும் வழக்கத்தை கட்டியெழுப்புகின்றோம். அதனால் சிரமதானம் சிரமமாகிவிட்டது.

மேலை நாட்டு பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் பல இடங்களுக்குச் சென்று சிரமதானம் செய்கிறார்கள். வைத்தியசாலைகள், பொதுமக்கள் நடமாடும் இடங்கள், பூங்காக்கள், முதியோர் இல்லங்கள் போன்ற இடங்களுக்கு சென்று சிரமதானத்தில் எவ்வித உயர்வு தாழ்வுமின்றி ஈடுபடுகின்றார்கள். சுவாமி விவேகானந்தர் சிரமதானத்தை ஊதியமற்ற உண்மைத் தொண்டாக வளர்க்க முற்பட்டார். ஜீவசேவையே சிவபூசை என்றார். இன்று நிலை மாறி விட்டது. நாவலர் பெருமான் திருத்தொண்டர் புராணத்தை வசன நடையில் வெளியிட்டு யாழ்ப்பாண சமூகத்தை திருத்தொண்டுக்கு ஆற்றுப்படுத்தினார். அவரது சமயப்பிரசங்கம் திருத்தொண்டைப் பரப்பியது. இன்று சமயப்பிரசங்கத்திற்கு ஊதியம் பேசும் நிலை வந்துவிட்டது. கோயில் தொண்டுகள் யாவும் இன்று தொழிலாகி விட்டது. தொண்டுப்பணிகள் பல தொழிலாக மாறிய காரணத்தினால் சிரமதானம் என்ற சொல் சீவிக்க முடியாமல் போகிறது. குறிப்பாக எங்கள் மண்ணில் சிரமதானப் பண்பாடு கட்டி வளர்க்கப்பட வேண்டும். கோயில், பள்ளிக்கூடம், சமூக நிலையங்கள், மக்களுக்கு பயன்தரும் பொது இடங்கள் யாவும் சிரமதானப் பணியினால் சீர் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். சிங்கப்பூர் திருநாட்டை கட்டி வளர்த்த அந்நாட்டின் தந்தை என வர்ணிக்கப்படும் லீ குவான் யூ(முன்னாள் சிங்கப்பூர் பிரதமர்) அவர்கள் தன் கையில் ஒரு விளக்குமாற்றை எடுத்துக் கொண்டு சிங்கப்பூர் பெருந்தெருவை இற்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன் கூட்டத் தொடங்கினார். அவர் கையாண்ட வழி சிரமதானம். "தலைவன் எவ்வழியோ குடிகளும் அவ்வழி" என்ற சொல் மிகவும் அர்த்தமுடையது. சிங்கப்பூரை அழகாபுரியாக்குவதற்கு ஆரம்பத்தில் உதவியது சிரமதானமே.

இன்று சிறிய சிறிய சொந்த வேலைகளையே தாம் நிறைவேற்றாமல் ஊதியம் கொடுத்து ஒப்பேற்றும் நிலை வந்துவிட்டது. உழைப்பில்லாத உடம்புகள் பல ஊதிப்பெருகி நோய்களை சுமக்கும் கூடமாகிவிட்டது. கடவுள் எமக்கு தந்த நல்ல சந்தர்ப்பங்களை நாம் பயன்படுத்த தவறிவிட்டோம். "நல்லதோர் வீணை செய்து அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?" என்ற பாரதியாரின் வரிகள் ஞாபகத்திற்கு வருகின்றன. எங்கள் மண்ணை வளப்படுத்துவதற்கு சிரமதான மார்க்கம் தான் உகந்தது. சிரமதான அமைப்புக்கள் உருவாக வேண்டும். சிரமதானம் செய்பவர்களிடையே மனிதத் தகுதியைவிட வேறெந்த உயர்வு தாழ்வும் இல்லை. சகலரும் ஒன்றாக சங்கமித்து நல்ல காரியங்களை செய்வதற்கு சிரமதானம் கைகொடுக்கிறது.

இன்று கோயில்கள் சமூக ஸ்தாபனங்களில் சிரமதானச் சிந்தனையை ஊக்குவித்தல் அவசியமாகும். பாடசாலைகளில் சிரமதான உணர்வை மாணவர்களிடையே விதைக்க வேண்டும். இந்நிலையை வளர்க்கா விட்டால் கோயில் திருவிழாவில் சுவாமி காவுவதற்கே எதிர்காலத்தில் ஊதியம் வழங்கும் நிலை வந்துவிடும். தொண்டினால் உயர்ந்தது நமது சமயம். திருக்கேதீச்சர திருத்தலத்தின் மீது பாடிய தேவாரம் "தொண்டர் நாள்தொறும் துதி செய்ய அருள் தரும் கேதீச்சரம்" என விழித்துள்ளமையை உணரலாம். எனவே தொண்டர் வழியை பின்பற்றுவோமாக! போரின் அழிவுகளினால் சிதைந்து போன எம்மண்ணையும் மக்களையும் கட்டி வளர்ப்பதற்கு பிறர் தயவை முழுமையாக எதிர்பார்ப்பதை விடுத்து சிரமதானத்தின் ஊடாக செயற்கருங்காரியங்களைச் செய்ய அனைவரும் ஒன்றிணைந்து முற்படுவோமாக!

சிவி தொண்டுதாதன்

மாமன்றச் செய்தி

மாமன்ற வைரவிழா ஆரம்ப நிகழ்வு

அகில இலங்கை இந்து மாமன்றம் ஸ்தாபிக்கப்பட்டு அறுபது வருடங்கள் நிறைவு பெறுவதையொட்டிய வைரவிழா நிகழ்வுகளின் ஆரம்ப வைபவம் கடந்த மார்ச் மாதம் 6ஆம் திகதியன்று மாலை வெள்ளவத்தை சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புப் பூசை வழிபாட்டுடன் ஆரம்பமானது.

இதன்போது அறுபது வருடங்கள் நிறைவை குறிப்பிடும் வகையில் சுமங்கலிகளால் அறுபது குத்து விளக்குகளில் தீபம் ஏற்றிவைக்கும் நிகழ்வு முக்கிய அம்சமாக இடம்பெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் சிறப்பு நிகழ்வுகள் ஆரம்பமாகின. இவர் அனைவரையும் வரவேற்று உரையாற்றும்போது இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"இந்து மாமன்றத்தின் வரலாற்றில் இது ஒரு பொன்னாள். அறுபது வருடங்களுக்கு முன்னர் இந்த ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளின் பின்னர்தான் மாமன்றத்தின் பணிகள் ஆரம்பமாகின. சி. குமாரசாமி, சேர். கந்தையா வைத்தியநாதன், பொன். ஸ்ரீஸ்கந்தராஜா, எஸ். சோமசுந்தரம், வி. சிவசுப்பிரமணியம் ஆ. சின்னத்தம்பி, வே. பாலசுப்பிரமணியம், வி. கயிலாசபிள்ளை போன்ற பெருமக்களின் வழிகாட்டலும், இன்றும் மாமன்றத்துடன் இணைந்திருக்கும் ஏனையோரும் தரும் ஆதரவிலும், ஊக்கத்திலும் மாமன்றம் பெருமளவில் வளர்ச்சியடைந்து வருவதை சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

நல்லூரில் திருமதி பேரம்பலம் அவர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் யாழ்ப்பாணத்துக்கான பிராந்திய அலுவலகமொன்றையும், இந்து ஆராய்ச்சி நிலையத்தையும், நூலகமொன்றையும் அமைத்து மாமன்றப் பணிகளை விஸ்தரித்துள்ளோம். இதுபோல கீரிமலையிலும் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்துடன் இணைந்து இருமாடி மண்டபமொன்றையும் அமைத்து செயற்பட்டு வருகிறோம். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, ஆலையடிவேம்பு போன்ற பகுதிகளிலும் மலையகத்திலும் மாமன்றப் பணிகள் பெருமளவு இடம்பெற்று வருகின்றன. மலையகத்தில் மன்னார், திருமுறிகண்டி ஆகிய பகுதிகளிலும், மாமன்றப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவிருக்கின்றன.

மாமன்றம் சமூக நல சேவைகளை முன்னெடுத்து வருவதுடன், சிறுவர் முதியோர் இல்லங்களை அமைத்து உதவி வருகிறது. இவைதவிர வெளியீட்டுப் பணி ஊடாக மாமன்றம் பல நூல்களையும் வெளியிட்டு வருகிறது." என்று கூறினார் மாமன்றத் தலைவர்.

இந்த நிகழ்வின்போது ஆசியுரை வழங்கிய நல்ல ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் "அறுபது ஆண்டுகளின் முன் இந்துக்களின் குரலாக உதயமான இந்து மாமன்றம், பல வகையிலும் மக்களுக்கு உதவும் நிறுவனமாக செயற்பட்டு வந்துள்ளது. மாமன்றத்தின் உதவியுடன் இந்துக்களின் தேவைகள் அரச அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இங்கு அறுபது விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கின்றன. இந்து சமயத்தின் ஒரே தலைமைத்துவ நிறுவனமாக அமைந்துள்ள இந்து மாமன்றம், எதிர்காலத்திலும் பிரகாசமாக விளங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்" என்று குறிப்பிட்டார்.

இராமகிருஷ்ண மிஷன் இலங்கை கிளைத் தலைவர் சுவாமி சர்வரூபானந்த மகராஜ் ஆசியுரையின்போது "இந்து மாமன்றம் தன் பணியில் அறுபது ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. தொடர்ந்து சேவை செய்து இந்து மதத்துக்கு ஒரு தூண்டுகோலாக அமையவேண்டும். சமீப காலங்களில் மாமன்றத்தின் சேவைகள் பலவகையிலும் அமைந்திருப்பதை சிறப்பாகக் காணமுடிகிறது. மாமன்றத்தின் அறுபது ஆண்டுகள் நிறைவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் வழங்கிய ஆசியுரையில் "இந்து மாமன்றத்தின் நிகழ்வுகளில் கடந்த ஆறு, ஏழு வருடங்களாக பங்குகொள்ளும் பாக்கியம் எனக்கு கிடைத்து வந்துள்ளது. சமய சமூகப் பணிகளில் மாமன்றத்தின் பங்களிப்பு பெரிதும் போற்றத்தக்கது. அண்மையில் இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் ஹலாம், பாப்பரசர் ஆகியோர் இலங்கை வந்திருந்தபோது மட்டுமன்றி, சர்வதேசங்களிலுமிருந்தும் பிரமுகர்கள் வரும்போது இந்து மாமன்றமும் அழைக்கப்பட்டு பங்குகொள்ள வைப்பது சிறப்பான விஷயமாகும். உலகளாவிய ரீதியில் மூன்றாவது சமயமாக விளங்கும் பெருமைக்குரியது இந்து சமயம். இந்து சமய அமைப்புகளுள் ஒன்றான இந்து மாமன்றம், சர்வதேச அமைப்பாக இயங்கவேண்டும் என்பது அடியேனின் விருப்பம்" என்று குறிப்பிட்டார்.

சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. சிற்சபேசக்குருக்கள் வழங்கும் ஆசியுரையின் போது "பலவகையிலும் சிறப்புடன் திகழும் இந்து மாமன்றத்தின் முன்னேற்றத்திற்கு பெரும்பங்களிப்புச் செய்துவரும், தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர்

மற்றும் அங்கத்தவர்கள் எல்லோருக்கும் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்து மாமன்றத்தின் நூற்றாண்டு விழாவும் இந்த மண்டபத்திலேயே நடைபெற வேண்டும்" என்று தெரிவித்தார்.

இலங்கை சின்மயா மிஷன் தலைவர் பிரம்மச்சாரி தர்ஷன் சைதன்யா அவர்கள் வழங்கிய ஆசியுரையின் போது "கடந்த ஆறு தசாப்தங்களாக இந்து மக்களின் நலன்களுக்காக இந்து மாமன்றம் சேயாற்றி வருவதுடன் அவர்களுக்கு பலவகையிலும் உதவி வந்துள்ளது. முப்பது ஆண்டுகால யுத்தப்பாதிப்பு போன்ற காரணங்களால் பலருக்கு இந்து காலாசாரம் விழுமியம் பற்றிய அறிவஜ இல்லாமற் போய்விட்டது. இந்து மதம் புராதனமானது. எல்லாவிதமான ஆன்மீக விஷயங்களும் கூறப்பட்டுள்ளன இந்து மக்களிடையே இந்து மதம் பற்றிய அறிவைப் பரப்புவதற்கு இந்து மாமன்றம் ஆவன செய்ய வேண்டும்" என்று கூறினார்.

திருகோணமலை பாலையூற்று நவசக்தி நாகபீடம் சிவயோக சுவாமிகளும் ஆசியுரை வழங்கினார்.

குருமார்களின் ஆசியரைகளைத் தொடர்ந்து மாமன்ற வைரவிழா சிறப்பிதழாக மலர்ந்துள்ள "இந்து ஒளி" சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்பின் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

"கடந்த அறுபது ஆண்டுகளாக நாட்டில் சைவசமயத்தில் பேரால் அற்புதமான பணிகளையாற்றிவரும் சமய நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்து மாமன்றத்தின் வைரவிழா இன்று பக்திபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அறுபது ஆண்டுகளுக்கு முன் இதே ஆலய முன்றலில் சைவப்பெரியார்கள் ஒன்றிணைந்து நிறுவன ரீதியாக குரல்கொடுக்கும் அமைப்பாக இந்து மாமன்றத்தை உருவாக்கினார்கள். இதனை வளர்த்துவிட்ட பெரியார்கள் இன்று இல்லை. அவர்களது கனவு நனவாகி இன்று யாழ்ப்பாணத்தில் மூன்று மாடிக்கட்டிடம் எழுந்துள்ளது. வன்னி நிலப்பரப்பில் விரைவில் நிரந்தர அமைவிடம், ஏனைய பகுதிகளிலும் விரைவில் கிளை அலுவலகங்கள் உதயமாகவிருக்கின்றன.

சகல மக்களும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதில் அக்கறைகொண்டு, சமயத்தின் பேரால் குரல் கொடுக்கின்ற ஒரு அமைப்பாக, அரசியல் சாராது சமயத்தை ஆற்றுப்படுத்துகின்ற ஒரு அமைப்பாக இந்து மாமன்றம் இயங்கி வருகிறது. அர்ப்பணிப்போடு பணியாற்றும் இந்த நிறுவனம் வைரத்தின் பெறுமதியாகத் திகழவேண்டும். எதிர்காலத்திலும் தன் பணியை சிறப்பாகத் தொடரவேண்டும்" என்று கலாநிதி ஆறு. திருமுருகன் குறிப்பிட்டார்.

மாமன்றப் பொதுச் செயலாளர் கலாநிதி மு. கதிர்காமநாதன் வழங்கிய நன்றியுரையுடன் வைரவிழாவின் ஆரம்ப நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

இந்து மாமன்றம் நடத்திய
தவத்திரு சிவயோக சுவாமிகளின்
ஐம்பதாவது குருபூசை ஆண்டு சிந்தனைக்களம்

தவத்திரு சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை ஆண்டை முன்னிட்டு, அகில இலங்கை இந்து மாமன்றம் "யோகர் சுவாமிகளின் ஆன்மீக நெறிப்படுத்தல்" எனும் பொருளில் ஏற்பாடு செய்திருந்த சிந்தனைக்களம். கடந்த மாதம் (மார்ச்) 7ஆம் திகதி காலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்பு இந்து வித்தியா விருத்திச் சங்கம், சிவயோகர் சுவாமி நம்பிக்கை நிதியம் என்பனவற்றின் அனுசரணையுடன், இந்து மாமன்றம் வைரவிழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக நடத்திய இந்த நிகழ்வின்போது அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் அனைவரையும் வரவேற்று ஆரம்பவுரை நிகழ்த்தினார். "சித்தர் பரம்பரையில் முன்னணியிலிருந்த தவயோகி யோகர் சுவாமிகள் இந்து சமயத்துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்தியவர். சுவாமிகளது ஆன்மீக நெறிப்படுத்தல் தொடர்பான சிந்தனைக்களமாக இன்றைய நிகழ்வு அமைகிறது. மாமன்ற வைரவிழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாமன்ற வைரவிழாவை குதூகலமானதும் கேளிக்கையானதுமான நிகழ்ச்சிகளுடன் அல்லாமல், சமய சமூகக் கல்விப் பணிகளை உள்ளடக்கிய வகையில் அமைத்துக்கொண்டு, தொண்டு சேவையில் ஈடுபட விரும்புகிறோம்" என்று மாமன்றத் தலைவர் குறிப்பிட்டார்.

நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் பேசும்போது "யோகர் சுவாமிகள் ஒரு சித்தர்: மகாஞானி. அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த வருடம் யோகர் சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை ஆண்டின் ஆரம்பநிகழ்வை யாழ்ப்பாணத்தில் நடத்தியபோது, அமெரிக்காவிலிருந்து சுவாமிகளின் திருவுருவச் சிலையை கொண்டு வந்தோம். அமெரிக்காவில் யோகர் சுவாமிகளை பலர் அறிந்து வைத்திருக்கிறார்கள். அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தில் இன்றும் யோகர் சுவாமிகளுக்கு வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது. சுவாமிகள் இன்றும் வாழ்த்து கொண்டிருக்கிறார்" என்று தெரிவித்தார்.

மாமன்ற அறங்காவலர் சபை உறுப்பினரும், சமய விவகாரங்கள் குழுத் தலைவருமான கலாநிதி குமாரசாமி

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

சோமசுந்தரம் தலைமையில் சிந்தனைக்களம் இடம்பெற்றது. இவர் தலைமையுரையின்போது இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

"இந்து மாமன்றம் வைரவிழாவை கொண்டாடுகிறது. அது சாதாரண வைரம் அல்ல. ஜொலிக்கின்ற வைரம். மாமன்றத்தின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதில் நம்பிக்கை உண்டு. திரு. நீலகண்டன் அவர்கள் மாமன்றத்தை சிறப்பாக வழிநடத்துகின்றார். இந்து மாமன்றம் இலங்கையில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் ஆன்மீக சமய சமூக சேவைகளை ஆற்றி வருகிறது. வைரவிழாவின் முதலாவது நிகழ்ச்சியாக விளங்கும் இந்த சிந்தனைக்களம் சிவயோக சுவாமிகளின் பல்வேறு பணிகளை நோக்கும் வகையில் அமைந்துள்ளது.

சென்ற நூற்றாண்டில் ஈழத்து சித்தர் பரம்பரையொன்று வாழையடி வாழையாக இருந்து வந்தது. மைசூரிலிருந்து வந்த கடையிற் சுவாமிகள் ஈழத்து சித்தர் பரம்பரையை ஆரம்பித்து வைத்தவர். இவரது சீடராக விளங்கியவர் செல்லப்பா சுவாமிகள். நல்லூரில் தங்கியிருந்த செல்லப்பா சுவாமிகளை சந்தித்த யோகர் சுவாமிகள் இவரது சீடரானார்".

சிந்தனைக்களத்தில் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன், யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன், சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன், கிழக்கு பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் திருமதி சாந்தி கேசவன், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. பாலகைலாசநாதசர்மா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள்.

மாமன்றத் துணைத் தலைவரும், யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய கௌரவ இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் நிறைவுரையாற்றினார்.

"செல்லப்பா சுவாமிகளின் தெய்வீகத்தைக் கண்டு உணர்ந்தவர் யோகர் சுவாமிகள். அது அறிவுக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட செயல். யோகர் சுவாமிகள் தன் குருவை செல்லப்பன் என்றுதான் பாடியுள்ளார். சித்தர்கள் இறப்பதில்லை. யோகர் சுவாமிகளை உணர்ந்து கொண்டவர்கள் சுவாமிகள் தங்களுக்கு வழிகாட்டுவதாக இன்றும் சொல்கிறார்கள். யோகர் சுவாமிகளின் கோபத்தை சந்தித்தவர்கள் பக்குவப்பட்டார்கள். யோகர் சுவாமிகளை விளங்கிக்கொள்ளவில்லை என்றால் அது எங்களது தவறுதான்" என்று கலாநிதி ஆறு. திருமுருகள் குறிப்பிட்டார்.

மாமன்றப் பொதுச் செயலாளர் கலாநிதி மு.கதிர்காமநாதன் வழங்கிய நன்றியுரையுடன் சிந்தனைக்களம் நிறைவுபெற்றது.

இந்த சிந்தனைக்களத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துரைகளை இந்து ஒளி இங்கு தொகுத்துத் தருகிறது.



மாமன்றத்தின் ஏற்பாட்டில் 2015.03.07ஆம் திகதி நடந்த சிந்தனைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரை

யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைகள்

பேராசிரியர் கலாநிதி வ.மகேஸ்வரன்
தமிழ்த்துறைத் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

ஈழத்து வைதீக சமய மரபை சித்தர்களும் பத்தர்களுமாய் பல்வேறு காலகட்டங்களில் வளர்த்து வளம்பெறச் செய்துள்ளனர். அவர்களுள் ஈழத்துச் சித்தர் வரிசை என்பது மிக நீண்டது. அந்த நீண்ட பட்டியலின் பிரதானமானவராக விளங்கியவர் யோகர் சுவாமிகள் ஆவர். ஈழத்துச் சமய மரபை பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிறுவனமயப்படுத்தி, அதன் தொடராற்றுகையை நிலைநிறுத்தியவர், நல்லூர் ஆறுமுக நாவலர். ஆனால்,இன்னொரு தளத்தில் ஆத்மிக ஞானத்தினூடாக வைதீகம் வளர்த்தவர் யோகர் சுவாமிகள் ஆவார். ஆறுமுக நாவலர் "சைவமும் தமிழும்" தழைக்க என்றார். "சமயியாயிரு மனிதனாயிரு" என்றார் சிவயோகர். நாவலர் தனிநிறுவனம். சிவயோகர் நிறுவனம் சாராதவர். ஆனால், நிறுவனமானவர். யாழ்ப்பாணத்து வைதிகச் சமய மரபில் இருவரும் இறுவேறு திசைகளில் பயணித்தபோதும், சமூகத்தைச் சமயமயமாக்கல் என்ற ஒற்றைப் புள்ளியில் இணைந்தவர்கள்.

சிவதொண்டன் நிலையம் 1937 இல் வெளியிடத் தொடங்கிய சிவதொண்டன் என்ற சஞ்சிகையின் வழி அவர் எழுதிய பாடல்களும் போதனைகளும் நற்சிந்தனைகள் என்ற மகுடத்தில் நூலாக்கம் பெற்றன. அந்தப் பனுவலை முதன்மை ஆதாரமாகக் கொண்டே அவருடைய நற்சிந்தனைகள் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது. நற்சிந்தனையின் முகவாசகம் கனதியானதாகும். அவர்,

"நாங்கள் சிவனடியார்கள்
நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை
நமக்கு இதம் அகிதம் இல்லை
மரணம் பிறப்பதில்லை
வேண்டுதல் வேண்டாமை இல்லை
மண்ணாதி ஆசையில்லை
மனமான பேய் இல்லை
காலதேச வர்த்தமானம் நமக்கில்லை
நாம் அனைத்துக்கும் சாட்சியாக விளங்குகின்றோம்."

என்று சிவனடியார்களைப் பிரகடனம் செய்து கொள்கின்றார். அதாவது சிவனடியார்கள் யார்க்கும் அஞ்ச வேண்டியதில்லை என்ற மனவுறுதியை இவ்விடத்தில அவர் விதைக்கின்றார்.

"யாமார்க்கும் குடியல்லோம்" என்று தொடங்கும் அப்பருடைய தேவாரத்தை இவ்விடத்தில் ஒப்புநோக்குவது அவசியமானதாகும். சிவனடியார்கள் ஒழுக்கம் நிறைந்தவர்களாகவும், சமய ஆசார அனுஸ்டானங்களில் பற்றுறுதி கொண்டவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதை அவர் தீவிரமாக வற்புறுத்துகிறார்.

"எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீறணிக
பழுதிலைந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட்டரற்றுக....
தன்னை அறிக தானே ஆகுக...
ஈசன் அடியினை ஏற்றி ஏற்றி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
சித்தனாக மத்தனாக வாழ்க...
பின்னை ஒன்றும் பேசாதடங்கியிருத்தல் இன்பம்...."

என்ற அடிகளினூடாக அடியவர்களுடைய ஆசார சீலத்தை வற்புறுத்துகிறார்.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா" என்ற அப்பருடைய தேவாரம் இவ்விடத்தில் நினைவுகூரத்தக்கது. சைவசித்தாந்தம் குறிப்பிடும் நாற்பாதங்களின் வழி நின்றொழுகினால் இறைவனை அடையலாம் என்பதுதான் அவருடைய போதனையாக இருந்தது.

இறைவனை அடைய வேண்டுமாக இருந்தால் தன்னை உணர வேண்டும் என்பது சித்தர்கள் வாக்கு. ஆகவே, ஐம்புல ஒடுக்கம் அதனூடாகத் தன்னை அறிதல் என்பதை பல பாடல்கள் ஊடாக விபரிக்கிறார் :

"பொறிவழியே போயலையும்
பொல்லா மனத்தை வென்றால்
அறிவறியாமை எல்லாம் -கிளியே!
அப்பொழுதே மாய்ந்துவிடும்
அஞ்சாதே நீ கெஞ்சாதே
அங்கு மிங்கு மோடாதே
எங்கும் நாமெடி எங்கும் நாமெடி
எல்லாம் நாமெடி எல்லாம் நாமெடி."

என்றும்,

"தன்னையறிந் தோர்க்குத் தாழ்வுண்டோ வையகத்தில்
பின்னையினிப் பேசுவதென் - குதம்பாய்
பின்னையினிப் பேசுவதென்
நாமும் நாமாகி நமக்குள்ளும் நாமானால்
போமுன் வினையனைத்தும் - குதம்பாய்
போகுமுன் வினையனைத்தும்"

என்றும்,

"தன்னை அறிந்தால் தவம்வே றில்லைத்
தன்னை அறிந்தால் தான்வே றில்லைத்
தன்னை அறியச் சகலமுமில்லைத்
தன்னை அறிந்தவர் தாபதராமே"

என்றும் குறிப்பிடுகிறார். இங்கே சித்தர் தத்துவத்தின் இரண்டு விடயங்களை அவர் தீவிரமாக விபரணம் செய்கிறார். ஒன்று, பொறிகளை அடக்குதல். மற்றையது, தன்னையறிதல்.

"பார்ப்பானிடத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்பாரும் இன்றி வெறித்துத் திரிவதாம்
மேய்ப்பாரும் உண்டாகில் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே"

என்பது திருமூலர் வாக்கு. இதனையே,

"பொறிவழியே போயலையும்
பொல்லா மனத்தை வென்றால்"

என்று சிவயோகர் குறிப்பிடுகிறார். மேலும், "தன்னைஅறிதல்" என்பது மிகமுக்கியமான விடயம். தன்னை அறிந்தால் இந்த உலகில் வேறொன்றையும் அறிய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் "தத்வம் அஸி" என்பதாக நமக்குள்ளே எல்லாம் அடங்கிவிடும் என்று குறிப்பிடுகின்றார்.

மனிதர்கள் பல்வேறு விதமான ஆசைகளினால் கட்டுண்டு காணப்படுகிறார்கள். இதனால்தான் அவர்கள் பல்வேறு வினைகளை ஆற்றி, அதனூடாகப் பொல்லாப் பிறப்புநோய் பெற்று யுகாந்திரமாகப் பிறந்து இளைக்கின்றார். ஆகவே, ஆசா பாசங்களை அறுத்தெறிவதனூடாக பேரின்பப் பெருவாழ்வைப் பெறலாம் என்று போதிக்கின்றார். அதனால்தான் அகத்தைப் பேயாக முன்நிறுத்தி,

1. அங்கிங்கலையாதே அகப்பே,
2. பொன்னாசை மண்ணாசை அகப்பே புத்தி சிதைக்குமடி,
3. கொஞ்சங் கொஞ்சமாக மனத்தை சித்தப்படி கொண்டு வா,
4. துஞ்சாதே தூங்காதே துரியநிலை சார்,
5. ஒன்றுமற நில்,
6. ஓமென்று செபி,
7. குருநாதன் சொல்லைத் தூய்மையாய் போற்று,

என்று குறிப்பிடுகின்றார்.

முத்தி என்பது ஆத்ம ஞானிகளுடைய இறுதி இலக்கு. ஆத்மா இறைவனை "தாடலை போல் கூடல்" என்பது சைவசித்தாந்திகள் வாக்கு. ஆனால், சிவயோக சுவாமிகள் புதிய வழியொன்றை நமக்குக் கற்பிக்கின்றார்:

"முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ!
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெய் யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலைந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயற வாழ்த்தல்
சாத்திரம் பயிலல் தன்போற் பிறரையும்
பார்த்தல் பணப்பற் றொழித்தல் பண்புடன்
வார்த்தையாடல் வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே"

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

இந்த வழிகள் நவீன சிந்தனை கொண்டவை. ஒரு மனிதன் தன் எல்லைகளில் அடக்கமிக்கவனாகவும் சமூக நடவடிக்கைகளில் இணக்கம் கொண்டவனாகவும் தன்னைப்போல் பிறரையும் நேசிப்பவனாகவும் வாழுதல் என்பது பொதுவான மரபு சார்ந்த வழிமுறைகள். ஆனால், "கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்" எனும் வரி தனித்துவமானது. சாதியக் கட்டுமானங்கள் தகர்ந்த நிலையில் நிலைபெறுகின்ற ஆத்மா ஒன்றால்தான் முத்தியை அடையலாம் என்பது அவரது சிந்தனை. இது வழிவழியாக சித்தர்கள் மரபில் வந்த சிந்தனை.

"பணத்தி போகம் வேறெதோ
பறைச்சி போகம் வேறெதோ
தோலிலும் எலும்பிலும்
இலக்கமிட்டிருக்குதோ"

என்ற பதினென் சித்தர்களில் ஒருவருடைய குரலே இங்கு மாற்றுவடிவமாக ஒலிப்பதைக் காணலாம்.

முத்தியை நிராகரித்த இன்பம் ஒன்றையும் யோகர் சுவாமிகள் முன்நிறுத்துகிறார். இன்பம் என்பது அவரவரது பார்வைகளில் வெவ்வேறு கருத்துக்கள் கொள்ளும். ஆனால், யோகர் சுவாமிகளது பார்வையில் இன்னொரு வகையில் தோற்றம் கொள்கிறது.

"யாவரும் சமமென உணர்ந்திடல்
யாவரும் சகோதரர் என்பது அறிதல்
யாவரும் நலனுற உழைத்தல்
பாமர மக்கட்குப் பணி செய்தல்
அவர் வாழ்வு உயர்த்துதல்
சேமமர் சாலைகள் நிறுவுதல்
வாமநூற் கலைகள் வகுத்திடல்"

ஆகியவற்றால் இன்பம் பெறலாம் என்று குறிப்பிடுகிறார். இறைதியானத்தில் திளைத்தல், செயல்கள் யாவற்றையும் சிவன் செயலாக நினைத்தல், ஐம்புலன் அடக்குதல், ஓங்கு உணர்வின் உள் ஒடுங்க உள்ளத்துள் இன்பம் ஒடுங்க தூங்குதல் ஆகியவையே ஆத்ம ஞானிகளின் பொதுவான இன்பம் என்ற தளத்திற்கும் மேலாக மக்கள் நலநாட்டமே இன்பம் தரக்கூடியது என்பதை இவ்விடத்தில் யோகர் சுவாமிகள் வலியுறுத்துகிறார்கள். உலக மக்கள் யாவரும் சகோதரர்கள் என்பதும் பாமர மக்களுக்குப் பணி செய்தல் என்பதும் மிக உன்னதமான நற்சிந்தனைகளாக இங்கு பரிணமிப்பதைக் காணலாம்.

எல்லா ஞானிகளுக்கும் ஏதோவொரு வகையில் நோக்கங்கள் இருக்கும். அந்த நோக்கங்களை அவர்கள் வேண்டுதல்களாக வெளிப்படுத்துவர். இங்கே யோகர் சுவாமிகளின் நோக்கம் இவ்வாறாக அமைகிறது.

"பொய்யுங் கொலையும் புலையும் தவிரவும்
சைவ மோங்கவுங் சத்தியந் தழைக்கவும்
தெய்வமுண் டென்னுஞ் சித்தந் திகழவும்
கைவினை செய்து கழலடி போற்றவும்
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்யவும்
மெய்யடி யார்கள் மேன்மேற் கிளைக்கவும்
தையலார் தம்மைத் தாயெனப் பேணவும்
நைந்துநைந் துருகி நைந்து நைந்தேற்றி
நமச்சி வாயவென நாம்வாழ் குவமே"

இதில் முக்கியமான விடயங்கள் மூன்று. தெய்வம் உண்டென்னும் சித்தம் திகழ்தல். இரண்டு, செய்வன எல்லாம் செவ்வனே செய்தல். மூன்று தையலார் தம்மைத் தாயெனப் பேணுதல் ஆகியவை அவையாகும்.

இதில் தெய்வமுண்டென்னும் சித்தம் என்பது தெய்வத்தை மறுதலிக்காத அல்லது நாத்திகம் இல்லாத சிந்தனை மனிதனிடம் நிலைபெறவேண்டும் என அவர் விரும்புகிறார். செய்வன திருந்தச் செய்தல் என்ற பூரண செயற்பாட்டை வேண்டுகிறார். மூன்றாவது, மிக முக்கியமானது. பெண்களைத் தாயெனப் போற்றுகின்ற மனோபாவம் உலகில் நிலைக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றார். இவையே யோகர் சுவாமிகளின் சிந்தனையில் உதித்த மாற்றுச் சிந்தனைகளாகும்.

மேற்குறித்த விடயங்கள் எல்லாவற்றையும் விட அவர், இறைவனை காணுகிற விதமும் வேறாக அமைகிறது. இறைவன் என்பவன் சகலருக்கும் பொதுவானவன் என்பதுதான் அவருடைய கோட்பாடு.

"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பளிக்கும் தெய்வம்
காணாத காட்சியெல்லாம் காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர் சடைமேல் நிற்க வைத்த தெய்வம்
நெற்றியின் மேல் ஒற்றைக்கண் நேர வைத்த தெய்வம்
எல்லார்க்கும் தெய்வம் என்னுடைய தெய்வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந் தெய்வம்"

ஆகவே,கடவுளுக்கு பேதம் - அபேதம், உயர்வு - தாழ்வு, சிறுமை - பெருமை என்பன எதுவுமில்லை என்று பொதுமைப்படுத்துகின்றார். இதற்கு மேலாக அவர் குரு பக்தியை மிகவும் வற்புறுத்துகிறார்.

நீராய் நெருப்பாய் நெடுநிலனாய் காற்றாகி
ஆராலுங் காணா அமலன் அங்கே- நேராகச்
சற்குருவாய் வந்தேயென் சந்தேகந் தீர்த்தாண்டான்
நிர்க்குணம் பூண்டேன் நினை

என்று சற்குருவைக் கடவுள் நிலையில் வைத்துப் போற்றுகின்றார். தனது குருநாதர் தன்னை நல்லூர் தேரடியில் கண்டு ஞானோபதேசம் அளித்த அந்த திருவருளை நினைத்து ஆனந்தக் களிப்பும் கொள்கிறார்.

"என்னை எனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி என் தலை வைத்தான் எங்கள் குருநாதன்"குரு பக்தி, இறைபக்தி இரண்டும் இணைந்த நிலையை யோகர் சுவாமிகளின் சிந்தனைகளில் அறிகின்றோம். மாணிக்கவாசகர் தன்னைக் குருந்த மர நிழலில் குரு வடிவில் வந்து தடுத்தாட்கொண்ட இறைவனின் பெருங்கருணையை நினைந்து நினைந்து ஆனந்தக் களிப்புக் கொள்வது போலவே யோகர் சுவாமிகளும் கொள்கிறார். அதனூடாக யோகர் சுவாமிகள் நமக்கு இறை பக்தியும் குரு பக்தியும் இணைந்த ஒரு வாழ்வு நிலையின் அவசியத்தை நிலைநிறுத்துகிறார்.

யோகர் சுவாமிகளது நற்சிந்தனைகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு அவரை பக்தராக இனங்காண்பதா, அன்றிச் சித்தராக இனங்காண்பதா என்ற வினா எம்முள் எழுகிறது. ஏனெனில், இந்த இரு நிலைகளையும் அவருடைய சிந்தனைகளில் காணலாம்.

முதலில் அவரைச் சித்தராகவே பெரும்பாலானவர்கள் அறிகிறார்கள். ஈழத்துச் சித்தர் பரம்பரையில் அவரொரு முக்கிய புள்ளியாக நிலைநிறுத்தப்படுகிறார். நல்லூர் தேரடியில் செல்லப்பா சுவாமிகளின் சீடனாகி, அவருடனான

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

தொடர்பால் பல்வேறு சித்துக்களையும் அருட்காட்சிகளையும் நிகழ்த்தியவர் அவர். செல்லப்பா சுவாமிகள் சொன்ன மகாவாக்கியங்களான "ஒரு பொல்லாப்பும் இல்லை". "எப்பவோ முடிந்த காரியம்","நாமறியோம்""முழுதும் உண்மை" என்ற மகாவாக்கியங்களுக்குப் புதுப்பரிமாணம் கொடுத்தவர், அவர். தன்னையறிதல், தன்னுள்ளே இறைவனைக் காணல், அதனால் ஆனந்தக் களிப்புக் கொள்ளல், சும்மா இருத்தல், ஒன்றும் அற நிற்றல்,பேசாது அடங்கியிருத்தல் என்பவற்றை மகாவாக்கியங்களாக்கி அதனூடான ஆத்ம ஞான உணர்வினை வளர்த்தவர் அவர். மேலும்,சித்தர்களிடம் காணப்படுகின்ற சமூக நலநாட்டம், சாதிகளுக்கெதிரான போர்க்குரல்,சகலரையும் சமமாக மதித்தல், சகலரையும் கடவுளாக மதித்தல் என்ற கோட்பாடுகளின் வழி நிற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் அவரை சித்தராகக் கட்டமைக்க முடியும்.

ஆயின், அவர் பக்தர்க் குரிய கோலங்களும் கொண்டிருந்தார் என்பதனை அவருடைய சிந்தனைகள் ஊடாகவும் செயற்பாடுகள் ஊடாகவும் அறிய முடிகிறது. முதலில் அவர் மாணிக்கவாசகரை எமக்கு நினைவூட்டுகிறார். மாணிக்கவாசகர் தனது ஞானகுருவை எவ்வாறு போற்றிப் புகழ்ந்து பாடுகிறாரோ அவ்வாறே இவரும் தனது ஞான குருவையும் போற்றிப் புகழ்ந்து ஆனந்தக் களிப்படைகிறார். அப்பருடைய பாடல்களில் காணப்படுகின்ற சரியை நெறியை இவர் கவனமாகப் பேணுகின்றார். திருக்குறளையும் ஔவையினுடைய திருமொழிகளையும் பின்பற்றி, அவற்றின் ஊடான நல்லறங்களைப் போதிக்கின்றார். மேலாக நல்லூரையும், நல்லூர்த் தேரடியையும், நல்லூர் முருகனையும் அவர் போற்றிப் புகழ்கின்றார். இது சித்தர்களிடம் காணப்படாத பண்பு. சித்தர்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட ஆலயங்களையும் அவற்றின் விழாக்களையும் சடங்கு சம்பிரதாயங்களையும் மிகுந்த கண்டனங்களுக்குள்ளாக்குகின்றார்கள்.

"நட்ட கல்லை தெய்வமென்று
நாலு புஷ்பம் சாத்தியே
சுத்தி வந்து முணுமுணுமென்று
சொல்லும் மந்திரம் ஏதடா
நட்ட கல்லு பேசுமோ
நாதனுள் இருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம்
கறிச்சுவை அறியுமோ"

என்று நிறுவன மயப்படுத்தப்பட்ட சமய நடவடிக்கைகளைக் கண்டனம் செய்கிறார்கள், சித்தர்கள். ஆனால், யோகர் சுவாமிகள்,

"நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் - நல்ல மயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி"

என்று பாடுகிறார். இது சித்தர்களிடம் காணமுடியாத ஒரு இணக்கப்பாடு. தன்னுள்ளே இறைவனைக் காணவும் முடியும். தனக்கு வெளியேயும் காணமுடியும் என்கின்ற கோட்பாட்டை அவர் இங்கு வற்புறுத்துகின்றார். இது அவர் கண்ட சமரசம். இதனால்தான் யோகர் சுவாமிகள் யாழ்ப்பாண சமூகத்தில் சகலராலும் வேண்டப்படுகிற -பக்தராகவும் சித்தராகவும் நிலை பெறுவதற்கான அடிப்படையாகும்.

யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைகளின் நிலை பேறாக்கம் இன்னொரு வகையிலும் கால்கொண்டது. அதாவது அவருடைய சமூக சிந்தனைகளின் மொழி என்பதுதான். பொதுவாகவே சித்தர்கள் சங்கேதம் என்ற சொல்லாடலால் பிறர் அறியாத குழூஉக்குறிச் சொற்களைப் பெரும்பாலும் உபயோகித்துள்ளனர் என்பர். ஆயின், யோகர் சுவாமிகள் அவ்வாறான சொல்லாடல்களை நிகழ்த்தவில்லை. ஆழ்வார்களது பாசுரங்களும் நாயன்மார்களது தேவாரங்களும் எவ்வளவு எளிமையாக இருந்தனவோ அவ்வாறே எளிமையுடையதாக அவருடைய சிந்தனைப் பாடல்கள் அமைந்தன. பொதுமக்களிடம் பரவலாக அவை சென்று சேர்வதற்கு இந்த மொழி எளிமை வகை செய்தது எனலாம். மேலும் தம்பி என்று கேட்போரை முன்னிலைப்படுத்தியும் எடா, எடி என்று ஆள்நிலைப்படுத்தியும் உளவியல் ரீதியாக பொதுமக்களை ஈர்க்கும் பண்பாட்டையும் காணமுடிகிறது.

ஆகவே, யோகர் சுவாமிகள் சித்து நிலையும் பக்தி நிலையும் இணைந்த ஒரு கூட்டுக் கலவையாக நம் கண் முன்னால் காட்சி தருகின்றார். உலகை வெறுத்து தனியிடம் தேடி ஒதுங்கி வாழ்தல் என்ற சித்தர் கோட்பாட்டை மறுதலித்து, மக்களோடு மக்களாக வாழ்ந்த சித்தரானார். பூமியில் அன்பும் அறனும் தளைக்க வேண்டும் என்ற வேணவாவால் சமூக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துகின்ற போதனையாளரும் ஆனார்.

இறைவனை அடைதல் என்பது எந்த வழியில் நிகழ்ந்தால் என்ன அந்த வழி நேர்வழியாய் இருக்க வேண்டும் என்பதுதான் அவருடைய விருப்பு. அதனாற்றான் அந்த இரண்டு நிலைகளையும் வற்புறுத்துகிறார். உலகத்தோர் சேமமுற வாழ்தல், வாழ்வாங்கு வாழ்தல், அதனூடாக இன்பம் பெறுதல் என்பது அவரது விருப்பாக இருந்தபோது சித்தரும் பத்தரும் அவருள் இணைந்தனர். யோகர் சுவாமிகள் அதன் தூல வடிவம். சித்தர் அங்கீகாரம் பெற்ற பத்தராகி நிறுவனமயமானார். நிறைவாக,

"ஓ மனிதனே சற்றுப் பொறுமையாய் இருந்துபார்,
நீ யாரெனத் தெரிந்து கொள்ளுவை,
துயருறத் தகாத காரியங்களிலே துயருறாதே,
துன்பமும் இன்பமும் உலகியற்கை,
நீ சித்துப் பொருள்,
உன்னை ஒன்றும் தாக்கமாட்டாது,
எழுந்திரு,
விழித்துக்கொள்
சிவத்தியானமென்னும் திறவுகோலால்
மோட்ச வீட்டின் கதவைத் திறந்துபார்,
எல்லாம் வெளியாகும்."

இக்கூற்றினுள் சகலதும், சகலரும் அடக்கம். இதுதான் யோகர் சுவாமிகளின் சிந்தனையின் ஏற்புடைமை.

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

மாமன்றத்தின் ஏற்பாட்டில் 2015.03.07ஆம் திகதி நடந்த சிந்தனைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரை

யோகர் சுவாமிகளின் போதனைகளும் மகா வாக்கியங்களும்

பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன்
தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

Fழத்து மறைஞான மரபிலே யோகசுவாமிகளின் ஆன்மீக போதனைகள் தனித்துவம் மிக்கனவாக விளங்குகின்றன. நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழியான மந்திரங்கள் போன்று யோகசுவாமிகளின் போதனைகளும் அவரின் குருநாதராக விளங்கிய செல்லப்பா சுவாமிகளின் மகாவாக்கியங்களும் விளங்குகின்றன. யோகசுவாமிகளின் ஆன்மீக போதனைகளையும் செல்லப்பா சுவாமிகளின் மகாவாக்கியங்களையும் நோக்கும்போது அவர்கள் இருவரையும் புராதன இந்து மகரிஷிகளின் ஆன்மீக மரபில் அவதரித்த மறைஞானிகளாகவும் அநுபூதிமான்களாகவும் கொள்ளமுடிகின்றது. யோகசுவாமிகள் நூல்கள் எதுவும் இயற்றவில்லை. எனினும் அவரின் திருவாய்மொழிகள், "நற்சிந்தனை", "எங்கள் ஆசான் அருள் மொழிகள்" ஆகிய ஆன்மீக நூல்களில் திகழ்கின்றன. அவர் கூறும் ஆன்மீக போதனைகளும், மகாவாக்கியங்களும் தெய்வீக ஒளடதங்களாக விளங்குகின்றன. அவற்றை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

ஆன்மீக போதனைகள்

"ஆன்மா"வுடன் தொடர்புடையவை "ஆன்மீகம்" எனப்படும். "ஆன்மா" பற்றி யோகசுவாமிகள் கூறும் ஆன்மீகப் போதனைகள் தனிச் சிறப்புடையவை.

"நற்சிந்தனை" எனும் நூலின் நுழைவாயிலில் யோக சுவாமிகளின் கையெழுத்துடன் விளங்கும் திருமுகத்தில் "ஆன்மா" பற்றிய அடிப்படையை,

"நாம் உடம்பன்று மனமன்று புத்தியன்று.
சித்தமன்று. நாம் ஆத்மா"

என்று மொழிந்துள்ளார். "நாம் ஆத்மா" எனும் உண்மையைப் பல்வேறு உபாயங்களைக்கொண்டு அவர் அதனைத் தெளிவாக்கியுள்ளார். "தம்பிமாரே" எனவும், "பாங்கிமாரே" எனவும் "தங்கமே கிளியே" எனவும் விளித்து "நாம் ஆத்மா" என்பதை விளக்கியுள்ளார். அவரின் "சங்குப் பாடலிலே. "நாம் ஆத்மா" என்று காது செவிடுபடக் கூறுகின்றார். நீதி, நேர்மை, வீரம், சத்தியம் எனும் நான்கும் ஆன்மாவுக்கு அணிகலன்கள் என்பது யோகசுவாமிகளின் ஆன்மீக போதனையாகும்.

"அரியதிலரியது ஆன்மா", "பெரியதிற் பெரியது ஆன்மா" என்னும் எனும் நற்சிந்தனைத் தலைப்புக்களில் "ஆன்மா"வுக்குரிய இலக்கணத்தை அவர் நன்கு வரையறை செய்துள்ளார்.

"பெரியதிற் பெரியது ஆன்மா" எனும் தலைப்பிலுள்ள நற்சிந்தனைப் பாடலில்,

"பெரியதிற் பெரியது சிறியதிற் சிறியது
அரிதில் அரியது ஆன்மா அதுதான்"

என்று ஆன்ம இலக்கணத்தைக் குறிப்பிடுகின்றார்.

"ஆன்மா நீ" எனும் தலைப்பில் அமைந்துள்ள,

"ஐம்பூதம் நீயல்லை ஐம்பொறியு நீயல்லை
ஐம்புலனும் நீயல்லை ஆன்மா நீ - உண்மையில்
செம்மையாய் வாழ்ந்து சீ வன்சிவ னென்றமுழு
உண்மை யறிவாய் உகந்து"

எனும் நற்சிந்தனைப் பாடலிலும் ஆன்மா பற்றிய வரையறையையும் "முழுவதும் உண்மை" என்ற மகாவாக்கிய விளக்கத்தையும் தெளிவாகக் கண்டு இன்புற முடிகின்றது.

ஆன்மீக விடுதலைக்குரிய வழிமுறைகள் பற்றி யோகசுவாமிகள் கூறும் வழிமுறைகள் தனித்துவமானவையாக விளங்குகின்றன. அவை அறநெறியோடு சம்பந்தப்பட்டவை. அனைவரும் பின்பற்றக் கூடியவை. முத்திநெறிக்குரிய வழிகளாக யோகசுவாமிகள்,

"சாந்தம் அடக்கம் தயவுடன் வாழ்ந்தினிது
சேர்ந்திடுவார் முத்தி தெரி" என்றும்,

"சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தியா நித்திய வத்து விவேகம்
பத்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலைந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோல நீறணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிலல், தன்போற் பிறரையும்
பார்த்தல், பணப்பற்றொழித்தல், பண்புடன்
வார்த்தையாடல், வாதனை தீர்த்தல்
கோத்திங் குலமெனுங் கோட்பாடொழித்தல்"
என்றும்,

"தான தருமங்கள் தவமும் புரியுங்கள்
ஞானவீடு நமக்கெளி தாமே"

என்றும் மொழிந்துள்ளமை வேறு எவரும் கூறாத முத்திக்குரிய வழிமுறைகளாகத் தெரிகின்றது. யோகசுவாமிகளின் போதனையில் இவை தனித்துவமானவையாக விளங்குகின்றன.

யோகசுவாமிகளின் ஆன்மீக போதனைகள் அனைத்தின் சாரம் நற்சிந்தனையின் நுழைவாயிலில் உள்ள "எங்கள் குருநாதன்" என்னும் தலைப்பில் வரும் பாடல்களில் உள்ள

"என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடி யென் தலை வைத்தா னெங்கள் குருநாதன்"
"சீவன் சிவனென்றா னெங்கள் குருநாதன்"
"அக்குமணி யணியென்றா னெங்கள் குருநாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள் குருநாதன்"
"அதுவே நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்"
"சாதி சமயமிலா னெங்கள் குருநாதன்"

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

எனவரும் வாக்கியங்களில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத் தக்கதாகவுள்ளது. இப்போதனைகள் குருவே கூறியதாக யோகசுவாமிகள் மொழிவது அவரின் குருபக்தியின் சிறப்பைச் சுட்டி நிற்கின்றது.

"தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்" எனபதே யோகசுவாமிகளின் போதனைகள் அனைத்தினதும் சாரமாகும். ஒருவர் தன்னை அறிவதற்கு யோகசுவாமிகள் கூறும் சாதனைகளுள் "தியானசாதனை" முதன்மையானது. ஆத்மாவே நாமென்று ஒவ்வொருநாளும் சாதனை செய்பவர் ஆனந்த மோட்சம் பெறுவர்.

தியானசாதனையைப் பயில்வதற்கேற்ற மந்திரங்களாக நற்சிந்தனையில், "அது நாம் ஓம் தத்சத் ஓம்", "ஓம் நமசிவாய" எனும் மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. நற்சிந்தனையில் உள்ள "நமசிவாயமாலை" என்பது இரவில் நித்திரைக்குப் போகமுன்னர் ஓதுவதற்கு ஏற்பட்ட மந்திரமாலையாகும்.

திருக்கோயில் வழிபாட்டை ஊக்கப்படுத்துவதும், திருவடி வழிபாட்டினை வற்புறுத்துவதும் யோகசுவாமிகளின் போதனைகளில் சிறப்பாகத் தெரிகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள சிவதொண்டன் நிலையம் திருவடி வழிபாட்டுக்குரிய ஆன்மீக அருள்நிலையமாக இன்றும் விளங்குகின்றது.

சித்தாந்த சைவ அறவாழ்வில் இடம்பெறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கும் சிவத்தொண்டே என்பது யோகசுவாமிகளின் முடிந்த முடிவாகத் தெரிகின்றது. இதனையே அவர்,

"சிவத்தொண்டு செய்தல் செகத்தில் சரியை
சிவத்தொண்டு செய்தல் செகத்தில் கிரியை
சிவத்தொண்டு செய்தல் செகத்தில் யோகம்
சிவத்தொண்டு செய்தல் சிவ ஞானம் ஆமே"

என்று மொழிந்துள்ளார்.

மஹாவாக்கிய விளக்கம்

இந்து சமயத்தில் மஹாவாக்கியங்களுக்குத் தனிச் சிறப்புண்டு. இந்துசமயத்தில் மஹாவாக்கியம் என்பது பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள நெருக்கமான சம்பந்தத்தைச் சுட்டி நிற்கின்றது. வேதங்களில் "தத்துவமஸி", "அகம்பிரமாஸ்மி", "அயம் ஆத்மா பிரமம்", "சர்வம் பிரஹ்மம்", "பிரஹ்ஞானம" ஆகிய மஹாவாக்கியங்கள் பரமாத்ம ஜீவாத்மா ஐக்கியத்தையே விளக்கி நிற்கின்றன. இம் மஹாவாக்கியங்களுள் மிகச்சிறப்புடையது "தத்" "த்வம்" "அஸி" என்னும் மூன்று சொற்களைக் கொண்ட "தத்துவமஸி" எனும் வாக்கியமாகும். "நீ அதுவாக இருக்கிறாய்" என்பது இதன் பொருளாகும். ஜீவாத்மாவாகிய நீ பரமாத்மாவாகிய அதற்கு அந்நியமானவன் அல்லன் என அதற்கு விளக்கம் வருகின்றது. இந்த மஹாவாக்கியத்திற்கு உற்ற உயர்ந்த விளக்க நூலாக பிரஸ்தானத்திரயத்துள் ஒன்றான பகவத்கீதையைக் குறிப்பிடலாம்.

யோகசுவாமிகளின் நற்சிந்தனை முழுவதும் மஹா வாக்கியங்கள் என்றே கருதப்படினும், "ஒரு பொல்லாப்புமில்லை" "முழுவதும் உண்மை" "எப்பவோ முடிந்த காரியம்" "நாம் அறியோம்" எனும் அமுதமொழிகளை யோகர் மஹாவாக்கியம் என்று வழங்கி வருவது ஈழத்துச் சைவர்களின் மஹாவாக்கியம் என்று வழங்கி வருவது ஈழத்துச் சைவர்களின் மஹா வாக்கிய மரபாக இருந்து வருகின்றது. ஆனால் இம் மஹாவாக்கியங்களை யோகசுவாமிகளின் ஆசானாகிய செல்லப்பா சுவாமிகளே அருளினார் என்பதை யோகசுவாமிகளின் நற்சிந்தனை வாயிலாகத் தெளிவாக அறியமுடிகின்றது. செல்லப்பா சுவாமிகள் அருளிய மகாவாக்கியங்கள் யோக சுவாமிகளின் நற்சிந்தனையில் மிகவும் தெளிவாக விளக்கம் பெற்றுள்ளது.

வேதங்கள் கூறும் மஹாவாக்கியங்களை பகவத்கீதை விளக்கி நிற்பது போன்று, செல்லப்பா சுவாமிகள் அருளிய மஹாவாக்கியங்களை "யோகா நற்சிந்தனை" மிகவும் தெளிவாக விளக்கி நிற்கின்றது.

"தத்துவமஸி" எனும் மஹாவாக்கியத்திற்கு இணையான மஹாவாக்கியங்கள் பல நற்சிந்தனையில் நன்கு பதிவாகி யுள்ளன.

நற்சிந்தனையின் ஆரம்பம் யோகர்சுவாமிகளின் திருமுகத்தோடு தொடங்குகின்றது. அத்திருமடலில் யோகர் சுவாமிகள், "அவனே நானே" என்று தமது கையொப்பத்தை இட்டுள்ளமை குறிப்பிடற்பாலதாகும். "தத்துவமஸி", "அகப்பிரமாஸ்மி" ஆகிய வடமொழி மஹாவாக்கியங்களின் தமிழ் மஹாவாக்கியமே "அவனே நானே" என்பதாகும். இதனை மேலும் அவர் நற்சிந்தனையில் "சீவன் சிவமென்று தெளி" "அது நாம்", "நாம் சிவம்", "சீவன் சிவம்", "சீவனே சிவனென்று தெரிந்து கொள்ள வேண்டும்" "நாம் அது", "நீயோ நான்", எங்கே நீ அங்கே நான்", "அதுவாதலாலே அதிசயம் மெத்தவுண்டு" என மொழிந்துள்ளார்.

மஹாவாக்கியங்கள் என்றுமுள்ளவை. அவை அவ்வப் போது மகாஞானிகளின் காட்சியில் தரிசனமாகின்றன. வேதகால மகரிஷிகளுக்கு ஏற்கனவே குறிப்பிட்ட "அகம்பிரமாஸ்மி", "தத்துவமஸி", "அயம் ஆத்மா பிரமம்", "சர்வம் பிரமம்" ஆகிய மஹாவாக்கியங்கள் தரினமாயின. அவ்வாறே செல்லப்பா சுவாமிகளுக்குச் சென்ற நூற்றாண்டில், "முழுவதும் உண்மை", "ஒரு பொல்லாப்புமில்லை", "எப்பவோ முடிந்தகாரியம்", "நாமறியோம்" எனும் நான்கு மஹாவாக்கியங்கள் தரிசனமாயின. செல்லப்பா சுவாமிகள் ஓர் ஆண்டு முழுவதும் ஒரு மஹாவாக்கியத்தையே ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் சமாதியடைந்த ஆண்டிலே "நாமறியோம்" எனும் மஹாவாக்கியத்தை ஓதிக்கொண்டிருந்தார்.

செல்லப்பா சுவாமிகள், யோகசுவாமிகளுக்குக் கூறியதாக யோகசுவாமிகளின் நற்சிந்தனையில் இடம்பெறும் மேற்கூறிய மறைமொழிகள் நான்கையும் மஹாவாக்கியங்கள் என்றும், யோகசுவாமிகள் கூறும் ஏனைய அமுத மொழிகளை "நற்சிந்தனை" என்றும் வழங்குவது ஈழத்துச் சைவர்களின் ஆத்மீக மரபாக உள்ளது. இதில் யோகர்சுவாமிகளின் குருபக்தி மகோன்னதமாகத் தெரிகின்றது.

செல்லப்பா சுவாமிகள் அருளிய மஹாவாக்கியங்கள் விவரணம் ஒன்றுமில்லாமல் யோகர் நற்சிந்தனையில் பல இடங்களில் மகாமந்திரங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பொருள் என்ன? என்பது சொல்லமுடியாதவை. விவரிக்க இயலாதவை. இதனை யோகசுவாமிகளே,

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

"செப்ப முடியாதடி தங்கமே தங்கம்
செல்லப்பன் திருவாக்கு தங்கமே தங்கம்"

என்று மொழிந்துள்ளார். யோகரே செப்ப முடியாதென்று கூறிய மஹாவாக்கியத்தை நாம் செப்பலாம் என்று நினைப்பதே எப்பவோ முடிந்த காரியமாகும்.

செல்லப்பா சுவாமிகள் அருளிய மஹாவாக்கியங்களுக்கு ஓர் மாபாடியம் போன்று "யோகர் நற்சிந்தனை" விளங்கு கின்றது. சைவசித்தாந்த முதல்நூலாகக் கொள்ளப்படும் சிவஞானபோதத்தின் திறவுகோலாக சிவஞானமுனிவரின் சிவஞானமாபாடியம் விளங்குவது போல செல்லப்பா சுவாமிகளின் மஹாவாக்கியத் திறவுகோலாக யோகர் நற்சிந்தனை திகழ்கின்றது.

ஆன்மீக மறைஞான மரபில் ஸ்ரீராமகிருஸ்ணருக்கும் சுவாமி விவேகானந்தருக்கும் இடையே இருந்த குருசீட உறவை செல்லப்பா சுவாமிகளுக்கும் யோகசுவாமிகளுக்கும் இடையே காணப்படும் குருசீட உறவுடன் ஒப்பிட்டு இன்புற முடிகின்றது. சுவாமி விவேகானந்தருக்கும் யோகசுவாமிகளுக்கும் திருவடி தீட்சை கிடைத்தமை தவப்பயனாகும்.

மஹாவாக்கியங்கள் மந்திரங்களே

செல்லப்பா சுவாமிகள் அருளிய மற்றும் யோகசுவாமிகள் கூறிய மஹாவாக்கியங்கள் அனைத்தும் "மந்திரங்கள்" என்று போற்றப்படும் சிறப்புக்குரியவை எனலாம். இம் மஹாவாக்கியம் மந்திரம் என்பதை யோகர்சுவாமிகளே, "நாமறியோம் மெனும் நல்ல மந்திரம்" என்று மொழிகின்றார்.

"மனனம் செய்தால் எது காப்பாற்றுகிறதோ அதுவே மந்திரம்" எனப்படும். இதுவே , "மனனாத் த்ராயதே இதி மந்த்ர" என்று மந்திரத்திற்கு வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது. "த்ராணம்" என்பதற்கு காப்பாற்றுவது என்பது பொருளாகும். இதுவே பகவத் கீதையில் "பரித் ராணாய ஸாதூனாம்" என்று வருகின்றது. இதற்கு நல்லவர்களைக் காப்பாற்றுதல் என்பது அர்த்தமாகும். இவ்வகையில் யோகர் கூறும் மஹாவாக்கியங்களால் எமக்கு நல்ல பாதுகாப்பு ஏற்படும் எனலாம்.

"மனனம் செய்தல்" என்றால் மனத்திற்குள் மானசீகமாக நினைப்பது மட்டும் அர்த்தமன்று. மனத்திற்குள் மனனமாக , மானசீகமாக நினைப்பது வாக்கில் வாசிகமாக வெளிவரலாம். இன்னொரு நிலை காயத்தில் காரியமாக ஒரு கர்மாவோடு சம்பந்தப்பட்டும் வெளிவரலாம். இவ்வாறாக மந்திரமயமாக விளங்கும் மஹாவாக்கியங்களை அல்லும் பகலும் நினைத்தும் வாழ்த்தியும் வழிபட்டும் வந்தால் எமக்கு என்றும் உய்தி உண்டு என்று நம்பலாம்.

முழுதும் உண்மை : இம்மகா வாக்கியம் செல்லப்பா சுவாமிகள் யோகசுவாமிகளுக்கு அருளியதாகும். இதனை யோகசுவாமிகளே,

"முழுவதும் உண்மை என மொழிந்தான் முன்னாள்
வழுவில் செல்லப்பன் மதி"

"முழுதும் உண்மை என்று முனிவனவன் சொன்னான்
எழுதமுடியாததை"

"முழுவதும் உண்மை என்று மோனமுனி சொன்னானன்று"

என்று மொழிதலாலறியலாம். செல்லப்பா சுவாமிகள் அருளிய யோகர்சுவாமிகள் கூறும் இம் மஹாவாக்கியத்தின் மூலமானது,

"அதுவும் பூரணம் இதுவும் பூரணம்
பூரணத்திலிருந்து பூரணம் தோன்றியுள்ளது
பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்ததும் பின்
எஞ்சுவதும் பூரணம்"

என்னும் உபநிடத வாக்கியத்தில் அமைந்திருப்பது நோக்கத்தக்கது. முழுதும் உண்மை

எனும்புலப்பாடுசத்தியசொரூபதரிசனமாகும். யோகசுவாமிகள் கூறும் "முழுதும் உண்மை" எனும் தரிசனத்தை "அநுபூதி" என்று குறிப்பிடுதலே பொருத்தம்.

மேலும், யோகசுவாமிகள் கைப்பட எழுதிய கடிதமொன்றில், "நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆன்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது" என்று குறிப்பிடுவது நோக்கற்பாலதாகவுள்ளது. இக் கடிதத்தில் அவர் எழுதியுள்ள "இந்த உண்மை" என்பதே "முழுதும் உண்மை" எனும் மஹாவாக்கியத்தின் விளக்கமாக உள்ளது. அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று ... எனும் சிவஞானபோத சூத்திரவரி இங்கே நினைவுகூரப்பாலது.

ஒரு பொல்லாப்பும் இல்லை

"ஒரு பொல்லாப்பும் இல்லை" என்னும் மஹாவாக்கியம் மறைபொருள் நிறைந்த மறைஞான வாக்கியமாகும். இம் மஹாவாக்கியம் உணர்த்தும் அர்த்தங்கள் பலவாகும். இறையருள் கைவரப்பெற்ற அநுபூதியாளர்களால் மட்டுமே அதன் உண்மைப்பொருளை உணரமுடியும்.

இம் மஹாவாக்கியம் செல்லப்பா சுவாமிகளால் யோகசுவாமிகளுக்கு அருளப்பட்டதாகும். இதனை யோகர் சுவாமிகள்,

"ஒரு பொல்லாப்புமில்லையென்றே யுரைத்தான்
திருவாளன் செல்லப்பன் தேர்" எனவும்,

"செல்லப்பன் என்னும் திருவுடையான் தேரடியில்
பொல்லாப்பில்லை யென்றான் போற்று" எனவும்,

"ஒருபொல்லாப்புமில்லை யென்பான் ஆசானவன்
உன்மத்தன் போற்றிரிவான் கூசான்" எனவும்

"ஒருபொல்லாப்பும் இல்லை என்றுரைத்தோய்" எனவும்

"ஒருபொல்லாப்பும் இல்லையென்றுரைத்தவன்
திருவடி தனை சிந்தை மறக்குமோ" என்றும்

"ஒருபொல்லாப்புமில்லையென்றே உரைத்தான்
உண்மைமுழுவதுமென்றாபன் - கிளியே
ஊமைபோல் இருந்தானடி" என்றும், மொழிதலால் அறியலாம்.

"ஒருபொல்லாப்புமில்லை" என்பதன் விளக்கத்தை யோகசுவாமிகள் மேலும்,

"ஒருபொல்லாப்புமில்லையென்ற வாக்கு
உணர்ந்துணர்ந்து இன்பத்தில் தேக்கு
கருமத்தில் கையைநீ வைத்து
கடமையை பயமின்றி ஆக்கு" என்றும்,

"ஒருபொல்லாப்புமில்லைனென்றோதும் திருவாக்கால்
உருகியுருகி உணர்வற் - றிருநிலத்தில்
இன்பதுன்பமென்னுமவை யென்றுமொப்பாந் தன்மை கண்டேன்

என்னப்பன் செல்லப்பன்னென்று" என்றும்,

"ஒருபொல்லாப்புமில்லை யுணர்வீரே
ஓம் சிவாயநமவென தொழுவீரே
உருகியுருகி இன்பம் பெறுவீரே
உறுதிமொழி யிதனை அறிவீரே"

என்றும் கூறுவது நயக்கத்தக்கதாகவுள்ளது.

பொல்லாப்பு – விளக்கம்

"பொல்லாப்பு" எனும் சொல் மறைபொருள் கொண்டது. பொல்லாமை, பொல்லாங்கு, மனஸ்தாபம், துன்பம், தீது, குற்றம், ஈனம், தீங்கு, கேடு, கொடுமை எனப் பல பொருள்களை இச்சொல் சுட்டி நிற்கின்றது. இதனடிப்படையில் நோக்குகின்றபோது, "ஒரு பொல்லாப்புமில்லை" என்ற மஹாவாக்கியமானது ஒரு துன்பமுமில்லை, ஒரு தீங்குமில்லை, ஒரு குற்றமுமில்லை, ஒரு கேடுமில்லை, ஒரு கொடுமையுமில்லை, ஒரு மனஸ்தாபமுமில்லை என்பதைச் சுட்டி நிற்பதாகக் கொள்ளலாம். எப்பொழுதும் இன்பமாக இருக்கவேண்டும் என்பதையே எதிர்மறையாக "ஒரு பொல்லாப்புமில்லை" எனும் சொல் சுட்டி நிற்கின்றது. இதனையே உபநிடத மஹாவாக்கியங்கள் "நேதி நேதி" என்று எதிர்மறையாகக் குறிப்பிடுகின்றன.

ஒருபொல்லாப்புமில்லையென்பதற்கு "இன்பமேயெந் நாளும்! துன்பமில்லை!!" என்பது அர்த்தமாகும். இதனையே யோகர் "இன்பமேயல்லாமல் துன்பம் நமக்கில்லை" என்று மொழிந்துள்ளார். இதனையே "நன்றுடையானை தீயதில்லானை:" என்கின்றார் அப்பர் சுவாமிகள். "ஒரு பொல்லாப்புமில்லை" எனும் மகாவாக்கியம் ஒரு மருந்து போன்றது. இதனை யோகசுவாமிகள்,

"ஒரு பொல்லாப்பு மில்லை என்ற மருந்து
இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து" என்று மொழிதலாலறியலாம்.

எப்பவோ முடிந்த காரியம்

சைவசித்தாந்தத்தின் அடிப்படைக்கொள்கைகளான வினைக்கோட்பாடு மற்றும் சத்காரியவாதக்கோட்பாடு என்பவற்றையே யோகசுவாமிகள் "எப்பவோ முடிந்த காரியம்" என்று மஹாவாக்கியத்தில் குறிப்பிடுகின்றார். உள்ளதுதான் வரும் இல்லாதது வராது. இல்லாததை உருவாக்க இறைவனாலும் முடியாது. காரண நிலையிலும் காரியம் உண்டு. இவைதான் சத்காரியவாதத்தின் விளக்கம். இந்த விளக்கத்தைச் சுட்டி நிற்கும் மறைஞான வாக்கியமே "எப்பவோ முடிந்த காரியம்" ஆகும்.

"எப்பவோ முடிந்த காரியம்" என்னும் மஹாவாக்கியத்தின் விளக்கத்தை யோகர் நற்சிந்தனை விளக்கி நிற்கின்றது. யோகசுவாமிகள் காசியில் இருந்து எழுதிய கடிதமொன்றில் கீழ்வருமாறு காணப்படுபவை எப்பவோ முடிந்த காரியம் என்பதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகவுள்ளது.

"...இருந்த இருக்கின்ற இருக்கும் யாழ்ப்பாணத்தார் எல்லாருக்குமாக கருமாதிகள் எல்லாம் செய்துமுடிந்துவிட்டனர்" கருமாதிகள் மட்டுமன்றி கண்ணிமைப்பது வரை யாவும் எப்பவோ முடிந்த காரியம் எனலாம்.

"எப்பவோ முடிந்ததடி தங்கமே தங்கம்
ஏகாந்தமாயிரடி தங்கமே தங்கம்"

என்பது யோகசுவாமிகள் கூறும் நற்சிந்தனையாகும்.

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

இறைவனுக்கும் எமக்குமுள்ள உறவு எப்பவோ முடிந்த காரியமாகும். இறைவனுக்கும் எமக்குமுள்ள உண்மையான உறவை அறிந்துணர்ந்து சுத்த அத்துவித பேரின்பத்தை அனுபவிப்பதே "எப்பவோ முடிந்த காரியம்" எனும் மஹாவாக்கியத்தின் உண்மைப் பொருளாகும். இதனை யோகசுவாமிகள்,

"எப்பவோ முடிந்ததென எனக்குபதேசஞ் செய்த
ஒப்பிலா மாமணியே யுறவோனே கண்வளராய்"
"எப்பவோ முடிந்ததென எந்தை குருநாதன்
செப்பும் திருவாக்கின் சீர்தருவாய் பராபரமே"

என்று மொழிவர்.

"திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன" - இது எப்பவோ முடிந்த காரியம். ஒருவருக்கு இன்றுதான் திருமணம் நிகழ்ந்ததாக எண்ணுகின்றோம். உண்மையதுவல்ல. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பதால் அது எப்பவோ முடிந்த காரியம் என்பது தெளிவு.

நாம் இன்று இந்த நிலையில் இருப்பதற்கு நாமே காரணம். இன்று நாம் இந்த நிலையில் இருப்பதற்கு நேற்று நாம் எப்படி இருந்தோம் என்பதும், நாளை நாம் எப்படி இருப்போம் என்பதற்கு இன்று நாம் எப்படி வாழ்கின்றோம் என்பது அடிப்படையாகும். இதனையே வினைக்கோட்பாடு புலப்படுத்தி நிற்கின்றது. இந்த வினைக்கோட்பாட்டின் அடிப்படையில்தான் சிலர் மூளையாகவும், சிலர் கோளையாகவும், சிலர் ஏழையாகவும் விளங்குகின்றனர். எல்லாம் எப்பவோ முடிந்த காரியம் என்பதை உணர்ந்து கொண்டால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை. ஒரு பொல்லாப்பும் இல்லை.

நாம் அறியோம்

செல்லப்பா சுவாமிகள் கடைசியாகச் சொன்ன மஹாவாக்கியம் "நாம் ஒன்றும் அறியோம்" என்பதாகும். செல்லப்பா சுவாமிகள் இதனை யோகசுவாமிகளுக்கு உரைத்ததை யோகர்,

"நாமறியோம் என்னும் நல்வாக்கு நல்கினான்
சேமநிதி செல்லப்பன் தேர்" என்றும்
"நாமறியோம் என்னும் நறிய திருவாக்குச்
சேமமுறச் சொன்னான் தெரி"

என்றும் கூறுகின்றார். இதனை மேலும் விளக்கவே யோகர்,

"ஆரறிவார் ரென்ன வுரைத்த வென்னாசானாம்
பாரறியா செல்லப்பன் பார்"

என்றும் மொழிந்துள்ளார்.

"நாம் அறிவோம் என்று அறிவதே முடிந்த முடிவு. எல்லாவற்றையும் கடந்த பின்பு நீ அந்நிலைக்கு வருவாய்" என்றும்,

"எல்லாம் கனவு. நான் கனவு காண்கிறேன். இங்கு எல்லோரும் கனவு காண்கிறாகள். எல்லாம் கானல் நீர்" என்றும் மேலும் யோகர் விளக்குகின்றார்.

இறைவனையோ இறைவனை அறியும் நெறியையோ நாம் அறியோம் என்பது யோகர் வாய்மொழி.

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

"நாம் ஏன் அறியோம்" எனில் அறிவதற்கு ஒன்றுமில்லை யாதலால் நாம் அறியோம் என்பதே யோகர் கூறும் விளக்கமாகும். இதனை மேலும் விளக்க,

"ஒருவரும் அறியாரென்றான் எங்கள் குருநாதன்
ஓம்கார வழியென்றான் எங்கள் குருநாதன்"

என்று யோகசுவாமிகள் மொழிந்துள்ளார்.

"தருமம் என்று ஒரு பொருள் உளது" எனும் மகாவாக்கியம் கச்சியப்பருடையது. "தருமநெறியிற் பிசகாதே" என்பது சைவவாழ்வியலுக்கு யோகசுவாமிகள் கூறும் மகா வாக்கிய மருந்தாகும். "தருமநெறியிற் பிசகாதே" எனும் மகாவாக்கியம் யோகசுவாமிகளுடையது. இவ்வாறாக யோகசுவாமிகள் கூறும் ஆன்மீகப் போதனைகளும், மகா வாக்கியங்களும் வையத்துள் வாழ்வாங்குவாழ வழிகாட்டும் தெய்வீக ஒளடதங்களாக என்றும் திகழும் என்று உறுதியாகக் கூறலாம்.

துணை நூல்கள்

1. சிவன் அடியான்,1987, உயிர்க்குயிர்க் கடவுளாகிய சிவயோக சுவாமிகள், செட்டியார் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
2. சிவயோகசுவாமிகள், 2009, நற்சிந்தனை, சிவதொண்டன் சபை வெளியீடு, யாழ்ப்பாணம்.
3. சிவதொண்டர், 1991, யாழ்ப்பாணம் யோகசுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும், சிவதொண்டன் நிலையம், செங்கலடி.
4. செல்லத்துரை, அ. (தொ.ஆ.), 1986, எங்கள் ஆசான் அருள்மொழிகள், சிவதொண்டன் நிலையம், செங்கலடி.
5. வைரமுத்து,மு., 1998, என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியார் - யோகசுவாமி, சிவதொண்டன் சபை வெளியீடு, யாழ்ப்பாணம்.

நல்லூரான் திருவடியைப் போற்றும் யோகர் சுவாமிகள்

நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே!
இரவு பகல் காணேனடி

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனடி – கிளியே!
நல்லூரான் தஞ்சமடி

தேவர் சிறை மீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி – கிளியே!
கவலையெல்லாம் போகுமடி

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் -கிளியே
காவல் அறிந்திடெடி

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி – கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாலெடி – கிளியே!
பொல்லாங்கு தீருமெடி

குருநாதனைப் போற்றும் யோகர் சுவாமிகள்

கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்
வருத்தமெலாந் தீர்க்கும் வடிவேல் - திருத்தலத்தில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
ஆரடாநீ யென்றான் அவன்.

தன்னை யறியத் தவமுஞற்றும் மாதவரை
அன்னையைப்போ லாதரிக்கு மாறுமுகன் - சந்நிதியில்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தேரடாவுள் ளென்றான் சிரித்து.

வண்டுபண் செய்யும் வளம்பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் - கொண்டுவரும்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடாபற் றென்றான் சிரித்து.

கன்னலொடு செந்நெல் கதலிபலா மாவர்க்கந்
துன்னு நல்லூர்ச் சாமி திருமுன்றில்-மன்னுசீர்த்
தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
சீரடியார் சூழ்ந்துநின்றார் தேர்.

அயலறியா வந்தணர்க ளான்றநல் லூர்ப்பதியிற்
கயற்கணார் காமவலை சேரா-வியல்புடைய
செல்லப்ப னென்னுஞ் சிவகுருவை நான் கண்டேன்
நல்லதப்பா வென்றான் நயந்து.

ஒன்றோ விரண்டோ வொருமூன்றோ வென்றெவரும்
அன்றுதொட் டின்றுவரை யாராய - ஒன்றுக்கும்
எட்டாமல் நின்றா னெழிற்குருவாய் நல்லூரிற்
பட்டமளித் தானெனக்குப் பார்.

மாமன்றத்தின் ஏற்பாட்டில் 2015.03.07ஆம் திகதி நடந்த சிந்தனைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரை

சிவதொண்டு ஆற்றுவதே சிவனடியார்களின் தொழில் என்பதை உணர்த்திய ஆன்மீகஞானி

திருமதி. எஸ். கேசவன் B.A.(Hons), P.G.D.E,M.A. (Distintion,India), Phd (Scholor, Sri Lanka).
தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

அறிமுகம்

சித்தர் இனம் நீண்ட காலமாக உலகில் வேரூன்றி விழுது பரப்பி வருகின்றது. "மூலன் மரபில் வந்த நான் ஒரு சித்தன்" என பாரதி தன்னை பெருமைப்படுத்துகிறார். காலம் தோறும் ஏற்பட்ட பதிவுகளில் சித்தர்களின் சிந்தனைப்பதிவும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் சித்தர் மரபில் வந்த சிவயோகச்சித்தர் இலங்கையில் மட்டுமல்ல அமெரிக்கா போன்ற பலநாடுகளிலும் பேசப்படும் பெரும் சித்தராவார். ஹவாய் ஆதீன சத்குரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் காலத்தில் 1998இல் இருபது இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கை வாழ் மக்களின் மனதில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய ஒரு ஆன்மீக ஞானியாகவும் திகழ்ந்தவர். அறிவியல் வளர்ச்சி, வேகமான வாழ்க்கைச்சூழல், நாகரிக மாற்றம் போன்றவற்றால் மானுட வாழ்வின் மாற்றங்கள் பல தோன்றியுள்ளன. இதனால் இன்றைக்கு மனக்குழப்பம், சஞ்சலங்கள் வாழ்வியல் பிரச்சனைகள், கவலைகள் சூழ்ந்துள்ளன. இத்தகைய நிலையில் வழிபாடுகளும், சிவதொண்டுகளும் எத்தகைய நலன்களைத் தருகின்றது என்பதனை சமய ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் பல தொண்டுகளைச் செய்துள்ள யோகசுவாமிகளின் சிவதொண்டுகளை சமூகத்திற்கு எடுத்துக் கூறுவதே இவ்வாய்வாளரின் எதிர்பார்ப்பாகும்.

சித்தர்களது இயல்புகள்

சித்தர்களை "அறிவன்" என்றும், "நிறைமொழி மாந்தர்" என்றும் தொல்காப்பியம் குறிப்பிடும். "அவிர்சடைமுனிவர்" என்கிறது புறநானூறு. சித்தர் என்ற வார்த்தை சித்தியில் இருந்து வந்தது. ஆன்மீகத்திலும், அறிவியல் சாதனைகளிலும் முழுமையுற்ற நிலைதான் சித்தி. சித்தம் என்பது புத்தி, மனம். சித்தி - புத்தியால் ஆகிற காரியம். எனவே சித்தர் - புத்தியைக் கட்டுப்படுத்தியவர் சித்தி பெற்றவர் சித்தர். சித்தர்களை ஆன்மிகப் புரட்சியாளர்கள் என்று சொல்வதும் உண்டு. கடவுளுக்குச் சமமாய்ப் போற்றி வணங்கப்பட்டனர்.மனிதரில் மேம்பட்டவர்கள். தவ, யோக, ஞானநிலை கடந்தவர்கள்.

இறைவனுக்கு ஒப்பாக எண்ணப்பட்ட இவர்கள் உடம்பை வளர்த்து, உயிரை வளர்க்கும் உபாயம் அறிந்தவர்கள். "சாகாக்கலை" அறிந்தவர்கள். ஆன்மிகத்தில் உயர்ந்த இடம் அவர்களுடையது. அற்புதங்கள் நிகழ்த்துவது மட்டும் அல்ல பேரானந்தமான இறைவனுடன் இரண்டறக் கலப்பதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் காணும் இடமெல்லாம் கடவுளின் தோற்றம் தெரியும். சித்தரின் சிந்தை எதற்காகவும், எப்போதும், எவ்விடத்தும் கலங்குவதில்லை. ஓரிடத்தில் நிலையாக இருப்பது கிடையாது. உலகெங்கும் யாத்திரை செய்வார்கள். அவர்களை நடமாடும் தெய்வம் எனலாம். மக்களுக்கு நன்மை செய்வதே அவர்களது பயணநோக்கம். தம்மையே நம்பி இருக்கும் பக்தர்களின் துன்பங்களைச் சித்தர்கள் தாமே ஏற்றுக் கொள்வார்கள் அல்லது தமது அருள் மூலம் அவற்றை முற்றும் போக்கிவிடுவார்கள். அவர்களைத் தேடிச் சென்று நன்மை செய்யும் பரந்த மனம், வார்த்தை, ஸ்பரிசம் போலவே அவர்களுடைய பார்வைக்கும் வலிமை உண்டு.

இவர்கள் அனுபவம், ஆற்றல் எல்லாவற்றுக்கும் மேலாக இறையருள் இருந்தது. உயர்ந்த சிந்தனை உடையவர்கள். எளிய வாழ்க்கைமுறை அவர்களுடையது. அதனால்தான் அவர்களுடைய வாக்கு பலித்தது, காரியசித்தியில் அவர்களால் பெரும் புகழ் பெறமுடிந்தது. ஒரு பொருளை இன்னொரு பொருளாக மாற்றுவது (Transulstantiation) உருமாறுவதும் சித்தர் சாதனையில் முக்கியமானவை யாகும். இவர்கள் தமது வல்லமையால் பொருட்களை உருவாக்கவும், வரவழைக்கவும் செய்வார்கள். அவர்களுக்கு இது எளிய செயல். தமது உள்ளத்தில் எண்ணும் எதையும் அவர்களால் செய்ய இயலும். உயிருள்ளனவற்றையும் அவர்கள் தமது சக்தியால் வரவழைப்பர். உயிரற்ற மனித உடலுக்கு உயிர்கொடுப்பர். படைத்தல் இவர்களுக்குக் கைவந்த கலை. உயிர்ப் பொருளைப் படைப்பது, உயிரற்ற பொருளை உண்டாக்குவது, உயிரற்ற அல்லது உயிர்பொருளை வேறொன்றாக மாற்றுவது என செய்யவல்லவர்கள் தன்னை அறிவது ஆன்மிகம் என்பார்கள். சித்தர்களைப் பொறுத்தவரை தன்னை அறிந்ததோடு அந்த விண்ணையும் இந்த மண்ணையும் அறிந்து தெளிந்தார்கள். தாங்கள் கண்டு தெளிந்த உண்மைகளை நமக்காக விட்டுச் சென்றார்கள்.

சித்தர்கள் கண்ணுக்கு உலகமே சக்தியின் வியாபகம். வேதவாக்கிய உண்மையை பரவெளியில் நிறுவி வைத்தனர். சித்தர்கள். "அண்டத்துக்கு ஒத்ததெல்லாம் பிண்டத்துக்கும் ஒக்கும்". பிண்டத்து ஆத்மாவாகவுள்ளது தானே அண்டத்து ஆத்மாவாகிய அவன் என்ற பேருண்மை புரிந்ததால்தான் சித்தர்கள் பார்க்கும் பொருளில் இறையே என்ற நோக்கு சித்தர்களுடையது. விந்தைகள் நிறைந்தது தான் வாழ்க்கை. வாழுங்காலத்தில் அவர்கள் தன்னலமற்று வாழப் பழகிக் கொண்டவர்கள். சித்தர்கள்

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

ஆரோக்கியமான அறநெறி வாழ்க்கை வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்க்கை விசித்திர மானது. சாதி பேதத்தைக் கடந்த அந்த யோகிகள், உலகில் உள்ள அத்தனை உயிர்களுக்கு நல்வாழ்வு வாழ வேண்டும் என்று பிரயாசை கொண்டவர்கள்.

யோகர் சுவாமிகள்

யோகர் சுவாமிகள் சித்தமரபில் வந்தபோதும் இவர் சித்தராக மட்டுமன்றி, பக்தராகவும், சிவதொண்டனாகவும் மக்களோடு மக்களாக வாழ்ந்து சிவதொண்டினை அமைதியாக ஆற்றி தன் ஒளிக் கடாட்சத்தைப் பாய்ச்சிவிட்டு சென்ற மகான். இவரிடம் மிகவும் உன்னதமான பிறர் உணர்வுகளைக் கண்டறியும் சக்தி இருந்தது. இதன் மூலம் பல அன்பர்களின் வாழ்வுக்கு வழிகாட்டியாகவும், எடுத்துக்காட்டாகவும் இருந்துள்ளார். பிறெளனி என்ற ஆங்கிலேயர் இவரை "நீர் ஒரு தெய்வீக மனிதர்" (you are a god-fearing man) என்று குறிப்பிட்டுள்ளார். யோகர் சுவாமிகள் நான் சந்தித்த மாபெரும் ஆத்மீகத் தலைவர் என்று ஸ்ரீ திக்கிரி பண்டா திஸ்ஸநாயக்க (காரியதரிசி, இலண்டன் புத்தவிகாரை) எழுதிய கட்டுரை இதனை உணர்த்தும். இவரது வாழ்க்கை வரலாற்றைப் படிப்போருக்கு மெய் சிலிர்க்கும், பயபக்தி ஏற்படும், கடவுள் நம்பிக்கை கூடும். சக மானிடர்களை எவ்வாறு நேசிக்க வேண்டும், நாம் ஏன் பிறந்தோம் - என்ன செய்து கொண்டிருக்கிறோம், இந்த உலகத்தில் எத்தகைய தொண்டினை ஆற்ற வேண்டும் போன்ற இன்னோரன்ன பல விடயங்களுக்கு அருமையான விடயங்கள் எமக்கு கிடைக்கும்.

சிவதொண்டிற்கு தூண்டுகோல்களாய் அமைந்த நூல்களும் அநுபவங்களும்

யோகர்சுவாமிகள் வேதங்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, திருமுறைகள், ஔவையார் பாடல்கள், திருக்குர் ஆன், விவிலிய வசனங்கள் (ஒரு சிலவற்றையும்) போன்ற பல நூல்களைக் கற்றதோடு, தனது குருவான செல்லப்பா சுவாமிகளிடம் நேரடியாக பெற்ற அநுபவங்களும், விவேகானந்தரின் சொற்பொழிவுகளை கேட்டமையும் (சுவாமி விவேகானந்தர் பல தடவைகள் 'விடயம் பெரிது நேரமோ குறுகியது' (The subject is large but the time is short) என்று அன்பர்களுக்குக் கூறியுள்ளார். இக்கருத்து யோகர் சுவாமிகளுக்கும் ஞான நாட்டத்தையும் அதன்மூலம் சிவதொண்டினை ஆற்றும் செயலினையும் ஏற்படுத்தியிருக்க வேண்டும்.) இவர் மனதைத் தொட்டிருக்கின்றன என்பதை இவரது வாழ்க்கை வரலாறுகளின் மூலம் அறிய முடிகிறது. இத்தகைய இந்துமத பல நூல்களும், அநுபவங்களும் சுவாமிகளை சிவதொண்டினை ஆற்றுதற்கு தூண்டுதலாக அமைந்தன.

ஒரு தடவை சுவாமிகளைச் சூழ்ந்த திருக்கூட்டமானது,

"தொண்டர்காள் தூசிசெல்லீர் பக்தர்காள் சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோம் நாம் அல்லற்படை வராமே"
(திருவாசகம்)

என்ற வகையில் தொண்டர்கள், பக்தர்கள், யோகியர், சித்தர்கள், ஞானிகள் அனைவரையும் சேர்த்துக் கொண்டு இவ்வுலகை சிவலோகமாகக் காணச்செய்யும் முனைப்போடு சிவதொண்டிலே ஈடுபட்டார். அத்துடன் இவரது திருவாய்மொழிகள் "நற்சிந்தனை" எனும் நூலுருவம் பெற்றது.

சிவதொண்டு – சொல் விளக்கமும், சிறப்பும்.

சிவதொண்டை இரு வகைப்படுத்துவோர் ஆன்றோர்.

1. சிவனுக்கு ஆற்றும் தொண்டு.
2. சிவனின்அடியார்களுக்கு ஆற்றும் தொண்டு.

இறைவன் நமது செயல்களை எல்லாம் உடனிருந்து அறிகிறார் எனும் அனுபவத்தின் மூலம் அன்பே சிவம் (எல்லோரிடத்தும் அன்பாய் இரு)என நினைத்து தமது தொண்டினை மேற்கொண்டுள்ளார். "நாங்கள் சிவனடியார்கள். எங்களுக்கு ஒரு குறையுமில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம். சூரியன் தனது கடமையைச் செய்கிறது. சந்திரன் தனது கடமையைச் செய்கிறது. அவை ஏதாயினும் பயன் கருதுகின்றனவா? அது போல் நீயும் பயன் கருதாது கடமையைச் செய்" என்றார். இப்பேர்ப்பட்ட சிவதொண்டினையே சுவாமிகள் மக்களுக்கு ஊட்டியுள்ளார்.

"தேவர்களும் அசுரர்களும் கின்னரர், கிம்புருடர், வித்யாதரர்களும் அப்படியே தொண்டாற்றி வருகின்றனர். அனைத்தும் சிவன் செயல், அவனன்றி அணுவும் அசையாது. நாம் இழந்து போவதுமொன்று மில்லை. ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இருந்தபடியே இருக்கின்றோம். உயர்வு, தாழ்வு இன்றி எல்லா உயிர்களுக்கும் பணி செய்வதே மக்கள் கடமை என்றும் போதித்து, "சிவதொண்டு செய்தல் செகத்தில் சரியை" என்றார்.

"பணிதலைக் கொள்ளல் பாரினில் இன்பம்
பணி பயன் கருதா தாற்றிட லின்பம்
பணி முயன்றாற்றி முற்றுதல் இன்பம்"

என்ற வகையில் அவரின் பணிகள் அமைந்தன.

"அண்ட பிண்டமெங்கும்
அதுவெனக் கண்டு தொண்டு செய்வது தகுதி"

என்ற பாடலடிகள் வாயிலாக "எல்லாம் சிவரூபம் - யாவும் சிவதொண்டாற்றுகின்றன. யானும் என் தொண்டைச் செய்கின்றேன். யார் யாருக்கு எந்தெந்த வேலை கொடுக்கப்படுகிறதோ அது ஆண்டவனுக்கு காணிக்கை என்ற உளப்பாங்குடன் செய்வதே சிவதொண்டு" என்கிறார். பகவத்கீதை "கடமையை செய், பலனை எதிர்பாராதே"..... என்று கூறியுள்ளதற்கிணங்க செயற்பட்டவர் சுவாமிகள்.

பணியை முடிப்பதை விட பணிசெய்யும் மனப்பாங்கு முக்கியமானது என்பார். சிவதொண்டன் நிலையத்தில் ஓர் அன்பர் தனியாக தரை, தியான மண்டபம், திண்ணை, புராண மண்டபம் என்பவற்றையும் தூய்மைப்படுத்தியபோது சுவாமிகள், "வேலையில் மாளப்படாது" என்றார். வேலையைப் பூரணமாக்குவதிலும் விட, தன்னை பூரணனாக்குவதற்கு வேலையை ஒரு சாதகமாகக் கொள்ள வேண்டும் என்பதே சுவாமியின் கருத்தாக உள்ளது.

இன்று சிலர் பிழையாக சம்பாதித்த மோசடிப்பணம் என்பவற்றைக் கொண்டு ஆலயங்களைக் கட்டுதல் போன்ற பணிகளைச் செய்கின்றனர். இவை சிவதொண்டல்ல. தொண்டின் மறைவில் கரவுடை நெஞ்சம் ஒளிந்திருக்கு மாயின் அது கள்ளத் தொண்டாகி விடும் என்கிறார்.

சிவதொண்டன் – சொல் விளக்கம்

20ஆம் நூற்றாண்டில் எம்மவரோடு வாழ்ந்து சிவதொண்டு புரிந்தவர் யோகர் சுவாமிகள். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் சிவதொண்டுகளை ஆற்றி வந்த சுவாமிகளே சிவதொண்டன் என்பதற்கு வரைவிலக்கணம் சொல்கிறார். "சிவதொண்டன் என்றால் சிவனுக்கு அடியவன். சிவ தொண்டன் செய்யும் தொழிலெல்லாம் சிவனுக்குப் பூசையாகும். சிவம் செய்யும் தொழிலுக்கு உதவியாக இருந்து தொழில் புரிபவன் சிவதொண்டன்".

மற்றையது தான் செய்யும் பணி அனைத்தையும் சிவசக்திக்கென்று அர்ப்பணிப்பவன் சிவதொண்டன். ஒருவன் கருமம் செய்யும் போது பயன்கருதாது செய்தல் வேண்டும். இது புதுக் கருத்தல்ல. பகவத்கீதை இதையே கூறுகிறது. நீ வளர்ந்த பின் இந்நூலைப் படித்து பயன் அடைவாய் என நம்பு. செயல் எல்லாவற்றையும் இறைவனுக்கே காணிக்கையாக்கும் யோகம் புரிபவர் அவர். ஒரு செயலை ஊதியம் கருதிச் செய்யும் போது அது தொழிலாகின்றது. அதனையே தன்னலமின்றிப் பிறர் நலங்கருதிச் செய்யும்போது அதுவே தொண்டாகின்றது. அதனை, விருப்பு வெறுப்பின்றி நிஷ்காமியமாக, இறை அர்ப்பணமாக்கும் போது யோகமாகிறது. இதுவே கர்ம யோகமாகும். எனவே தொழில்வேறு, தொண்டுவேறு, யோகம்வேறு என்கிறார். இதனை உணர்ந்தவன் சிவதொண்டன் என்கிறார்.

சிவதொண்டும், சிவதொண்டனும்

சிவதொண்டில் முதற்படி - குருபரனைப் போற்றி வணங்குதல், குருவைப் போற்றுதல். அவரே குரு - சீடன் முறைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். சுவாமிகள் குருவின் உபதேசங்களை அவதானமாய்க் கேட்டு அதன்படி தனது தொண்டுகளை முன்னெடுத்தார். தான் குருவினால் ஆட்கொண்ட முறையை மேல்வரும் பாடலில் குறிப்பிடுகிறார்.

"இருவருந் தேடிக் காணாத இறைவன் என்போல்
உருத்தாங்கி
இனங்கி யெவரும் வணங்கும் நல்லையில் இன்னான்
இவனென்ன.."

என்று கூறுகிறார்.

"குருபரன் அடியினை ஏத்துதல் இன்பம்
குருபரன் சரண்புகக் கூடிடும் இன்பமே..."

என்ற பாடலில் குருவின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகிறார்.சோல்பரி பிரபுவின் மகன் "சந்தசுவாமி" என்பவர் மனச் சாந்தியை தேடிச் சென்று இறுதியில் சுவாமியிடம் ஆத்மஞானத்தைப் பெற்றதோடு சந்தசுவாமி என்ற தீட்சாநாமத்தையும் பெற்றார். எனவே யோகர் சுவாமிகள் மூலம் குருசீட உறவும் வளர்ந்தது.

"பணிதலைக் கொள்ளல் பாரினி லின்பம்
பணிபயன் கருதா தாற்றிட லின்பம்
பணிமுயன் றாற்றி முற்றுற லின்பம்
பணியெலாஞ் சிவபணி யாக்கிட லின்பம்
பாமர மக்கட் பணிசெயல் இன்பம்
தோமற அவர்வாழ் வுயர்த்துதல் இன்பம்.."

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

என்று சிவதொண்டின் மகிமை பற்றி சுவாமிகள் நற்சிந்தனையில் குறிப்பிட்டுள்ளார்.

"நாங்கள் சிவனடியார். எதை நீ பாவனை செய்கிறாயோ அது நீயாவாய். இதற்கெல்லாம் விடாமுயற்சி அதாவது சலியாமை வேண்டும். பாடுபட அஞ்சுபவனுக்கு ஒரு பிரயோசனமுண்டாகாது, காரியசித்தி எய்தும் வரையும் விடாமுயற்சி செய். நீ ஏன் ஓயாமல் கெட்ட காரியங்களைச் சிந்திக்கிறாய்? அச்சிந்தனையை விட்டு முழு மனத்தோடு தெய்வத்தை வணங்கு. அது அப்படியுள்ள காரியம் என்பதைச் சதா நெஞ்சிற் பதித்துக்கொண்டு, இயல்பாய் உனக்கு வரும் வேலைகளையும், கடமைகளையும் செய்து கொண்டிரு. அல்லது அவற்றை விட்டிரு. எதுவும் சரியே. ஆணவந்தன்னை அழித்தவர்களே சிவனடியார்கள்" என்றும் குறிப்பிடுகிறார்.

இவர் மேற்கொண்டுள்ள பணிகளைப் பார்க்கின்ற போது இவர் ஒரு சித்தரா? ஞானியா? யோகியா என எண்ணத் தோன்றுகின்றது. சுவாமிகளின் மற்றொரு தோற்றமே சிவதொண்டன் என கருதப்படுகிறது. இவர் சிவதொண்டினைச் சிவனடியாரை உபசரிப்பது போலவே செய்துவந்துள்ளார். சிவதொண்டினை போற்ற வேண்டியதும் எமது கடமை என்கிறார். இதனை நற்சிந்தனையில்,

"சிவநெறி வழுவாச் சிவதொண்ட னென்பவன்
பருவரு டத்துப் பன்னுமார் கழிமதி"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

சிவதொண்டு ஆற்றுவதே சிவனடியார்களின் தொழில் சுவாமிகள் உலகத்திற்கு, உலகம் உய்ய விட்டுச் சென்ற பணிகளை இரண்டு வகையாக நாம் நோக்கலாம்.

1. சமயரீதியில் மேற்கொண்ட சிவதொண்டுகள்
2. சமுதாய ரீதியில் மேற்கொண்ட சிவதொண்டுகள்.

சமய ரீதியான சிவதொண்டுகள்

1. சிவதொண்டன் நிலையங்களை உருவாக்கியமை

தனது பணிகளைச் செவ்வனே செய்வதற்கு ஏற்ற வகையில் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் சிவதொண்டன் நிலையங்களை நிறுவினார். "சும்மா இருந்து கொண்டு செயல் செய்தல்" இவரது கோட்பாடு. கையில் ஒரு சதக் காசும் வைத்திருக்க மாட்டார். ஆனால் பெருஞ் செலவில் சிவதொண்டன் நிலையங்கள் உருவாகின. யாவும் அவர் மகிமையாலே நடந்தேறின. திருத்தொண்டு செய்வோர்களுக்கு பெரும் சன்மானமளித்துச் சிறப்புச் செய்தல் வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறாக அவர் தனது நிலையத்தில் பல பணிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. தானத்தில் சிறந்தது கல்வித்தானம் என்றார். அதனிலும் சிறந்தது சொர்ணதானம். இவற்றிலும் சிறந்தது வஸ்திர தானம் என்று கூறி தனது வேட்டியைக் கொடுத்த ஆத்மீக ஞானி. இச்செயல் சுவாமியின் தொண்டு மனப்பான்மையின் உச்சத்தைக் காட்டுகிறது. சிவதொண்டன் நிலையத்தினூடாக சுவாமிகள் ஞானதானம், வித்தியாதானம் போன்றவற்றை மேற்கொண்டார். அதாவது வறிய குழந்தைகளின் கல்விக்கு உதவி செய்தது, மேற்படிப்பு படிக்க விரும்பும்

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

மாணவர்களையும் வெளிநாடு சென்று கல்விகற்கும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது சிவதொண்டன் நிலையம் பசித்தோருக்கு பசியாறவும் கருமம் ஆற்றியது. குறிப்பாக மாதந்தோறும் வரும் ஆயிலிய நாள், திருவாதிரை, சிவராத்திரி முதலாய விழா நாள்களில் அன்னதானம் வழங்கப்படும் முறையை உருவாக்கிய மகா ஞானி.

சிவதொண்டன் நிலையத்திற்கு வரும் அனைவரையும் வரவேற்று உபசரிக்கும் வழக்கமும் காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட மாணவர் இல்லத்திற்கு முதன் முதல் நன்கொடைகளை வழங்கிய ஞானி.

தான் வைத்திருந்த காசை எல்லோருக்கும் பங்கிட்டு தான் ஒரு சதமேனும் வைத்திருக்க மாட்டார். சுவாமியின் பற்றற்ற பணியாக சிவதொண்டன் நிலையத்தை அமைத்தமை விளங்குகிறது. ஆயினும் அந்நிலையம் தனது என்ற பற்று எப்போதும் இருந்ததில்லை. சுவாமிகள் நிறுவிய சிவதொண்டன் நிலையங்களில் சைவ சமய முறைப்படி இக்காலத்துக்குப் பொருந்திய வழிபாட்டுமுறைகள் பேணப்பட்டு வருகின்றன. அவர் எழுத்துக்களிலும் சிவதொண்டன் இதழிலும் இக்கோட்பாடு வலியுறுத்தப் பட்டு வந்துள்ளது.

2. திருமுறை வகுப்புக்கள்

சிவதொண்டன் நிலையத்தினூடாக சமய விழாக்கள், சைவசிந்தாந்த, வேதாந்த, புராண, திருமுறை வகுப்புக்கள் போன்றவற்றைச் சிறப்புற நடத்தி வந்துள்ளார். தாண்டகம் பாடுவதில் வல்லவரை திருத்தாண்டகம் பாடுமாறும், பண்ணிசை பாடக்கூடியவர்களை தேவாரம், திருவாசகம் பாடுமாறும், தமது நிலையத்தில் உள்ள பக்தர்களையும் ஏனையோரையும் பாடும்படி தூண்டுவார். தமது நிலையத்தில் வெளியிட்ட "சைவத் திருமுறைத்திரட்டு" எனும் நூலிலுள்ள பாடல்கள் சுவாமிகள் பாடியவை யாகும்.

3. புராணபடனம்

சிவதொண்டன் நிலையத்தில் புராணமண்டபம் அமைக்கப்பட்டு புராணப்படிப்பின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தினார். புராணங்களைக் கோயில்களிலும், மடங்களிலும் ஒழுங்காகப் படிக்க வேண்டும் எனவும், கந்தபுராணத்தை ஒழுங்காகப் படித்து வந்தால் துன்பங்கள் மறையும் என்றும், கூறி அவற்றை தொடர்ந்து செய்தும் வந்தார். மகாசிவராத்திரி தினத்தை வருடந்தோறும் ஏற்பாடுகள் செய்து நடத்தியதோடு, அன்றைய தினம், புராணபடனம் ஓதுவதும் சிறப்பாகப் பின்பற்றப்பட்டது. கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் எனும் மூன்று சைவபுராணங்களுள் ஒன்று நிறைவுற்றதும் இன்னொன்று எனும் ஒழுங்கில் ஆண்டு முழுவதும் படிக்கும் வழக்கம் காணப்பட்டது. திருவாதிரை நாளை ஒட்டிய பத்து நாள்களிலும் திருவாதவூரடிகள் புராணப் படிப்பும் இடம்பெற்றது. அத்துடன் சிவபுராணத்தை இலங்கை முழுவதும் பரவச் செய்து சைவசமயத்துக்குப் புதியதொரு மலர்ச்சியைக் கொடுத்த பெருமை சுவாமிகளுக்குரியது. நாள்தோறும் மாலைவேளையில் சிவபுராணம் ஓதப்பட்டு வந்தது. தம்மிடம் வரும் அன்பர் பலரிடம் ஒருநாளைக்கொருமுறை சிவபுராணம் ஓதி வாருங்கள். அது ஒன்றே போதும் என்றார்.

4. சித்தாந்த சாத்திரங்களைக் கற்றல்

சித்தாந்த சாத்திரங்களைச் சைவர்கள் முறையாகக் கற்க வேண்டும் என்பது சுவாமிகளின் விருப்பு. இதற்காக சிவதொண்டன் நிலையத்தில் சித்தாந்தம் தொடர்பான பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டார். சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவதற்கு ஒரு தூதுக்குழுவை இங்கிலாந்துக்கு அனுப்பியமையும் குறிப்பிடத்தக்கது.

5. கோயில் தொண்டுகள்

கோயில் தொண்டுகள் என்ற வகையில் கொழும்புத் துறை ஆச்சிரமத்திற்கு முன்னுள்ள கோயிற் பூந்தோட்டத்திற்கு நீர் ஊற்றுதல், ஆச்சிரம முற்றத்தைக் கூட்டுதல் போன்றவற்றைக் தாமாகவே செய்து உலக மக்களுக்கு முன்னுதாரணமானார்.

ஒருசமயம் யோக சுவாமிகள் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் சுற்றுப்புறங்களைக் கூட்டித் தூய்மைப் படுத்திக் கொண்டிருக்கையில் தன்னை சந்திக்க வந்த வெளியூர்க்காரர்களிடம் 'I am doing a coolies job. Why have you come to see a coolie?' என்று கூறினார். இதன் உட்பொருள் யாதெனில் யான் ஒரு ஆத்மீக சுத்தீகரன், மனித சமுதாயத்திற்கிடையே ஆத்மீக உணர்வுகளை மறைத்திருக்கும் அழுக்குகளை நீக்குபவன் என்பதேயாகும். புறச்சுத்தத்தை சிவதொண்டாய் செய்யும்போது அகச்சுத்தமும் நீங்க வழியேற்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

6. பாதயாத்திரைகளை மேற்கொண்டமை

சிவதொண்டர்கள் அனைவரும் ஒன்று திரண்டு பாதயாத்திரைகளை மேற்கொள்வதற்கும் வழிசமைத்துக் கொடுத்தவர் சுவாமிகளே. ஆண்டுதோறும் நடாத்திய பாத யாத்திரை அவர் செய்த காலத்துக்கேற்ற மாற்றங்களுள் ஒன்றாகும். 23.9.62 முதல் 22-10.62 வரையான ஒரு திங்களில் ஐந்து பாதயாத்திரைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இது சிவதொண்டன் நிலையத்தை மையமாகக் கொண்டே ஏற்படுத்தப்பட்டது. யாத்திரையின் முதற்பொருளாகத் திருவடி திகழ்ந்தது. இதன் போது அவர்கள் பசி, தாகம் போன்றவற்றை பொருட்படுத்தவில்லை. பாதயாத்திரை செல்லும்போது புலனடக்கம் ஏற்பட்டு ஒவ்வொருவரின் சிந்தையும் சிவன்பால் ஈர்க்கப்பட்டு காணப்படும். அடியவர்கள் பலர் தமது வாழ்வில் அமைதியடைவதற்கு சுவாமிகளின் சிந்தனைகளே வழிகோலியது. இது யோகர் சுவாமிகள் தனது சிந்தனையி னூடாக மேற்கொண்ட சிவதொண்டெனலாம்.

7. தியானப் பயிற்சிகள்

தியான மண்டபம் அமைக்கப்பட்டு தியானப் பயிற்சிகளும் இடம்பெற்று வந்தன.

"சிவதொண்டன் நிலையத்திற் சேரீர்
தியானஞ் செய்துகடைத் தேறீர்"

என்று சுவாமிகள் தியானத்தின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறினார். கிளிநொச்சியில் வேலை பார்க்கும்

போது ஓய்வு நேரத்தை தியானத்திலே கழித்தமையும், மற்றையவர்கள் நித்திரை செய்யும் போது, சுவாமிகள் நெடுநேரம் தியானத்தில் ஈடுபட்டமையும் குறிப்பிடத் தக்கது.

அவர் அருளிய நற்சிந்தனைப் பாடல்கள், தத்துவத் தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளதோடு, பல அறங்களையும் கூறும் அற நூலாகவும் பக்திதரும் தோத்திர நூலாகவும் யோகம் கூடுவதற்குரிய யோக நூ லாகவும் அமைந்துள்ளது.

சமூக ரீதியான சிவதொண்டுகள்

1. சீரியவாழ்க்கை முறை

ஒருவன் அதிகாலையில் நித்திரை விட்டு எழும்ப வேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் பிரம்ம முகூர்த்த நேரம் தோன்றுகின்றது என்று கூறப்படுகிறது.இது ஒருவனுக்கு பெரும் ஆற்றலைக் கொடுக்கின்றது என்றார். கடவுளை ஐந்தெழுத்தோதி வழிபடல் வேண்டும்.

ஏத்துக பொன்னடி எனத் தலைப்பிட்டு,

"எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீறணிக
பழுதில் ஐந்தெழுத்தும் பன்னுக பன்முறை"

எனக் கூறியுள்ளார். ஆனால் இன்று சிலர் அதிகமாக தூங்குகின்றனர். அதிகமாக சாப்பிடுகின்றனர். சுவாமிகள் "நித்திரையிலும், உணவிலும் மிதமாயிரு" என்கிறார்.

2. வாழ்க்கையில் தியானம் செய்தல்

வாழ்க்கையில் தியானம் செய்வதனால் ஏற்படும் மகிமை பற்றி அன்பர்களுக்கு எடுத்துக் கூறினார். ஒருசமயம் சுவாமிகள் தியானத்தில் இருக்கும்போது ஓர் அன்பர் அவரை தரிசிக்க வந்து பொறுமையாக காத்திருந்து, அவரை விழுந்து வணங்கினர். அப்போது தியானத்தில் இருந்த சுவாமிகள் திடீரென பலத்த சத்தத்துடன் பின்வருமாறு கூறுகிறார். 'Bloody fool, this is not an altar; are you worshipping me or are you worshipping your self? Do you think that you can find god by worshipping another?' என்றுகேட்டுவிட்டு அவரது இதயத்திற்கு நேராக சுட்டிக் காட்டி, 'Look it is here! It is here!' என்றுதெளிவுபடுத்தினார்.

இதனை தனது நற்சிந்தனையில்,

"உன்னுள்ளே தெய்வீகத் தன்மையை உணர். நீயே உனக்குத் தலைவன். நீயே உன்னை நடத்துபவன். நீயே உலகத்திற்குச் சக்கராதிபதி. இந்தத் தூய எண்ணத்தை மறந்தால் இறப்புப் பிறப்பாகிய சமுத்திரத்தில் கிடந்து திக்குமுக்குப்படுவாய். எழுந்திரு, விழித்துக்கொள், உன்னை இனியொன்றும் வெற்றியெடுக்க முடியாது. விளக்கு எரிய வேண்டுமாயின் திரியும் எண்ணெயும் வேண்டும். நீ பிரகாசமடைய வேண்டினால் ஓம், தத், சத், என உணர்ச்சியோடு பிரார்த்தனை செய்." என்று அன்பர்களுக்குக் கூறியுள்ளமை ஒரு மனிதனை வளப்படுத்தும் வகையிலும் சுவாமிகளின் தொண்டுகள் இடம்பெற்றுள்ளமையைக் காணலாம்.

"மன்னுயி ரெல்லாம் மகிழ்ந்திடல் இன்பம்
என்னுயிர் போலவை ஓம்பிடல் இன்பம்
இன்னுயி ரிவையெலா மிறைவன் வடிவென
உன்னிடும் மெய்யுணர் வுற்றிட லின்பமே.."

யாவரும் சிவரூபம். சிவ தொண்டினை ஆற்றும் போது நாம் யாவரும் சிவரூபம் என்ற நிலை உருவாகும்.

3. கடமையே வழிபாடு

பாடசாலை வேளையில் தன்னை தரிசிக்க வந்த ஆசிரியர்களை ஏசிக் கலைத்தார். அவர்களிடம் "கந்தபுராணம் படிப்பதாயினும் கடமையை அலட்சியம் செய்ய வேண்டாம்" என்றார்.

தந்தைக்கு உதவி செய்யாத மைந்தன் ஒருவன் தன்னை வீழ்ந்து வணங்க வந்தபோது முதலில் "போய்க் கொப்பனைக் கும்பிடு" எனக் கூறியதனூடாக சிவதொண்டு என்பது சிவனடியார்களை மட்டும் வழிபடுவதல்ல பெற்றோர்களை வழிபடுவதே சிறப்பானது என்பதனை உணர்த்திய ஆத்மஞானி.

பெண்கள் தாம் வாழும் வீடு ஒரு கோயில் என்பதை உணர்ந்து அவற்றை தூய்மையாகப் பேண வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். ஓர் அன்பர் கழிப்பறை, கழுவும் ஓசையை அவதானித்து "அது சிவ பூசை" என்றார்.

4. பாடசாலை மாணவரிடையே நல்லெண்ணங்களை வளர்த்தல்

பாடசாலைக் காலத்தில் இரு பையன்கள் ஒரே வகுப்பில் படித்தனர். ஒருவன் நன்றாக படிப்பான், ஆயினும் குறைந்த புள்ளிகளையே பெறுவான். மற்றவன் குறைவாக படிப்பான், ஆனால் அதிக புள்ளிகளைப் பெறுவான். அதிக புள்ளிகளைப் பெறுபவன் சுவாமிகளின் வார்த்தைகளைக் கேட்டு ஒழுகுபவன். இது முதல் மாணவனுக்கு பொறாமையை ஏற்படுத்தியது. எனினும் அவனை, சுவாமிகள் திருத்தினார். "ஆசை, பொறாமை, கோபம் இவற்றை எல்லாம் தவிர்த்தால் நீயும் அதிக புள்ளிகனைப் பெறலாம்" என்று கூறினார்.

யோகர் சுவாமிகளின் அருமையான உபதேசம், "யார் என்ன தீமை செய்தாலும் செய்யட்டும், ஒன்றுக்கும் அஞ்சாதே. மற்றவர் உனக்கு தீமையும் செய்ய முடியும். நன்மையும் செய்ய முடியும் நீ செய்த வினைப் பயன்களின்படி எல்லாம் நன்மைபெறும். நீ ஒருவருக்குத் தேடி தீவினை செய்யாதே. நீ செய்வனவற்றை சிவதொண்டு என நினைத்துக் கொண்டு செய். நீ சும்மா இரு. கடவுளைத் தியானி. கடவுள் உனக்குத் தேவையானவையெல்லாம் தருவார்" இவ்வாறு சுவாமிகள் சமுதாய முன்னேற்றத்திற்கான பல அறக்கருத்துக்களைப் போதித்துள்ளார்.

5. ஒருவரைப்பற்றி குறை கூற எமக்கு உரிமையில்லை

ஒரு அன்பர் பலரின் குறை நிறைகளைப் பேசினார். இவை எல்லாம் ஒளகீகம். உண்மையில் ஒருவரைப்பற்றி குறை கூற எமக்கு உரிமையில்லை. எமது வினைப்பயனுக்கேற்றபடி வாழ்கின்றோம். நாம் எல்லோரிடத்தும் சிவனையும், சிவனிடத்தும் எல்லோரையும் காணப் பழக வேண்டும் என்கிறார்.

"எல்லோரையும் ஈசனிடத்திலே கண்டிடடா,
எல்லோரிடத்திலும் ஈசனைக் கண்டிடடா"

தவத்தீரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

என்று பாடியுள்ளமை இதனைத் தெளிவாக்கும். "நீ உன் வழியில் நட, உன் காலில் நில், உன் சக்தியில் நம்பிக்கை உள்ளவனாய் இரு. உன் ஆத்மாவின் குரலைக்கேள். இறைவனுடைய சாம்பிராச்சியம் உன்னுளுண்டு." என்கிறார். இவ்வாறான வாக்குகள் எல்லாம் மாணவரிடத்தும் சென்றடைய வேண்டும்.

6. நோய் தீர்த்தல்

சிவதொண்டுப் பணிகளில் அன்பர்களின் நோய் நீக்குதலையும் மேற்கொண்டார். எடுத்துக்காட்டாக சில விடயங்களைக் குறிப்பிடலாம்.

1. டாக்டர் குருசாமி என்பவர் நோய்வாய்ப்பட்டு இருந்த சந்தர்ப்பத்தில் அவரது பிள்ளைகளை கோளறு பதிகத்தைப் படித்துவரும்படி கூறினார். பிள்ளைகள் ஒழுங்காக அதனைப் படிக்காமையால் நோய் தீரவில்லை. பின் தாமே சென்று கோளறு பதிகத்தைப் பாடி தீராத நோயினை தீர்த்து வைத்தார்.

2. திரு. வேலுப்பிள்ளை என்பவரின் நோயினைக் குணப்படுத்த 'சிதம்பர தரிசனம் பார்' என்றுக் கூறி ஒரு காலைத் தூக்கிச் சிகையை விரித்து 5 நிமிடங்கள் கூத்தாடி அவரது நோயினையும் போக்கினார்.

3. சேர் துரைசாமி என்பவர் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவுக்கு போவதற்கு ஏற்பாடுகள் செய்தபோது அவருக்கு சுகவீனம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அவருக்காக தானே மருந்துகளை அருந்தி அவரது நோயினைக் குணப்படுத்தி அவரை வெளிநாடு செல்ல வைத்தமை போன்ற செயல்கள் சுவாமியின் பரந்த மனப்பாங்கினையும், தன் உயிரையும் பொருட்படுத்தாது சிவதொண்டினை செய்துள்ளமையினையும் காட்டுகிறது.

7. மழை பெய்வித்தமை

வன்னிப் பிரதேசத்தில் மழைபெய்யாது விவசாயம் பாதிப்படைந்திருந்ததைக் கண்டமக்கள் மழை பெய்ய வில்லை என ஏக்கம் கொண்டு சுவாமிகளிடம் சென்றனர். அச்சந்தர்ப்பத்தில் சுவாமி,

"நல்லமழை பெய்யாதோ நாடு சிறவாதோ
எல்லவரும் இன்புற்று வாழாரோ - நல்லூரான்
ஆசனாய் வந்தே அடியேனை ஆண்டுகொண்டான்
பேசானு பூதியென் பேறு"

ஏன்ற நற்சிந்தனைப் பாடலைப் பாராயணஞ் செய்து மழையில்லாக் குறையினை தீர்த்து வைத்தார்.

8. மதுவிலக்கு

இவரது பணிகளில் முக்கியமான ஒன்றாக விளங்குவது மதுவிலக்கு. இப் பழக்கத்தினால் பல குடும்பங்கள் சீரழிவுகளை எதிர்நோக்கியது. இவற்றினை நேரடியாகக் கண்ட சுவாமிகள் 08.03.1952இல் சி.குருசாமி தலைமையில் இலங்கை மதுவிலக்குச் சபையினை ஸ்தாபித்தனர். இச்சபை சுவாமிகளின் கட்டளைப்படி செயற்பட்டு வந்ததோடு இதற்குப் பண உதவி தேவைப்பட்டது. இதற்காக சிவதொண்டன் அன்பர்கள் மாதம் ஒரு ரூபாய் வீதம் உதவும் படியும் வேண்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதன் முயற்சியால் பல சாராயக் கடைகள் மூடப்பட்டன. யோகர் சுவாமிகள் மக்களை அழிக்கும் இம் மதுவினை அழிக்கும் தொண்டினை சிவ தொண்டாகவே கருதினார்.

9. விவசாய விருத்தி

விவசாய விருத்திக்குப் போட்ட திட்டம் செங்கலடி சிவதொண்டன் நிலையத்தோடு சேர்ந்தே இவ் விவசாயத்திற்கான பண்ணை நிறுவப்பட்டது. இப் பண்ணையின் நோக்கங்கள்: நிலத்தின் சத்தைக் கெடுக்காத முறையில் எவ்வளவு உணவுற்பத்தி செய்யலாமோ அவ்வளவு உணவை உற்பத்தி செய்வது என யோகர் சுவாமிகளின் சீடரான சோல்பரி பிரபுவின் மகனே பொறுப்பாயிருந்து இச் சிவதொண்டினை ஆற்றினார். இதனை தனது நற்சிந்தனைப் பாட்டில் கூறியுள்ளார்.

"வருமோ வறுமைப் பிணி மாந்தீர் - கருதுவீர்
காயத்தைத் தேற்றக் கடவுள் திருவடியில்
நேயத்தை வைப்பீர் நிறைந்து"

என்று பாடியுள்ளதன் மூலம் மற்றவரது உணவுப் பசியைப் போக்கினார். அத்துடன் 1930ஆம் ஆண்டு கந்தவனக் கடவை எனும் பிரசித்திபெற்ற முருகன் கோயிலுக்கு அருகிலுள்ள காணியில் தோட்டம் செய்வதற்கு வழி வகுத்தார்கள்.

10. சிவதொண்டாக மொழிபெயர்ப்புப் பணிகள்

யோகர் சுவாமிகள், அடுத்த வாரிசுகளின் பயன்பாட்டினைக் கருத்திற் கொண்டு ஒரு சிவதொண்டாகவே மொழிபெயர்ப்புப் பணிகளைச் செய்துள்ளார். சேர் ஜோன் வூட்றொப் எழுதிய குண்டலினி சக்தி (Serpent Power by sir john woodrofe) உடம்பின் நாடிகள், வாயுக்கள், ஆறு ஆதாரங்கள் பற்றிப் பேசும் சிறப்பான நூல். இந் நூலினை தமிழில் மொழிபெயர்த்தார்.

விவேகானந்தரின் சீடரான அலெக்சாண்டர் எழுதிய 'In the hours of Meditation' எனும் நூலை தியான காலம் எனும் நாமத்தோடு 1925ஆம் ஆண்டில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அத்துடன் 1955ஆம் ஆண்டில் விவேகானந்த சுவாமிகளின் சொற்பொழிவுகளின் சாரம் என்ற நூலையும் சிவதொண்டன் நிலையத்தினூடாக வெளியிட்டார்.

11. இனம், சாதி, சமயம் பாராது சிவதொண்டு

சிவதொண்டு செய்யும்போது, இனம்,சாதி, சமயம் பார்க்க முடியாது. பணக்காரன், வறியவன் எனப் பார்க்கக் கூடாது என்று கூறிய யோகர் சுவாமிகள் சிங்களவர், தமிழர் என்ற வேறுபாடுகளைப் பார்க்காது அனைவருக்கும் சம தொண்டினையே புரிந்துள்ளார். இதனை

"சிங்களவர் எங்களது செல்வம், இந்த...
தமிழரும் எங்களது செல்வம்
யாவருஞ் சமனென வுணர்ந்திட லின்பம்
யாவருஞ் சகோதர ரென்பது மின்பம்.."

என்று பாடி தமிழரைப்போல் சிங்களவரையும் தம்மவராகவே நினைத்தார். அத்துடன் தம்மிடம் ஆறுதல் வேண்டி வந்த ஒரு கிறிஸ்தவரிடம் "ஆண்டவன் திருவடி வேண்டிக்கொண்டால் என்றும் ஆறுதல் உண்டாகும்" எனக் கூறியுள்ளமை அவரது சமய ஒற்றுமையைக் காட்டுகிறது.

சிவதொண்டின் பலன்

"சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீபபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்"

என்று தனது நற்சிந்தனையில் சிவதொண்டு ஆற்றினால் கிடைக்கப்பெறும் பலன்களைக் குறிப்பிட்டுள்ளார்.

சமயமும், வாழ்க்கையும்

சமயம் இன்றும் வாழ்க்கையுடன் இணையவில்லை. இன்று தொழிநுட்பத்தின் விளைவால் சமயப் பாடங்களைப் பயில்வதனால் என்ன பயன் என்கிறார்கள். சமயத்தின் மூலம் தான் மனப்பாங்கு மாற்றம் வருவதை யார் அறிவார்? உபநிடத மகாவாக்கியமான (தத்துவம் அஸி, அகம் பிரம்மஸி, சோகம் அஸி) இது தெரிந்தால் யார் யாரையும் வெறுக்க முடியாது. சுரண்டவும் முடியாது. எனவே இது போல் யோகர் சுவாமிகளும் "தெய்வத்தை மனிதரிடத்தில் காண்" என்கிறார்.

யோகர்சுவாமிகளின் கருத்துக்கள் மக்களுக்கு சென்றடைய வேண்டும் - சென்றடையாதிருப்பது தான் பிரச்சனை.இன்றைய உலகத்திலே நாம் போட்டி, பொறாமை, பழிக்குப்பழி. எங்கும் எதிர்பார்ப்பு, எதிலும் எதிர்பார்ப்பு. ஒருவர் ஓர் உதவியைச் செய்து விட்டு இன்னோர் சந்தர்ப்பத்தில் தனக்கு உதவி செய்ய வேண்டும்" என எதிர்பார்ப்பர். அவ்வாறு செய்யவில்லை யென்றால் பொறாமை, வஞ்சம், சிலவேளை அவரது தொடர்பையே துண்டிப்பர் அல்லது தூற்றுவார். இவ்வாறான உலகத்திற்கு அரிய பொக்கிஷங்களை யோகர் சுவாமிகள் விட்டுச் சென்றிருக்கிறார். நாம் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் பயன் உண்டு. நியூட்டனின் விதியும் அதைத்தான் சொல்கிறது. அதைத்தான் தான் சுவாமிகளும் சிவதொண்டாய் செய்யும் போது கடவுள் உனக்குத் தேவையானவெல்லாம் செய்வார் என்கிறார்.

முடிவுரை

இவ்வாறாக சுவாமிகள் தனது வாழ்நாள் முழுவதையும் சிவதொண்டுகள் செய்வதற்கே அர்ப்பணித்ததோடு, சித்தர் என்ற மரபுக்கு அப்பால் சென்று மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்கள் மனதில் ஆன்மீக ஞானியாகவும் இடம் பிடித்துள்ளார். யோகசுவாமிகளின் அன்பர்கள் அவர் காட்டிய வழியில் நின்று, தாம் வாழும் இடங்களில் எல்லாம் சிவதொண்டாற்றி வருகின்றனர். "இங்கு நான் ஒரு குறையும் வைக்கவில்லை" எனத் திருவாய் மலர்ந்து சிவதொண்டு ஆற்றுவதே சிவனடியார்களின் தொழில் என்பதை உணர்த்திய ஆன்மீகஞானியாகத் திகழ்ந்த யோகர் சுவாமிகள் 1964ஆம் ஆண்டு தமது சிவதொண்டை நிறைவுறச் செய்தார். யோகர் சுவாமிகள் தம் ஆன்மாவை மேம்படுத்திக் கொண்டதுடன் எம்முடைய ஆன்மிகப் பார்வையையும் விசாலப்படுத்தியுள்ளார் என்பதை அடுத்த வாரிசுகளுக்கு தெரிவித்து வளர்க்க வேண்டிய தார்மீக பொறுப்பு எம்மைச்சார்ந்தது.

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

உசாத்துணைகள்

1. செல்லத்துரை சுவாமி, (2004), "யோகசுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும்", சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்.
2. கிருஸ்ணபிள்ளை விமலா, (1998), "சிவயோக சுவாமிகள்" அன்பர்களின் அனுபவம், சிவயோகர் சுவாமிகளின் திருவடி நம்பிக்கைப் பொறுப்பு.
3. அம்பிகைபாகன்.ச., (1972), "யோகசுவாமிகள்", நூற்றாண்டுப் பிறந்ததின விழா வெளியீடு.
4. சிவயோகசுவாமிகள், (2003), இந்துக் கலைக் களஞ்சியம் தொகுதி-06, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
5. அம்பிகைபாகன்.ச.,(1996), ஈழ நாட்டில் சித்தர் மரபு, அகில இலங்கை இந்து மாமன்றம்.
6. செல்லையா.வ., (2003), ஈழத்துச் சித்த சிரோ மணிகள், கொழும்பு யோகசுவாமி நம்பிக்கை நிதியம்.
7. வேலன்.க.ந., (1995), ஈழத்துச் சிவயோக சுவாமிகள் ஆற்றிய ஞான விளக்கு, யுனைற்ரெட் லிமிட்ரெட், கொழும்பு.
8. http//:www.wikipedia.org
9. http//:www.sivarppanam.blogspot.com
10. Thinnamalar.com ஆன்மீகம், சித்தர்களின் வாழ்கை வரலாறும் அவர்களின் பூர்வீகமும் கட்டுரை S.SatheeshKumar
11. BhakthiPlanet.com by Niranjana
12. Srikalikampal.com
13. Bhakthiplanel cam by nivaranjana on Aug 17.2011
14. Sitthar.com posted Jeyamoorthy
15. Thinnamalar.com ஆன்மீகம், சித்தர்களின் வாழ்கை வரலாறும் அவர்களின் பூர்வீகமும் கட்டுரை S.SatheeshKumar

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

மாமன்றத்தின் ஏற்பாட்டில் 2015.03.07ஆம் திகதி நடந்த சிந்தனைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரை

ஈழத்துச் சித்தர்களின் பரம்பரை வரிசையில் தவத்திரு சிவயோக சுவாமிகள்

பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்
மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா.

"பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சராசரி மனிதரிலும் பன்மடங்கு உயர்ந்து நின்ற மகாத்மாக்கள் பலருண்டு. ஒரு சிலர் தம் பாடல்கள் மூலம்தாம் யார் என்பதை உலகிற்கு அறிவுறுத்தினார்கள். வேறு பல சித்தர்கள் தாங்கள் வாழ்கின்ற காலத்தில் தம்மை வந்தடையும் மக்களின் குறைகளை நீக்கி நல்வாழ்வு வாழ வழி செய்தவர்கள் ஆவார்கள்"1

ஈழத்துச் சித்தர் வரிசையில் நயினைச் சித்தர் முத்துக்குமார சுவாமிகள், கீரிமலை சடையம்மா, கடைச்சாமி, குயின்ஸ்பரி நவநாதச் சித்தர், மகான் செல்லப்பா, சிவயோகசுவாமி, யாழ்ப்பாணத்துத் தாடிச்சித்தர், ஊமைச்சித்தர், குடைச்சாமி, கூச்சாமியார், சிரட்டைச் சாமியார், வேலுச்சாமியார், சாதுதங்கம்மை, ஆத்மஜோதி முத்தையாசாமிகள், இன்னும் இலைமறைகாயாக இருக்கும் சித்தர்கள் பலருள்ளனர்.

அமானுஷ்யமான நடத்தை கொண்டவர்களையே மானுடர்களிலிருந்தும் வேறுபடுத்திச் சித்தர், பக்தர், ரிஷிகள், முனிவர்கள்,ஞானிகள், மகான்கள்,பேரருளாளர், அதிமானுடர்கள் என்று பிறர் பெயரிட்டழைப்பர்.

ஈழத்துச் சித்தர் வரிசையில் சிவயோக சுவாமிகள்:

இவர் யாழ்ப்பாணத்து மாவிட்டபுரத்திலே 1872 - 05 -29 ஆம் திகதி புதன்கிழமை காலை அவிட்ட நட்சத்திரத்தில் அவதரித்தார். தந்தை அம்பலவாணர். தாய் சின்னாச்சிப்பிள்ளை.பணிபுரிந்த இடம் கிளிநொச்சி. தந்தையுடன் சிலகாலம் வாழ்ந்த பகுதி மஸ்கெலியா. வேதங்கள், ஆழ்வார்கள், நாயன்மார் பாடல்கள், பிற அருளாளர் பாடல்கள், கிறிஸ்துவ வேதமாகிய "வேதாகமம்" என்று நாவலர் பெருமானால் மொழிபெயர்க்கப்பட்ட விவிலியம் (Bible), முகம்மதிய வேதமாகிய திருக்குர்ஆன் முதலிய ஆன்மிக நூல்களை ஆவலுடன் கற்றுத் தேர்ந்தார். மகான் செல்லப்பா ஞானிகளால் வாக்குத்தீட்சை வழங்கப்பெற்றார்.

1935 இல் சிவதொண்டன் பத்திரிகையை உருவாக்கினர். 1954இல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சிவதொண்டன் நிலையம் அமைத்தார். யோகவாழ்வும் தவவாழ்வும் வாழ்ந்து 92ஆண்டுகள் எளியராய்க் காட்சி தந்து வாழ்ந்தார்.

"Homage to Yogarswamy" எனும் நூலை எழுதிய "சுசநாகவீரப்பெரும்" எனும் புத்தசமய அறிஞர், நீதி அரசர் அக்பர் எனும் சூபிநெறியினர், ராம்ஸ்போதம் ஆகிய மேலை நாட்டுக் கிறிஸ்துவர் முதலிய அறிஞர்கள் சிவயோகசுவாமிகளைத் தரிசித்துள்ளனர். அவரவர்கள் சமய வேதங்களிலிருந்து சில கருத்துக்கள் பற்றி அவரவர்களிடம் சுவாமி பேசினார்.

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் மேல்வருமாறு எழுதியுள்ளார்.

"யாழ்ப்பாணத்தில் நீண்ட காலம் வாழ்ந்து 1964 ஆம் ஆண்டு வீடுபேறடைந்தவர்கள் யோகர்சுவாமிகளாவர். இவர் ஒரு தனிப்பட்ட இடத்தில் சிறிய குடிசை ஒன்றை அமைத்துக் கொண்டு அதனுள் இருந்துவந்தார். அந்தக்குடிசையுள் நுழைய வேண்டுமானால் யாராக இருந்தாலும் குனிந்து இடுப்பை வளைத்துக் கொண்டுதான் உள்ளே செல்ல முடியும். குடிசைக்குள் அதிகமாக நின்றால் பதினைந்து அல்லது இருபது பேர் தான் நிற்கமுடியும். நிற்பவர்கள் தம்வழிபாட்டை முடித்துக்கொண்டு வெளியே சென்ற பிறகு தான் அடுத்த கூட்டம் உள்ளே நுழைய முடியும். ஒவ்வொருவரும் காணிக்கையாகப் பழங்கள் வாங்கி வந்து சுவாமிகளின் திருவடிகளில் வைத்து வணங்குவார்கள். எந்த ஒன்றையும் சுவாமிகள் எடுத்து வாயில் போட்டதாகத் தெரியவில்லை.

குறைதீர்க்க வேண்டி வந்தவர்கள் வாய்விட்டுத் தம் குறைகளைச் சொல்லும் பழக்கமில்லை. எனவே பதினைந்து இருபது நிமிடங்கள் ஒரு கூட்டம் உள்ளே நின்றாலும் ஒருத்தர் கூட வாய் திறந்து எதனையும் சுவாமிகளிடம் கூறியதில்லை. 1950 வாக்கில் முதன்முறையாகச் சுவாமியைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. அதற்கு முன்னர் சுவாமிகளைப் பற்றி அதிகமொன்றும் தெரிந்து கொண்டதில்லை" என்றும் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் கூறுகிறார். "சுவாமிகள் விடாமல் பாடிக்கொண்டே இருப்பார்கள். கூர்ந்து கவனித்தபொழுது திருவாசகத்தில் அரையடி தேவாரத்தில் ஒன்றரையடி திருவிசைப்பாவில் நூறு சொற்கள் என்று மாறிப் பாடிக் கொண்டிருந்ததை அறிந்தேன். என்போன்ற விபரம் புரியாதோருக்கு ஏன் சுவாமிகள் இப்படி அரையடி முக்காலடி என்று பாடுகிறார்கள் என்ற சந்தேகம். வெளியே வந்து நண்பர்களை கேட்டபொழுது எப்போதும் சுவாமிகள் இப்படித்தான் பாடிக் கொண்டே இருப்பார்கள் என்றார்களே தவிர யாரும் என் ஐயத்தைப் போக்கவில்லை. உள்ளிருந்து வெளியே வந்த அன்பர்களைக் கண்டு பேசும்போது ஓர் உண்மை தெரியலாயிற்று. "தாங்கள் பெரும் குறையோடு இருந்ததாகவும், சுவாமிகள் பாடிக்கொண்டிருக்கையில் தம் மனத்துட் புகுந்து பெரிய அமைதியைத் தந்ததாகவும் தம்முடைய பிரச்சினைகட்கு அப்பாடல்கள் விடையாக

அமைந்ததாகவும் கூறினார்கள். வருபவர்கள் வாய்விட்டுக் குறைகளைக் கூறுவதுமில்லை. தங்களுக்கு என்ன குறையென்று அந்த மகா புருஷர் கேட்பதுமில்லை. ஆனாலும் வருபவர்க்கு அமைதி கிடைத்துவிடும். கம்பநாடன் 'வாராதே வரவல்லாய்' என்று கூறுவதன் பொருளைச் சுவாமிகளிடம் இருக்கும் போது தெரிந்து கொள்ள முடிந்தது" என மேலும் எழுதுகிறார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்.

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் ஏறத்தாழ இருபது தடவைகளுக்குமேல் சுவாமிகளைத் தரிசித்துள்ளார் என்று கூறுவதுடன், "அன்றன்று என் சொற்பொழிவு முடிந்தவுடன் அந்த மகானின் சந்நிதிக்குச் சென்று அரைமணியோ ஒரு மணியோ அவரின் திருவடிக் கீழ் அமர்ந்து அவரின் அருளைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன்" என்றும் கூறுகிறார்.

யோகசுவாமிகளாகிய இப்பெருமகனார் "எல்லாம் வல்ல சித்தர்" என்பார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன். "என்நினைவில் ஆழமாக நின்ற மற்றொரு நிகழ்ச்சியைக் கூறுகிறேன். ஒரு முறை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சொற்பொழிவு ஆற்றுவதற்காகப் பல்கலைச் செல்வர் டாக்டர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், டாக்டர்.டி.எம்.பி.மகாதேவன், நான் ஆகிய மூவரும் சென்றிருந்தோம். திரு.மகாதேவனுக்கு இது புதிய அனுபவம். நான்கு நாட்களும் சொற்பொழிவுகள் முடிந்தவுடன் சுவாமிகளிடம் சென்று ஒரு மணிநேரம் தங்கி அவர்கள் ஆசீர்வாதத்துடன் திரும்புவது வழக்கம்" என்கிறார். இன்னொரு சந்தர்ப்பத்தில் திடீரென சுவாமிகள் பின்வருமாறு கூறினார்கள். "பொடியா சேக்கிழாரையும், கம்பனையும் நாங்கள் தானே வெட்டிப் புதைக்கவேணும். கவலையில்லாமல் போய் வா" என்றார்கள். (இது யோகர் சுவாமிகளது பரிபாஷை. (சித்தர் மொழி) பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் மேலும் கூறுகிறார்.

"அன்றுமாலை வழக்கம் போல பேசினேன். பின்னர் சுவாமிகளிடம் சென்று ஆசிபெற்றேன். ஏனைய ஒன்பது நாட்களும் இதே முறையில் சுவாமிகளைச் சென்று தரிசனம் செய்து வந்தேன். இந்த நிகழ்ச்சி நடைபெற்ற காலத்தில் கம்பனைப் பற்றி 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' என்ற நூலையும் 'நாடும் மன்னனும்' என்ற நூலையும் எழுதி வெளியிட்டிருந்தேன். அதன்பிறகு ஏறத்தாழ முப்பது நூல்கள் எழுதியுள்ளேன். என்றாலும் "பொடியா சேக்கிழாரையும் கம்பனையும் நாங்கள் தானே வெட்டிப் புதைக்க வேணும். கவலையில்லாமல் போய்வா" என்ற வாக்கு பொய்க்கவில்லை. இந்நூல்களில் முக்கால் பங்கிற்கு மேல் கம்பனையும் சேக்கிழாரையும் பற்றிய நூல்களே ஆகும். இவற்றோடு இல்லாமல் எஸ். ராஜம் அவர்கள் வெளியிட்ட கம்பராமாயண மூலத்திற்கு ஆசிரியர் குழுவில் ஒருவனாக இருந்தேன். அடுத்துச் சென்னைக் கம்பன் கழகம் வெளியிட்ட "கம்ப இராமாயணம்" பதிப்பிற்குப் பல்கலைச் செல்வர் தெ.பொ. மீ அவர்களுடன் சேர்ந்து பணியாற்றினேன். 1933 முதல் கோவைக் கம்பன் கழகம் வெளியிடும் இராமாயண நூலுக்கு முதன்மைப் பதிப்பாசிரியனாக இருந்து வருகிறேன். தஞ்சைப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக இருந்த முனைவர் வி.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் எதிர்பாராத விதமாக என்னை அழைத்துச் சேக்கிழாரைப் பற்றிய விரிவான நூலொன்றை எழுதுமாறு பணித்தார்கள். மூன்று ஆண்டுகள் பல்லைக்கழகத்தில் ஏற்புப் பணியாக 'பெரிய புராணம் ஓர் ஆய்வு' என்ற பெரியதொரு நூலை எழுதி முடித்தேன்" என்று கூறும் அ.ச.ஞானசம்பந்தன்,

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

1996 இல் என்னுடைய எண்பதாவது வயது நிறைவுகளில் 'இராமன் பன்முக போக்கில்' என்ற நூலை எழுதினேன். 1997இல் 'சேக்கிழார் தந்த செல்வம்' என்ற நூலை வெளியிட்டேன். நூல்களெழுதும் பழக்கமுடைய நான், இவை இரண்டையும் எழுதியதில் என்ன புதுமை என்று பலர் நினைக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை 'யோகசுவாமிகள் இட்ட கட்டளை' என்று ஒவ்வொரு விநாடியும் நினைக்கிறேன். என்ன காரணத்தாலோ சென்ற நாற்பது ஆண்டுகளாக இவ்விருவரையும் தாண்டி வெளியே செல்ல முடியவில்லை. தொல்காப்பியப் பொருளாதிகாரத்திலுள்ள, மெய்பாட்டியல், உவமையியல் என்ற இரண்டிற்கும் புதிய முறையில் பேராசிரியருடன் மாறுபட்ட உரை எழுதும் எண்ணம் பல்லாண்டுகளாக இருப்பினும் ஏனோ எழுதமுடியவில்லை. திரு.வி.க. அவர்கள் திருவாசகத்திற்கு என்னால் ஓர் உரை எழுதப்படல் வேண்டும் என்று பலமுறை என்னிடம் கூறியதோடு அவருடைய வாழ்க்கைக் குறிப்பிலும் இதனை எழுதியுள்ளார்கள். என்ன காரணத்தாலோ 1997வரை அதுவும் முடியவில்லை. எண்பது வயது பூர்த்தியாகும் போதும் இராமனைப் பற்றியும், சேக்கிழார் பற்றியுமே அடுத்தடுத்து இரண்டு பெரிய நூல்களை எழுதி வெளியிட முடிந்ததென்றால், அதன் உண்மையான காரணம் அ.ச.ஞானசம்பந்தன் என்ற தனிமனிதனுடைய முயற்சியோ விருப்பமோ அல்ல. எந்த விநாடி அந்த மகான் வாயைத் திறந்து "அந்த இருவரையும் வெட்டிப் புதைக்க வேண்டும்" என்று சொன்னார்களோ அந்த விநாடியிலிருந்து அதேபணி என்னையும் அறியாமல் நடந்து கொண்டிருக்கிறது."

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் கூறுவதாக முனைவர் அ.அறிவொளி எடுத்துக் காட்டுவதாவது:

எண்பது வயதைக் கடந்தாலும் என்னுடைய குரல் வளத்தைக் கண்டு வியப்படைந்து "எப்படி உனக்கு இந்தக் குரலிருக்கிறது" என்று என்னிடம் கேட்பவர்களும் பலருண்டு. இதற்காக நான் ஏதோ தனிப்பட்ட முறையில் மருத்துவம் செய்து கொள்கிறேனோ என்றும், குரலை நெறிப்படுத்தும் (Voice culture) முறை கையாள்கிறேனோ என்றும் பலர் என்னிடம் கேட்பதுண்டு. எவ்விதக் கட்டுப்பாடுமில்லாமல் கண்டதையெல்லாம் உண்டு வாழும் எனக்கு இந்தக் குரல் இன்னும் இருக்கிறதென்றால் அது என்னுடையதன்று. அரசங்குடி சரவண முதலாளிக்கு 1916இல் மகனாகப் பிறந்து நான் பேசும் குரல் அப்பெருமகனார் இட்ட பிச்சையாகும். எனவே இதில் ஆச்சரியப்படுவதற்கோ, பெருமை அடைவதற்கோ

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

ஒன்றுமில்லை. இத்தகைய மகான்களின் திருவருள் எத்தகையவர்களையும் காக்கும் திறன் உடையது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும் என்றார்.

அருளாளர்கள் என்பார்கள் எப்போதும் எல்லா இடங்களிலும் இருந்து கொண்டு இறைவன் கட்டளைகளை இனங்கண்டு கொள்வதும், காண்பதும் வெளிப்படுத்துவதுமாயுள்ளார்கள். அவர்களுடைய அருளாசிகளைப் பெறுவது பல பிறப்புக்களிலும் நாம் செய்த புண்ணியத்தின் பயனே ஆகும். "கந்துகமதக் கரியை வசமாய் நடத்தலாம்" என்று தாயுமானவப் பெருந்தகை கூறியதை 1955இலும் செய்து காட்டும் அருளாளர்கள் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டவே சிவயோக சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்களைக் கூறினேன் என நிறைக்கிறார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்.

முனைவர் அ.அறிவொளி (2012) குறிப்பிடும் செய்திகளை இனி நோக்கலாம்.

சுவாமி விவேகானந்தர் இங்கிலாந்தில் ஒரு மாட்டுப் பண்ணையைக் காணப் போயிருந்தார்.கட்டுக்கடங்காத முரட்டுக்காளை ஒன்று சீறிவந்தது. விவேகானந்தரை விட்டு மற்றவர்கள் ஓடிவிட்டனர். தனியே நின்ற விவேகானந்தர் மார்பில் இருகைகளையும் கட்டி அந்த மாட்டையே உற்று நோக்கினார். அப்படமே பிரபலமாக இப்போதும் சுவாமி விவேகானந்தரின் "தீட்சண்யத்தை" உணர்த்தி நிற்பதாகும்.

கதிர்காம யாத்திரையின் போது ஒரு மந்திரவாதியுடன் காட்டில் சிவயோக சுவாமி. ஒரு காட்டெருமை இவர்களைக் கண்டு கோபத்தோடு வந்தது. மந்திரவாதி ஏதோ மந்திரங்களைக் கூறினார் எருமை நெருங்கிவிட்டது.

பயந்துபோய் அருகில் உள்ள மரத்தில் ஏறித் தப்பித்தார் மந்திரவாதி. ஏதும் செய்யாமல் நின்றார் சுவாமி. அவர் தவயோக நிலைக்குக் கட்டுப் பட்டதுபோல் கோபம் அடங்கித் திரும்பிப் போய்விட்டது.

ஒருமுறை ஆற்றில் வெள்ளம் வந்தது. சுவாமிகள் ஆற்றங்கரையில் ஈரமணலை நீக்கி அப்பள்ளத்தில் அமர்ந்து அன்ன ஆகாரம் ஏதுமின்றி மூன்றுநாள் சமாதி நிலையில் இருந்தார்.

மாவட்ட ஆட்சியராக இருந்த வைரமுத்து என்னும் ஒரு அன்பன் முன்பின் சுவாமியைப் பார்த்தறியாதவர். அதிகாலை இருட்டில் அவர் சிவயோக சுவாமியின் குடிசைக்கு வந்தார். வா.வைரமுத்து படல (மூங்கில் கதவு) திறந்துதான் இருக்கிறது என்று சிவயோக சுவாமியே கூறினார்.

நாக்கு நுனியில் புழுமேச்சலாய் ஒரு பையனுக்கு இருந்தது. அவனின் தாய் எல்லா மருந்தும் கொடுத்தாகி விட்டது. போகவில்லை என்றார். சுவாமிகள் மூன்று முறை வாயால் அப்பையன் வாயில் ஊதினார்.அக்குறை நிவர்த்தியானது. சிவயோக சுவாமிகள் யாவும் அறிந்துணர்ந்த ஞானி எனலாம்.

ஒருவர் சிவயோக சுவாமியைப் பார்த்து மற்றவரிடம் கூறினார். இவரும் நானும் ஒரே ஊரில்தான் இருந்தோம். நான் பஸ்ஸில் ஏறி இங்கே வந்தேன். அவர் அதில் ஏறவில்லை. ஆனால் எனக்கு முன்பே இங்கு வந்து நிற்கிறாரே என்று வியந்தார்.

சுவாமிகள் தன்னை வெளிக்காட்டாது அடக்கமாகவே இருந்து பழகிவிட்டார். சிவயோக சுவாமிகள் அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவராகவே இருந்தார்.

சிவயோக சுவாமிகள் சிதம்பர தரிசனம் முடிந்து ஆச்சாள்புரம் போகவந்தார். கொள்ளிடம் ஆற்றைக் கடந்துதான் ஆச்சாள்புரம் போகவேண்டும் (ஞானசம்பந்தர் ஆச்சாள் புரத்திற்றான் சோதியுட் கலந்தார்). இவரோ ஒரு கரைக்கு வந்ததுமே மறுநொடியில் மறுகரையில் ஏறிக் கோயிலுக்கே வந்து விட்டார் என்று பார்த்தவர்கள் சொன்னதை அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் பலமுறை சொல்லிக் காட்டினார்.

தெய்வமாக உணர்ந்த தன் குருநாதரான மகான் செல்லப்பா சுவாமிகளை அவர் இறந்த போது சடங்குகளில் கலந்து கொள்ளாமல் போய்ப்பார்ப்பதையும் தவிர்த்தார். 'தன்' நெஞ்சுக்குள் நிலைத்து உயிருடன் இருப்பவரை இறந்ததாகக் காண அவர் மனம் விரும்பவில்லை என்றுதான் தெரிகிறது.

தியானம் என்பது கடவுளை நினைப்பதோ வேண்டுவதோ அல்ல. சும்மாவே இருப்பதுதான் என்று விளக்கினார்.

நடமாடும் தெய்வமாகவே குருவும் சீடனும் இருந்தனர். செல்லப்பர் அணுகக் கூடியவர். சுவாமிகள் அணுக எளியவர். பிறர் நெருங்கி வந்தால் செல்லப்பர் தாம் ஒரு மூலையில் போய் நிற்பாராம். சுவாமிகளோ அன்பர் இல்லம் தேடி அருளினார். பலரும் பயன் பெற்றனர்.

கடவுள் பற்றியும் தம்மைப் பற்றியும் யோகர் சுவாமிகள் கூறிய அருள் அமுதம்.

"நாம் கடவுளை உள்ளத்தில் வளர்க்கிறோம். நாம் அவருடையதாய் நமக்கும் அவருக்கும் ஒரு குறையுமில்லை. நம்மை அவர் பிரியமுடியாது. முழுவதும் உண்மை."

(ஒரு குறையுமில்லை - முழுதும் உண்மை என்ற இரண்டு மகாவாக்கியங்களுக்கும் சுவாமிகளே கூறிய விளக்கம் இது)

சிவயோக சுவாமிகளின் மகாவாக்கியங்கள் மந்திர பூர்வமானவை. அர்த்த புஷ்டியும், ஆழமான கருத்துக்களுமுடையவை.

'ஒரு பொல்லாப்புமில்லை' என்பது ஒரு குறையுமில்லை, தடை ஏதுமில்லை. ஆகவே நீ நன்கு வாழத் தலைப்படு என்பது இம்மகா வாக்கியத்தின் கருத்துகளாம். தனு, கரண, புவன, போகம் என்று சைவ சித்தாந்தம் இறைவன் நமக்கு அருளிய கொடையை விளக்குவதே இந்த மகாவாக்கியம் என்று கொள்ளலாம். தனக்கு ஒரு பொல்லாப்புமிலலை என்று அறிவதே.

'தன்னை அறிந்தால் தவம் வேறில்லை
தன்னை அறிந்தால் தான் வேறு இல்லை
தன்னை அறியச் சகலமும் இல்லை
தன்னை அறிந்தவர் தாபதர் ஆமே.'

என்ற யோகர் சுவாமியின் நற்சிந்தனைப் பாடல் இம் மகாவாக்கியப் பயனை விளக்குகிறது. தம்மிடம் வருவோரை வாழ்த்துவதற்கும் இம்மகா வாக்கியம் பயன்படுகிறது. தாம் இருக்கும் ஊரும் நாடும் துன்பம் இல்லாது இருக்கட்டும் என்று வாழ்த்துவதற்கும் இம் மகா வாக்கியம் பயன்படும்.

ஒரு பேருந்தில் இருக்கும் ஒரு பயணி யோகச் சிந்தனையுடன் இருந்தால் அதன் தாக்கம் ஓட்டுநரின் மனதில் அமைதியும் ஒழுக்கமும் உண்டாக்கும் என்று ஆய்வு செய்து மகேஷ்யோகி கூறியுள்ளார். இம்மகா வாக்கியம் சொல்லச் சொல்ல நினைக்க நினைக்கத் தீமையாவும் விலகி நன்மை மிகும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே "ஒரு பொல்லாப்பும் இல்லை" என்ற மகாவாக்கியம் வாயுறை வாழ்த்து என்று கூறத்தக்கதாகும்.

'முழுவதும் உண்மை' என்பது செல்லப்பா சுவாமிகளால் ஆய்ந்து அனுபவித்த முடிவாக அனுபவ வாக்கியமாக உள்ளது. எத்தனை சமயத்தவர் - அவற்றில் எத்தனை ஞானிகள் - கடவுளைத் தியானித்து உணரும் போது அந்த உண்மை வேறுபடாது யாவும் ஒரே கடவுளாக உள்ளது என்பதும் இவ்வாக்கியப் பொருளாகும். பெரியோர் சொற்களாகிய ஆப்தவாக்கியம் என்பதும் உண்மையே முழுதும் இன்பமாகும். சில வேதாந்தமும், முழுச் சித்தாந்தமும், இரண்டின் சமரசமும் எல்லாம் உண்மையே என்று இவ்வாக்கியம் கூறுகிறது. கடவுள் அனுபவத்தை மறப்போரும் வெறுப்போரும் சொல்வன உண்மையல்ல என்று கூறுவதே இந்த மகாவாக்கியம் கூறுவதாம். ஆன்மிக வாழ்வில் பொய்க்கு இடம் இல்லை. அது நிலைக்காது என்று கொள்க.

"உண்மை முழுதும் என்றால் ஒகெடுவாய்
பின்னைப் பிறப்புண்டோ - நெஞ்சமே"

என்ற நற்சிந்தனைப் பாடலால் இதை முழுதும் உணர்வோம். பிறப்பில்லாப் பெருவாழ்வு பெறுவர் என்றாகிறது.

"உண்மை முழுதும் என ஒதும் மொழியால்
என்னை மறந்தேன் இடர் ஆகின்றேன்
பின்னை ஆச்சரியம் உண்டோ அண்ட பிண்டம் -
இங்கு எல்லாமே போச்சது ஒன்றாப் புகல்."

என்னும் சுவாமிகள் அனுபவப் பாடல் அறிக. இதை உணர உணரப் பிரபஞ்சம் முழுவதும் தன்னை விட்டு நகர்ந்து விலகுவது தெரிகிறது. மூச்சுக் கூட விடுகிறோமா என்பதும் அழியாத அனுபவம் வருகிறது என்கிறார். அதாவது, பூமி தியானத்தில் நடுவில் போய்விடுகிறது. பிரபஞ்சம் நமக்குள் வருகிறது என்ற அனுபவமே இம்மகாவாக்கியத்தின் பொருளும் அனுபவமும் ஆகும். இம் மகாவாக்கியம் அனுபவித்துப் பார் என்று உபதேசம் செய்யும் பொருள் கொண்டது.

'எப்பவோ முடிந்த காரியம்' என்பது பிறிதொரு மகா வாக்கியம். ஒரு நூதனமும் இல்லை - முடிந்த முடிவு - அப்படியே உள்ளது ஆகியனவே அத்தொடர் வாக்கியங்கள். இவையெல்லாம் சேர்த்துப் பார்க்கும் போது இதன்பொருள் விளங்கும்.

"முடிந்த முடிவென்று முன்னின்று சொல்லப்
படிந்தது என் உள்ளம் பதியில்"

என்பது நற்சிந்தனைப் பாடல். இம்மகாவாக்கியத்தைச் சொன்ன போது எல்லாம் கடவுள் சிந்தனையில் பதிந்தது என்கிறார் சிவயோக சுவாமி. அதாவது இப்பிரபஞ்சத்தைப் படைத்தபோது இது இது இப்படி இருக்க வேண்டும் என்று யாவும் நிறைவாக கடவுள் செய்து விட்டார் என்பதாம். விதிவசத்தால் துன்பத்தை யாவரும் போக்கிக் கொள்ள முடியாது என்பதையும் முடிந்த காரியம் என்ற சொல்லால் உணர்த்தியதும் அறியலாம்.

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

'நாம் அறியோம்' என்பது நான்காவது மகாவாக்கியம். கடவுள் அறிவே பேரறிவு – அதாவது முற்றறிவு. நம்முடைய அறிவு சிற்றறிவு. அதைக் கொண்டு ஓரளவுதான் அறியமுடியும். ஆக நம்மால் கடவுள் திட்டம் முழுதும் அறிய முடியாது என்று புலனடங்கி இருப்பதே இந்த மகா வாக்கியம் ஆகும். கடவுள் திட்டம் அறிதலும் - கடவுளை அறிதலும் இயலாதன.

தேடாமல் தேடு, நாடாமல் நாடு, பாடாமல் பாடு என மகான் செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிக்குக் கூறியதாக நற்சிந்தனையில் 'எங்கள் குருநாதன்' என்ற தலைப்பில் 6ஆம் பாடலில் பாடியதை யறியலாம். 'நாம் அறிவோம்' என்பது செருக்கை வளர்க்கும். 'அறியோம்'என்பது பணிவை உண்டாக்கும். இதுவே கடவுள் முயற்சியில் செய்ய வேண்டிய ஆன்மிகமுறை என அறியலாம்.

'நமக்கு ஒரு குறையுமில்லை' நமக்குக் கடவுள் முழுமையான உடலும் மனமும் கொடுத்திருப்பதால் கடவுளின் பூரண அருள் மயமாக நாம் மாற முடியும். ஆகவே நமக்கு ஒரு குறையுமில்லை என்றார். கடவுளின் விசுவாசமான வியாபகத்தன்மையும் அழியாத நிலைபேறும் நம் ஆன்மாவுக்கும் உண்டு. சந்ததமும் எனது செயல் நினது செயல்' என்று தாயுமானவர் கூறியதும் கவனிக்கத்தக்கது. சிவயோகசுவாமிகளுக்கு அவர் குரு பயிற்சியளித்ததாக வரலாறு இல்லை.

தெய்வங்களுக்குத் திருவடிகளே அருள் வழங்கும். கைகள் அழிக்கும். 'செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை' என்று முருகன் கைகள் பகைவரை அழிக்கும் என்று திருமுருகாற்றுப்படை கூறுவதும் காண்க. 'நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூர் எம் பெருமானார் நல்லவாறே' என்றார் அப்பரடிகள். நற்சினையிலே 'இணையடியென் தலைவைத்தான்' என்றதால் இருதிருவடிகளையும் குருநாதன் சிவயோக சுவாமிகள் தலையில் வைத்துத் தீட்சைகொடுத்தார் என்று தெரிகிறது. எனவே பேச்சால் மட்டுமல்லாது ஸ்பரிசத்தால் தீட்சையை வழங்கினார் மகான் செல்லப்பாசுவாமிகள் என்பது அறியலாம்.

நல்லூரில் குருவைப் பார்த்ததும் அவர் சொல் கேட்டதும் தனக்கு எப்படிப்பட்ட சுகம்வந்தது என்று சொல்லமுடியாது என்றார். இது இறையின்பத்தை நுகர்வதாகிய அனுபவம் என்றுணரலாம்.

'ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ்நல்லூரில்
பேசாதன எல்லாம் பேசினான், கூசாமல்
நின்றேன் நீ யாரடா என்றே அதட்டினான்
ஆன்றோயான் பெற்றேன் அருள்'

(நற்சிந்தனை - ஆசானைக் கண்டேன்)

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

சிவயோகசுவாமிகள்வினை முழுவதும்குருவால்நீக்கப்பட்டன என்றால் அவர் கடவுளாகவே இருக்கிறார் என்பதைக் கூறினார். பிறந்தே அனுபவிக்க வேண்டியதைப் பிறவாமல் நீக்கலாம் என்பதாம். குருவே சிவனாகையால் குருவே வினைகளை நீக்கிவிட்டான் என்றார். அதாவது தன்னை அறியச் செய்ததாலேயே முன் வினைகள் அழிந்தன எண்க. தன்னை அறிதலே மேலான தவம் என்று ஒரு பதிகமே பாடியுள்ளார். ஆகவே வினை அழிந்தது என்றார்.

மார்க்கண்டேயர் சிவனின் அருளாட்சிக்குள் புகுந்தபோது கடமை செய்வதற்குரிய தெய்வச்சார்புடைய யமதருமனாலும் எதுவும் செய்ய முடியவில்லை. அதுபோல் "தானே அவன் அவரே தான்" என்று சைவசிந்தாந்தம் சொல்லும் சுத்தாத்துவித நிலையில் இருக்கும் யோகசுவாமியின் குருநாதன் மும்மூர்த்திகளால் அறியப்படாதவரே ஆவார்.

சிவயோகம் என்பதே சித்தமாகிய மனம் மேலும் பலவாக விரியாமல் முழுதுமாக அடங்குவதே என்று கூறப்பட்டது. மனமற்ற நிலையில் இன்பமும் துன்பமும் ஆகிய தாக்கம் உண்டாவதில்லை என்பதை இதில் 'நன்மை தீமை அறியாதான் எங்கள் குருநாதன்' என்று கூறினார். 'நான் தானாய் இருக்கிறான்' இதில் தான் என்பது கடவுள் என அறிக. அதாவது நானே கடவுள் மயமாய் இருக்கிறேன் என்று விளங்கிக் கொள்வதைக் கூறினார்.

குருவின் உணர்வைக் காணல்,செப்புதல், கேட்டல், சிந்தித்தல் என்று எல்லாச் செய்கையும் செய்யும் போது அவர் உருவமும் தெளிவாகும். அவர் உபதேசமும் தெளிவாகும். இதனையே'சித்தத்தில் திகழுகிறான் எங்கள் குருநாதன்' என்று பாடுகிறார்.

காமம் முதலிய எல்லா ஆசைகளையும் வெறுத்து ஒதுக்குக. 'மோகம்' என்பது சிறப்பாகப் பால் உணர்வையே குறிக்கும். விடமுடியாது தவிக்கும் எல்லா ஆசைகளுமே 'மோகம்' தான். பெண் உறவே மோகம். இதில் ஈடுபடும் மனம் பேரின்பத்தைக் கைவிடக் கூடும். ஆகவே 'மோகம்' கூடாது என்று பெருமக்கள் கூறியதாகலாம்.

'முத்திக்கு வித்து எது. என்பதைச் சிவயோகசுவாமிகள் நிரற்படுத்தி 'முத்திக்குவழி' என்று பதினைந்து வரிகளில் ஆசிரியப்பாவொன்றைச் சுவாமிகளே எழுதியுள்ளார்.

'சத்தியம், பொறுமை, சாந்தம், அடக்கம் ஆகிய குணங்களும் அழியும் பொருள் நிலையான பொருள் எது என்ற அறிவும், அடியவர்களைப் பணிதல், அதிகாலை எழுந்து குளித்து குற்றமற்ற திருவைந்தெழுத்தை முறையாகப் பாவித்து குருவைப் பணிந்து திருநீறணிதல், பசிக்கும் அளவே உண்ணுதல், பிறரை வாயார வாழ்த்துதல், சாத்திரங்களைக் கற்றல், பிறரையும் தன்னைப் போல் பேணுதல், பணப்பற்றை விடுதல், பண்பு மாறாத பேச்சுப் பேசல், பிறர் துன்பம் தீர்த்தல், குலம் கோத்திரம் முதலிய பேதம் நீங்கல், எள்ளளவாவது விருப்பு வெறுப்பு இரண்டும் நீங்கி இருத்தல், என்றும் இறைவனடியில் அமர்ந்து வாழ்தல் இவையாவும் தவறாது செய்து வாழ்ந்தால் அவர்கள் முத்தியடைவது உறுதி, என்றும் கூறியுள்ளமை நாம் கடைப்பிடிக்கத்தக்கவை.

குருநாதர் கூறிய மகா வாக்கியங்களாகிய,

"ஒரு பொல்லாப்பும் இல்லை
எப்பவோ முழந்த காரியம்
நாமறியோம்
முழுவதும் உண்மை"

இவைகளை மனதிலே பதியவைத்தால் மனோவேகம் முதலிய எல்லா வேகமும் அடங்கும். மனோவேகத்தைத் தவ முயற்சியால் கட்டுப்படுத்தினால் முகத்திலும் அகத்திலும் சாந்தி ஏற்படும். அது தெய்வநிலையை அழைத்துவரும்.

'சத்தியம்' என்பது எல்லாம் அழியும் நிலையிலும் கடவுள் மட்டும் அழியாது இருப்பதேயாம்.

வாசியோகம் என்பது மூச்சுப்பயிற்சி.அதாவது பிராணன் கட்டுப்படும் யோகமே வாசியோகம். பிராணாயாமம் செய்வதால் உடலின் பல வகை இயக்கங்கள் சரியாக்கப்படுகின்றன. மூச்சை மாற்றி மாற்றி விடுவதால் இரத்தக் குழாய் வேகமும் இதயத்தின் வேலையும் சரியாக்கப்படுகின்றன. 'வாசியோகம் தேர்' என்று கூறியுள்ளமையால், கற்கவேண்டும் என்றோ பயில வேண்டும் என்றோ கூறாமல் தேர் (ஆய்க) அனுபவத்தால் அறிக என்றார். உடம்பு வலிமையாகவும், நோய் நொடி இல்லாமலும் ஆயுள் வலிமையாலும் யோகம், தவம் ஆகிய முயற்சிகளிலும் ஒருவன் வெற்றி பெற முடியும் ஆதலால் 'வாசியோகம்' தேர் என்றான் என்று கூறினார்.

'காசிதேசம் போ' - காசி என்பது பிரகாசம் என்பது போல ஒளி என்று பொருள் கொள்ளலாம். கங்கை காசியில் வடக்கு நோக்கி ஓடுகிறது. கங்கை தோன்றிய திசையை நோக்கி ஓடுவதால் காசிக்கு சிறப்புமிகுதி. 'காசி' கங்கையின் மேற்குக் கரையில் உள்ளது. எனவே கிழக்கில் வரும் சூரிய ஒளியில் காசிநகரம் சிறப்பாக ஒளிர்வதால் காசி என்று பெயர் வந்தது. வடக்கு 'புண்ணிய திசை' எனப் புகழப்படும். இங்கு 'காசி' என்பது சித்தர் பரிபாஷை. குஹ்யஉக்குறி. இங்கு புருவத்திற்கு மேல் 'யோகம் பண்ணல்' என்பது பொருள். இது உட்பொருள்.

'கங்குல்பகல்' என்பது இங்கே 'நினைப்பு மறப்பு' எனும் பொருளிலே வந்துள்ளது.

'கருவழியைக்கட' என்பது நற்சிந்தனை. காம இச்சையால் ஆண் பெண் சேரும் இன்ப முயற்சியைக் கடந்து செல் என்று எங்கள் குருநாதன் சொன்னான். விளக்கம் மனிதரில் ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தை பெறுவதற்கு ஆதாரமாக உள்ள வழிகளைக் கருவழி என்றார். இது ஆணுக்கு மட்டும் கூறியதல்ல. பெண்ணுக்கும் கூறியது என்பதைத் தெளிவு செய்யவே கருவழி என்று கூறினார். ஆணுக்குக் கருவை உண்டாக்கத் துணை செய்யும் வழி எனவும், பெண்ணுக்கு ஆண் சாரத்தை ஏற்றுக் கருவை உருவாக்கும் வழி எனவும் கொள்க.

உடலின் முதன்மையான சக்தியும் பயனும் வீணாகிவிடக் கூடாது என்பதால் 'கடந்து போ' என்று கூறினார். வலிய முறையில் முயற்சி செய்யாது - மன விருப்பம் ஏற்படாது. அதை நீக்குக என்பதால் 'கடந்து போ' என்றார். ஓர் உடலை உயிரை உருவாக்கும் சக்திகள் வீணாக்கப்படாது இருந்தால் அப்படிச் சேமித்த உடல் வலியையும் யோக முயற்சியில் வெற்றியும் கொள்ளும் என்பதாலும். எனவே மனத்தைக் காமத்திலிருந்து விலக்குவது ஐந்து புலன்களிலிருந்து விலக்கிக் கொண்டு வருவதாகும்.

ஆன்மிக அனுபவங்களை ஒருவரும் முழுதும் அறியமாட்டார்கள் என்று எங்கள் குருநாதன் கூறினான். உடலியல் அறிஞரும், மனோவியல் அறிஞரும் யோகிகளும் ஆன்மிகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் தவிர வேறு ஒருவரும் இந்த உண்மைகளை - அனுபவங்களை அறியமாட்டார்கள் என்றான் எங்கள் குருநாதன் என்கிறார் சிவயோக சுவாமிகள்.

மந்திரங்களின் முன்னாலும் நாமங்களின் முன்னாலும் உச்சரிக்கப்பெறும் 'ஓம்' என்பது அம்மந்திரங்களை ஏற்றிச் செல்லும் வாகனமாகப் பயன்படும். பிற ஓசைகளால் மந்திர ஓசை தடைப்படாது இது காப்பாற்றும் எனவும் அறிதல் வேண்டும்.

'அக்குமணி அணியென்றான் எங்கள் குருநாதன்'. உருத்திராட்ச மாலையை அணிந்து கொள் என்றான் எங்கள் குருநாதன். அக்குமணி - உருத்திராட்சமணி. உருத்திரன் திரிபுர சம்ஹாரம் செய்யும் போது அவர் கண்ணிலிருந்து உண்டான விதையிலிருந்து முளைத்ததால் உருத்திரனின் கண்மணி எனப் பெயர் வந்தது. பாவங்கள் நீக்கும். எப்போதும் சிவ சிந்தனை வரவேண்டுமென்பதே இதை அணிவதின் சிறந்த காரணமாகும். பெரிய மணிகளைத் துறவிகளே அணிவர். சிவபூசை செய்வோர் இதை அணிந்தே செய்ய வேண்டுமென்பார்.

திருவைந்தெழுத்தாகிய 'சிவமந்திரத்தை ஓதுக' என்றான் எங்கள் குருநாதன்.

மற்ற உயிரின் துன்பத்தைத் தன் துன்பமாகவே உணர்வதுதான் அறிவு பெற்றதன் பயன். தேடமுடியாததைத் தேடு என்பது என்ன என்றால் கடவுளைப் பக்தியோடு நாம் அழைத்தால் இடைவிடாது நினைத்தால் அவராகவே நம்மை வந்தடைவார் என்பதாம்.

வையகம் (பூமி) வாழ்வதற்காகவே படைக்கப்பட்டதால் அந்த வாழ்க்கை வாழ்வது கடவுள் எண்ணம் என்று குரு கூறினார் என்பர் சிவயோக சுவாமிகள். பிறருக்கு உதவி வாழ்வதைக் கடவுள் விரும்புகிறார்.

மற்றவரைத் தாழ்த்துவது ஆன்மாவைப் பரிகசிப்பதாகும். இதையே புலையனாக வந்து கடவுள் ஆதிசங்கரருக்கு உணர்த்தினார்.

பழகாததை 'நரி' என்றும் - பழகுவதை 'பரி' (குதிரை) என்றும் யோகியர் மறைபொருளாகத் தமது பரிபாஷையிலே கூறுவர். நரியைப் பரியாக்கினான் என்பது பழகாத ஒன்றை யோகத்தால் பழக்கினான் என்றே வரும். நரியைப் பரிபோல் யாரும் பழக்கியதில்லை. இது மாணிக்கவாசகர் வரலாற்றிலே வந்தது. நரியை இறைவன் பரியாக்குவான் என்று அப்பரும் கூறியுள்ளார். எனவே பச்சைப் புரவி என்பது பிராண சக்திபற்றிய மறைமுகக் குறிப்பு என்பதாகும்.

பிராணன் என்பது நமக் குள்ளே உண்டாகி மூச்சு வழியாக வெளிப்படுத்துவதே யாகும்.

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

இக்கட்டுரையாளருக்குத் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே கற்பித்த பேராசான் 'அறிவொளி' மாவை. த.சண்முகசுந்தரம் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல் 'ஈழத்துச் சித்தர் சிந்தனை விருந்து'(1984) என்பதாகும். 'மகான் செல்லப்பர்' என்று தலைப்பிட்டு அவரெழுதியவற்றை இனி நோக்கலாம்.

"அங்கே ஒரு நெருப்பு
இங்கே ஒரு நெருப்பு"

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முக்கியமானவர் செல்லப்பா சாமியார். இவரே கொழும்புத்துறை குரு மகான் சிவயோகசாமியின் குரு செல்லப்பாச் சாமியாரை 'விசர்ச் செல்லப்பா' என்பர். இவருடைய போக்கும் கூற்றுக்களும் புதுமையானவை. உலகியல் நோக்கில் நின்று இவற்றை விளக்க இயலாது. மெய்யறிவு நிலையில் இருந்து மட்டும் விளக்கலாம். மேலும் இவருடைய கூற்றுக்களில் வருகின்ற சொற்கள் யாவும் சாதாரண கருத்தை உணர்த்துபவை அல்ல. இது சித்தர் பரம்பரையின் போக்கு.

சிவயோக சுவாமிகளின் குரு 'மகான் செல்லப்பா சித்தர் அல்லர். அவர் மெய்ஞானி, ஞானவான் எனக் கொள்வாரும் உளர் 'சித்தர்க்கு முத்தி இல்லை' என்பது ஒரு சாராரின் கருத்து. சித்தர்கள் கடும் நோன்பு இருந்து அட்டமாசித்திகளைப் பெற்றவர்கள். தாங்கள் பெற்ற தவத்தைச் சித்து விளையாடிச் செலவு செய்பவர்கள் எனவும் இச் சாரார் வாதிடுவர்.

'உண்மையான ஞானியைச் சமாதி வைத்தால் அந்த இடத்திலே சிவலிங்கம் தானாகவே தோன்றும். அப்படித் தோன்றாவிட்டால் அவர் ஞானி அல்லர் என்றும் இச்சாரார் கருதுவர். எது எப்படி இருப்பினும் மகான் செல்லப்பா பற்றி எந்தவிதமான பிரசாரமோ அல்லது புகழ்பாடுகின்ற முயற்சியோ இருக்கவில்லை. இருந்தும் வாழையடி வாழையாக அவர் புகழ் வளர்ந்து வந்துள்ளது. அவரின் போதனைகளை அவரின் சீடர் பரம்பரை நன்கு பேணி வந்துள்ளது. தான் செய்த தவத்தைத் தான் சீடர்சிவயோக சாமியிடம் கையளித்துப் போனார் என்பர். எது எவ்வாறாக இருப்பினும் ஈழத்து மெய்யியல் வாழ்க்கையின் தனிக் கலாங்கரை விளக்கமாகவே செல்லப்பா சாமியார் திகழ்கின்றார் என்பதில் அவரின் சீடர் பெருமையடைவர். இவர்களின் கூற்று - போதனை எல்லாம் உயர்ந்த படியில் நின்று செய்யப்பட்டவை. விசர்ச் செல்லப்பாவின் புகழ் பெற்ற நிகழ்ச்சி ஒன்றுக்கு விளக்கம் தரலாம். இதனை எனக்குக் கூறியவர் என் அருமைத் தந்தையார் ஆ.தம்புச் சட்டம்பியார். இவர் யோகர் சாமியின்

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

இளமைத் தோழன். என் தந்தையார் எனக்குச் சொல்லியவற்றை அப்படியே இங்கு பதிந்து வைக்கிறேன் என்று எழுதுகிறார் என் குருநாதர் மாவை 'தசம்' அவர்கள்.

"செல்லப்பா அடிகளார் ஒருநாள் தவம் கலைந்து நல்லூர்க் கோயிலுக்கு வந்தார். அப்போது அவருக்குப் பசி எடுத்தது. தனக்கு விருப்பமான அடியார் ஒருவர் வீட்டிலேபோய் உணவு கேட்டார். பிற்பகல் நான்கு மணி. அப்போது வீட்டில் உணவு இல்லை. அந்த அடியார், சாமி உணவு முடிந்துவிட்டது. இதோ காய்பிஞ்சு எல்லாம் இருக்கின்றன. என் மனைவி உடனே திருவமுது செய்விப்பார் தங்களுக்கு என்றார். அப்போது அந்த அம்மையாருக்குக் காய்ச்சல். இதனைத் தன் அகக் கண்ணால் உணர்ந்து விட்டார் அடிகளார்.

நல்லது, அரிசி, காய்பிஞ்சை அப்படியே தா. நான் சமைப்பேன். உன் பத்தினிக்கு நாளை சுகம்வரும் என்றார். அரிசி காய் பிஞ்சைப் பெற்ற செல்லப்பா அடிகளார் நேரே நல்லூர்க்கந்தன் கோயில் கிழக்கு வாசலுக்கு வந்தார். இரண்டு முறை ஒரு குடுவையில் அரிசியைக் கிள்ளிப் போட்டார். அடுப்பை நன்கு எரித்தார். அடுப்பு எரியும்போது காய் பிஞ்ஞ்களைப் பாகஞ் செய்தார். அவிசு வைப்பதே அடிகளார் நேர்க்கம். அடுப்பு நன்கு எரிந்து கொண்டிருந்தது. நெருப்புச் சுடர் நான்கு பக்கமும் வீசியது.

அவிசு எரிந்து போகாமல், அடுப்பைச்சற்றுத் தணித்து விட்டார். நல்ல மணம் குடுவையிலிருந்து வந்தது. பசி மேலீட்டினால் அவரின் வாயிலிருந்து உமிழ்நீர் சுரந்தது. அது கடைவாய்ப் பக்கத்தால் வழிந்தது. அடிகளாருக்கு இது பிடிக்கவிலலை. தன்மீது அவருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே'ஏய் வயிறு நீ என்ன செய்கிறாய்? இந்தக் கட்டையை இப்படி ஆட்டலாமா? வயிற்றுப்பசி முருக தாகத்தை இல்லாமற் செய்து விட்டதே' எனப் புலம்பினார். பின்னர் குடுவையைப் பார்த்தார்"ஏய் குடுவை! நீ எனக்கு இன்று நல்லபாடம் படிப்பித்தாய்" என்றார். சிறிது வேளை தியானத்தில் ஆழ்ந்தார். புலம்பினார், அழுதார் தனக்குள் தானே பேசினார். புலன் அடங்கவில்லை என்ற கவலை.

அங்கே ஒரு நெருப்பு
இங்கே ஒரு நெருப்பு

என்றார். மீண்டும் மௌனம் நிலவியது. 'அங்கே குடுவை கொதிக்கிறது. இங்கே குடுவை கொதிக்கின்றது என்று கூறினார். விறகுக் கட்டையை எடுத்துக் குடுவையை உடைத்தார். மீண்டும் மௌனமாக இருந்தார். இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டு நின்றனர் சிலர்.

பார் விசர்ச் செல்லப்பாவின் கூத்தை, பசி என்று மனிதன் சமைத்தது, பின்னர் விறகுக் கட்டையால் பானையை உடைத்துவிட்டது. அவிசு அடுப்பிலே அப்படியே சிந்திக்கிடக்கின்றது. இந்தப் பைத்தியத்துக்குத் தான் தருமம் பிச்சை போடுவது பிழை என்றனர். இவை அடிகளார் காதிலே பட்டனவோ என்னவோ தெரியாது, அவர் மீண்டும தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

தொடர்ந்து எழுதும் 'தசம்' அவர்கள், அடிகளார் கூறியவற்றை இங்கு ஆராயலாம்.

அங்கே ஒரு நெருப்பு இங்கே ஒரு நெருப்பு. அங்கே ஒரு நெருப்பு என்பது அடுப்பிலே எரிகின்ற நெருப்பு. இங்கே ஒரு நெருப்பு என்பது வயிற்றுப்பசி. இது கொள்ளிப்பசி. 'உதாரக்கினி' என்பர் வடமொழியாளர். அதாவது வயிற்று நெருப்பு என்பது பொருள்.

'அங்கே குடுவை கொதிக்கின்றது.
இங்கே குடுவை கொதிக்கின்றது'

அடுப்பிலே இருந்து கொண்டு குடுவை கொதிக்கின்றது. இங்கே வயிறு என்கிற குடுவை கொதிக்கின்றது என்பது பொருள். அந்தக் குடுவை கொதித்தால் உணவு கிடைக்கும். இந்தக் குடுவை கொதித்தால் என்ன பயன்? சிவத்தியானமே இல்லாது போய்விடும். இதுதான் செல்லப்பா அடிகளாரின் ஏக்கம். அந்த ஏக்கத்தினால் அவர் மீண்டும் தியானத்தில் ஆழ்ந்துவிடுவார்.

இது இப்படி இருக்க அடிகளாரது சீடருடைய மனைவியின் காய்ச்சல் உடனே நின்றுவிட்டது. உடலைச் சுத்தம் செய்த அந்த அம்மையார் ஏதோ ஓர் எண்ணத்தினால் உந்தப்பட்டார். உடனே பிட்டு அவித்து அரையலும் தயாரித்தார். சுத்தமான பெட்டியில்பிட்டையும்அரையலையும்கணவனும்மனைவியும் எடுத்துச் சென்றனர் தங்கள் குருவிடம். இவர்களை காணாமற் கண்ட அடிகளார் கண்ணைத் திறந்தார். அவித்த அடுப்பையும் உடைந்த குடுவையையும் பார்த்த அந்தச் சீடர் எதுவும் பேசவில்லை. குரு பக்தி அப்படி.

"டேய்என்னபார்க்கிறாய்?குடுவைஉடைந்துபோய்விட்டது உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? செல்லப்பாவின் போக்கு இப்படித்தான் என்று நினைக்கிறாய்' என்றார் அடிகளார்.

சாப்பாடு முடிந்துவிட்டது. எழுந்து போய் அடிகளார் கிணற்றிலே வாயைக் கழுவினார். மீண்டும் அமைதி நிலவியது. அடிகளார் பேசினார்.

"மகனே கேள். இது மண்ணால் செய்தபானை. இந்த உடம்பான பானையும் ஒருநாள் உடையுந்தானே. இதற்கு ஏன் கவலைப்பட வேண்டும்" என்று அறிவுரை வழங்கினார். அந்த அடியாரின் பெட்டியில் ஒரு பிடி மண்ணைக் கிள்ளிப் போட்டார். "மகனே என் நிலையில் உனக்குத் தர ஒன்றும் இல்லை. இதுதான் என் நன்கொடை" என்றார். அந்த அடியார் பின்னர் தனதானியம் பூமிச்சிறப்பு எல்லாம் பெற்று வாழ்ந்தார் என்பது செவிவழிவந்த கதை. அடியார் யார் என்பது தெரியவில்லை. தெரிந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இந்தப் பின்னணியைப் பலர் விளங்குவதில்லை. "செல்லப்பாச் சாமியார் சமைப்பார். கொதிக்கும் போது பானையை உடைப்பார்" என எழுதிப் போயினர். தவநிலையை, உயர்ந்த சிந்தனையை இந்த நிகழ்ச்சி விளக்குகின்றது. இவரைப்பற்றி இப்படி எத்தனையோ கதைகள் இருப்பதாகக் கேள்வி. இவற்றை வினவிப் பதிந்து வைத்திருந்தால் நன்று. இதற்குச் சிவயோக சாமியார் நிறுவனத்தரர் ஆவன செய்ய வேண்டும். இப்படியான குறிப்புகள் ஆராய்ச்சிக்கு உதவும்.

சாமியாரின் ஞான்பரம்பரையைப் பற்றி அறிய இவை உதவும். செல்லப்பா சாமியாரின் பரம்பரையில் வந்தவர் குடைச் சாமியார். இவர் சில காலங்களுக்கு முன்னர் அடங்கிவிட்டார். இது இவராற் கையாளப்படுகின்ற சொற்றொடர்.

'யோகர் சாமி' பற்றி என் ஆசான் சண்முகசுந்தரம் அவர்கள் மேலும் எழுதுவதாவது:

"யோகர் சாமிகள் என் தகப்பனாரின் நண்பன். அந்த முறையில் என்னைச் சாமிக்குத் தெரியும். அவரைத் தேடிப் போய் நான் வணங்குவதில்லை. காணும் இடங்களில் மிகவும் அடக்கமாக - மரியாதையாக நான் நடந்து கொள்வேன். படித்துப் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பின்னர் தினகரன் ஏட்டிலே மூன்று ஆண்டுகள் வரை பணி புரிந்தேன். இந்தக் காலத்தில் ஒரு நாள் யோகர் அடிகளார் என்னைப் புத்தகக் கடை ஒன்றிலே கண்டு விட்டார். புத்தக அலுமாரியைத் திறந்துவிட்டுப் புத்தகங்களைப் பார்வையிட்டேன். சுவாமிகள் என்னை நோக்கி வருவது கண்ணாடி மூலம் தெரிந்தது. என்னருகே வந்தார்.

'கற்றது ஆங்கிலம்
பற்றுவது தமிழ்'

என்றார். நான் எதுவும் பேசவில்லை.

'கேட்டதோ' என்றார் மீண்டும்

'ஓம் சாமி' என்றேன்

'விளங்குதோ' என்றார் சாமியார்.

'ஓம் சாமி' என்றேன்.

'எங்கே விளங்கப்படுத்து பார்க்கலாம்' என்றார்.

'நல்லது சாமி, நான் ஆங்கிலத்தில் தான் கற்றுப் பட்டம் பெற்றேன். தமிழை ஒரு பாடமாகவும் பல்லைக்கழகத்திலே படித்தேன்.வீட்டிலும் தமிழ் படித்துள்ளேன். இப்போது தினகரன் ஏட்டிலே தமிழிலே எழுதி அதனையே தொழிலாகக் கொண்டுள்ளேன். அங்குதான் உதவி ஆசிரியராக பணி புரிகின்றேன். அதனைத் தான் சாமியார் குறிப்பிடுகிறார் என்பது என் விளக்கம்' என்றேன்.

'நல்லது. ஆனால் நீ அங்கே கனகாலம் நிற்கமாட்டாய். தமிழைப்படி: தமிழிலேயே பேசு. தமிழிலேயே நிறைய எழுது.நீ கட்டாயம் எழுதுவாய் எழுதுவது நற்பணி. தொழுவதும் நற்பணி' என்றார்.

'நல்லது சாமி' என்றேன்.

'நான்சொன்னதுபொதுவாக இக்காலத்தில் உள்ள ஆங்கிலம் கற்ற எல்லோருக்கும் பொருந்தும். குறிப்பாக உனக்குப்பொருந்தும்.'கற்றது ஆங்கிலம் பற்றுவது தமிழ்'. தமிழை இறுகப் பிடித்துக் கொள். தமிழைப் பிடித்தால் முருகனையும் சேர்த்துப் பிடித்துக் கொள்வாய். எழுது நிறைய எழுது. எழுத்திலே வெற்றி காண்பாய். எழுத்திலே இன்பம் பிறக்கும். சரிபோய் வருகிறேன்' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். இது நிகழ்ந்தது 1953ஆம் ஆண்டிலே. இன்று (1984) நிகழ்ந்ததைத் திரும்பிப் பார்க்கின்றேன். தினகரனை விட்டு விலகினேன். எழுத்துலகில் புகுந்தேன். என் எழுத்துலக வேலைகளையும் சாமியார் சொன்னதையும் யோசித்துப் பார்க்கிறேன் எனக்கு மட்டுமன்றி இன்று எல்லோருக்கும் அவர் பொன்வாக்குப் பொருந்தும். 'கற்றது ஆங்கிலம் பற்றுவது தமிழ்'.

தவத்திரு சிவயோக சுவாமிகள்



சிந்தனைக்களம்

அடிக்குறிப்பு

1. பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், "வித்தின்றி நாறு செய்வான்" (எ+டு) நூல், முனைவர் அ.அறிவொளி, (2012), பாரதி ஓப்செட் பிரிண்டர்ஸ், சென்னை, ப.8.

சிவத்தியானம்

ஓ மனிதனே! நீ உண்மைப்பொருள். கேடற்றவன். உனக்கு ஒருவருங் கேடு விளைவிக்க முடியாது.நீ இங்கும் அங்கும் எங்கும் உள்ளவன். உறுதியுடனே சிங்கங் கானகத்தில் திரிவது போல் உலகமாகிய கானகத்தில் திரி. எந்த விதத்திலுந் தளர்வடையாதே. ஒரு நூதனமுமிங்கில்லை. முழுதுமுண்மை. ஒரு பொல்லாப்புமில்லை.

நற்சிந்தனை

தெய்வத்தை நம்பு. முழுமனத்தோடு நம்பு. உலகில் உனக்கினியதெனக் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும்போதும் நிற்கும்போதும் நடக்கும்போதும் கிடக்கும்போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலுந் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

சிவபெருமான் அத்துவிதமாக இருக்கிறார்.அடியேன் அவரே எனத் தியானிக்கும் மகிமை எனக்குண்டு. ஒருவன் எப்படி பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான். ஆகையால் 'நான் அவனே' என்று தியானஞ் செய். அப்போது உன் செய்கைகள் அனைத்தும் அவன் செய்கையே யாகும். அவனைத் தவிர வேறு பொருள் இல்லை அவனே அனைத்தும்.அப்படியான அவனே தன்னைப் பல கோலங்களாக்கி விளையாடுகிறான். அவனுக்குப் பிறப்பில்லை ஆதியந்தமில்லை.ஒரு மாறுதலுமில்லை.முழுதுமுண்மை.

– யோகர் சுவாமிகள்

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

மாமன்றத்தின் ஏற்பாட்டில் 2015.03.07ஆம் திகதி நடந்த சிந்தனைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துரை

சிவனடிக்கன்பே சிவயோகமாகக் கண்ட தவமுனி

கலாநிதி ம. பாலகைலாசநாதசர்மா
சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்

அறிமுகம் :

சிவயோக சுவாமிகள் சிவனடிக்கன்பு என்ற விடயத்தை மிகவும் ஆணித்தரமாகவும் அநுபவமூலமாகவும், தாம் பெற்ற சித்தாந்த நுண்ணறிவினாலும் தனது வாழ்விலும் நற்சிந்தனையிலும் விளக்கமாகக் கூறியிருக்கின்றார். அன்பு, பக்தி, பாசம், பாசநீக்கம், சிவயோகம், சிவதர்சனம், ஆத்மதர்சனம், சச்சிதானந்தம், சாதனாநெறிமுறைகள் எனும் பல்வேறு நிலைகளிலே சிவனடிகன்பே சிவயோகம் எனும் உயர்ந்த உண்மைப் பொருள் கொண்ட கருத்தை தனது நற்சிந்தனைகளிலே வலியுறுத்திக் கூறியதோடு தம் வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்தி எடுத்துக்காட்டி வாழ்ந்துகாட்டிய தவமுனிவராகவே சிவயோகசுவாமிகளின் சிந்தனைகள் காணப்படுகின்றன.

சிவனடிக்கன்பு செய்வர் அனைவரையும் சிவமாகவே காண்பர் என்பது உண்மையே. "பக்தி செய் யோக சுவாமி" எனத் தம்மைத்தாமே பெயரிட்டு அழைக்கும் யோகசுவாமிகள், அன்பே கடவுள் எனக் குறிப் பிடுகின்றார்."அன்பே கடவுள், அன்பே உலகம், அன்பே உயிர்கள், அன்பே அனைத்தும், அன்பே ஆவதும் அழிவதும் போலாம் அன்பின் அதிசயம் ஆறறிவாரே" என அன்பின் நிலைகளை எடுத்துக்காட்டுகின்றார்.

அன்பு – பக்தி :

அன்புக்கு இடங்கொடுத்த சுவாமிகள் பக்தியையும் வலியுறுத்துகின்றார்.

"சிவபக்தியாலே சிந்தை குவிந்தது
சிவபக்தியாலே சிந்தை தெளிந்தது
சிவபக்தியாலே சிந்தை சிறந்தது
சிவபக்தியாலே சீவன் முக்தியே"

படர்க்கை நிலையில் வைத்துப் பக்தியின் உயர்வைக் காட்டிய சுவாமிகள் பக்தியால் பெற்ற அனுபவங்களை கூறுகின்றார்.

"பக்தி செய்து பந்தத்தை நீக்கினேன்
பக்தி செய்து பரமனை கண்டேன்
பக்தி செய்யும் பாக்கியம் பெற்றேன்
பக்திக் கடலிற் படர்ந்திருந்தேன்"

இவ்வாறாக பக்தியையும் சுவாமிகள் குறிப்பிடுவது மனங் கொள்ளப் பாலது.

உபாயநெறி – சத்தியநெறி:

வேதாந்திகள் பாசம் நீக்கி இறைவன் மீது அன்பு செய்ய வேண்டுமாயின் பின்வரும் செயற்பாடுகளைக் கூறுகின்றனர். அவையாவன கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைக் கூடுதல் என்பனவாகும். அவற்றை யோகிகள் பக்தியோகம், கர்மயோகம், ராஜயோகம், சிவஞானயோகம் எனக் கூறுவர். சித்தாந்திகளும் சிவனடியார்களும் அவற்றைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என குறிப்பிடுவார்கள்.

இந்தக் கேட்டற் சாதனையை மறுசாதனைகளைப் போல இரண்டு நெறிகளில் நாம் அனுட்டிக்கலாம்.

ஒன்று உபாயநெறி என்பது மற்றது சத்திய நெறியாகும். உபாயநெறி என்பது உலக நன்மைக்காகப் பலன் கருதிச் செய்யப்படுவதாகும். சத்தியநெறியானது ஆத்மீக விடுதலையின் பொருட்டு பலன்கருதாது செய்யப்படும் சாதனையாகும்.

உபாயநெறி பாசிக்குளத்தில் கல்லெறிதல் போலும், பசித்தவன் புசித்தல் போலும் தற்காலிகமான பேற்றைக் கொடுப்பதாகும். அது மன இந்திரிய விழிப்பு நிலையில் கேட்கலாம். அதன் மூலம் சுட்டறிவையும் பணம்,புகழ், பட்டம் முதலியவற்றையும் சம்பாதிக்கலாம். அவை ஆத்மீக விடுதலைக்குப் பதிலாகப் பாசப்பிணைப்பை அதிகரிப்பனவாகும்.

யோகசுவாமிகள் ஆத்மீக விடுதலையின் பொருட்டு சத்திய நெறியில் இம்மியளவும் தவறாது நின்றே இறைபணி ஆற்றினார். அவர் சகலசீவராசிகளிடமும் அன்பின் பொருட்டே அன்பு செலுத்தினார். அநேகமான துறவிகளைப்போல அவர் அன்பில் வாணிபம் செய்ததில்லை. எல்லோரிடத்திலும் சமமாகவே பழகினார். உயர்வு, தாழ்வு, ஏற்றம், இறக்கம் பாராது ஒரே முகமாகவே அனைவரையும் நோக்கினார்.

அனுஷ்டான முறை:

உபாயநெறி அனுஷ்டானங்களைப் பொதுவாகப் புறப்பூசை (பராத்த பூசை) எனக் கூறுவர். சத்திய நெறிச் சாதனைகளை அகப்பூசை (ஆத்மார்ந்த பூசை) அல்லது அந்தர்யாக பூசை என விளக்குவர். இவ்விரு பூசைகளைப் பற்றி தெளிவுபடுத்தும் உபநிடதச் சுலோகம் ஒன்றை இங்கு நினைவுகூர விரும்புகின்றோம்.

"பிரதமா பிரதமா பூஜா
ஜெபஸ் தோத்திரம் மத்தியமா
உதமா மானஸி பூஜா
சொகம் பூஜோத்த மோத்தா"

இச்சுலோகத்தில் சாதகர்கள் ஆரம்பக் கட்டத்தில் செய்யும் புறப்பூசையாகிய விக்கிரம வழிபாட்டை அதமமானதென்றும், ஜெபதோத்திரம் செய்து வழிபடுதலை மத்தியமான தென்றும், அகப்பூசையை உத்தமமான தென்றும், சிவோகம் பாவனை எனப்படும் சோகம் பூஜனையை உத்தமத்திலும் உத்தமமான தென்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்நான்கு படிமுறைக் கிரமத்தில்

பூசைசெய்து ஆத்ம ஈடேற்றம் பெற விரும்பும் சாதகர்கள் ஆரம்பப் படியிலே நின்று கொண்டு படியேற்றம் பெற்றுவிட்டதாக தற்பெருமை கூறினாற் போதாது. படியேற்றம் என்பது ஒருபடியைவிட்டு மறுபடிக்கு ஏறுதலாகும். ஒரே படியில் என்றும் நிற்றல் படியேற்றம் ஆகாது. மனித இனம் உலகில் தோன்றி நீண்டகாலம் ஆகிவிட்டதென விஞ்ஞானிகள் கணிக்கின்றனர். இத்தகைய காலமாகப் பெரும்பான்மை ஆத்மீக முன்னேற்றத்தில் ஆரம்பப் படியில் நின்று கொண்டு சமய முன்னேற்றம் அடைந்துவிட்டதாக பெருமை கொள்வதில் பிரயோசனமில்லை படியில் அசையாது நிற்கும் அபிமானத்தை விடாதவரைக்கும் படியேற்றம் பெறுதல் பகற்கனவாகும். சுருக்கமாக சொல்வதாயின் படிகள் யாவற்றையும் தாண்டினாற்தான் குறித்த இடத்தை நாம் அடைய முடியும். படியில் நிற்றல் யாத்திரை முடிவு ஆகாது.

சுவாமிகளின் மஹா வாக்கியங்களில் ஒன்றான எப்பவோ முடிந்த காரியம் எனும் மகாவாக்கியத்தின் மறை பொருளை நாம் வழுவற உணர்தல் வேண்டும். யோகசுவாமிகள் முக்கியமாக அநுட்டித்த சிவயோகம் பாவனைப் பூசையை நாமும் அனுசரிப்பதற்கு அவசியமாகும் அதனைப் பின்பற்றுவதற்கும் ஏதுவாகும்.

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய ஒரு திருவாசகம் சிவோகபாவனை செய்வதற்கு உத்தம வழிகாட்டியாக உள்ளது. எப்பவோ முடிந்த காரியம் என்பதையும் தெளிவுபடுத்துகிறது. அது "இறைவனே! நீ என் உடலிடங் கொண்டாய்! இனி உன்னை என்னிரக்கேனே!" என்பதாகும். இறைவன் எம் உடலிற் குடிகொண்டு உயிருக்கு உயிராகவும் அறிவுக்கு அறிவாகவும் உள்ளான். அது எப்பவோ முடிந்த காரியம் என்ற உண்மையை உணர்த்துகிறது

இறைவழி:

"பொறிவழி ஒடுபவன் பரதந்திர னாவான்
இறைவழி மிளிர்பவன் சுதந்திர னாவான்."

யோகசுவாமிகள் இறைவழி மிளிர்ந்தவர் ஆவார். தன்னிடம் எப்பவோ முடிந்த காரியமாக மறைந்திருந்த அருளொளியை பாசநீக்கத்தால் மிளிரப்பெற்ற மகானாவார். அவர் காட்டியவழி இறைவழியேயன்றி பரதந்திர வழியல்ல. அவர் எவரையும் பரதந்திரராகத் தன்மீது தங்கியிருந்து தன்னுடைய அடிகளை வழிபட்டு ஆத்ம விடுதலை பெற முயற்சிக்கும்படி கூறவில்லை. ஒருவரையும் அவர் தனக்கு தாசனாக இருக்கும்படி கூறவில்லை. ஒருவரையும் அவர் தனக்கு தாசனாக இருக்கும்படி வேண்டியதுமில்லை. இறைவனையே அவர் ரட்சகராக வழிபட்டார். அதுவும் அவனே தானாகிய அத்துவித நெறி நின்று- அது எப்பவோ முடிந்த காரியம் எனத்தெளிந்து- வழிபட்டார். எனவே சிவனடியார்கள் எவரும் யோகசுவாமிகளுடைய அடிகளை வழிபட வேண்டியதில்லை. அவர் காட்டிய இறைவழியைச் சுதந்திரமாக அனுசரித்தலே சிறந்த சாதனையாகும். இச்சாதனையே சிவயோகி நிலையை தரும் என எடுத்துரைத்தார்.

சிவயோக நிலையில் திருவடி வழிபாடு:

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

சிவனடியின் மறைபொருள் சுத்த சத்தியாகும். சிவனடியை வழிபடும் அடியார்கள் சுத்தசத்தி பெறுவார்கள். திருவடி வழிபாடு அந்தர்யாகப் பூசையைக் குறிப்பதாகும். அது மானிட குருமார்களின் காலடிக்குப் புறப்பூசை செய்வதன்றி சுத்த சத்தியும் ஆத்மாவும் அத்து விதமான ஒருமைப்பட்டுள்ளனவாகும். இதைத் தெள்ளத் தெளிய உணர்த்த யோகசுவாமிகள் தமது நற்சிந்தனை நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"அவனே நானென்று சொல்லித் தியானம் செய்தினமும்
ஆசை எல்லாம் ஒழியும் ஈசனருள் பொழியும்."

என எமக்கு சுவாமிகள் உபதேசித்துள்ளார். அவனே நானென்று சொல்லித் தியானிப்பதற்குரிய உபநிஷத வாக்கியம் "சோகம்" என்பதாகும். இப்பதம் "சோ" என்றும், "அகம்" என்றும் பகுக்கக்கூடியதாகும். "சோ" அவனையும் "அகம்" நான் எனும் ஆத்மாவையும் குறிப்பதாகும். இந்த மந்திர உச்சாடன ஜெபதியானம் சிவோகபாவனையாகும். அது விருத்தியை நீக்குவதற்குரியதாகும். அதை ஓதும்போது பக்தி சிரத்தையும் தூய நம்பிக்கையும் அசையாது இருந்தாற்போதும். எதுவிதமான மனக்கற்பனையோ அல்லது கருத்து விளக்கமோ கொடுத்தல் சிவோகபாவனைக்குப் பங்கம் விளைவிப்ப தாகும். அதில் தாசன் - எஜமான் அடி-முடி எனும் இருவகை எண்ணங்களுக்கு இடமில்லை. தாள்-தலை (அடி-முடி) எனப்படும் பாகுபாடின்றி தாடலையாகிய தனிப்பதமாகவே அது விளங்கும்.

சத்தியதரிசனம் – சத்தியப்புலப்பாடு:

சத்தியப் புலப்பாடு அல்லது சிவதரிசனம் பெறுவதற்கு ஆத்ம விசாரனை அவசியம் என்பது யோகசுவாமிகளின் துணிபாகும். அதற்கு அனுசரணையாக "நான்யார்?" என்பதை விழிப்புணர்வுடன் நடு நிலையிலிருந்து விசாரணை செய்து நன்கு தெளிந்து கொள்ளுமாறு உபதேசித்துள்ளார். ஆத்ம விசாரணை மிகவும் சிக்கலாகவும் சங்கடமாகவும் உள்ளது.

அதில் ஈடுபட முன்பு ஆத்மாவை அறியும் அறிவு சுட்டறிவு அல்ல என்பதையும், சுட்டறிவினால் அறியப்படும் ஆத்மாவானது ஒரு பொய்யான கற்பனைத்தோற்றம் உடையதென்பதையும் வழுவற விளங்கிக் கொள்ளுதல் அவசியம். சுட்டறிவினால் ஆத்மாவை "நாம் அறியோம்" என்பதுஎமதுமெய்யுணர்தல் ஆகும். வேண்டும்சுட்டறிவினால் சிருஷ்டிக்கப்படும் ஆன்மா ஆகினும் சரி, கடவுளாயினும் சரி, ஒரு பொய்க் கற்பனைத் தோற்றமேயாகும். சுட்டறிவு நிலையை முத்துரிய நிலை எனக் கூறுதல் சைவசித்தாந்த மரபாகும்.

முத்துரியம் என்பது ஆத்மா உடலுடன் கூடி நின்றுபெறும் விழிப்பு, கனவு, உறக்கமாகிய மூன்று நிலைகளுமாகும். முந்துரிய நிலையில் நாம் ஒருபோதும் பூரணமாக அறியமாட்டோம். அரைகுறையாக அறியலாம்.

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

அரைகுறையானது பூரணமாவ தில்லை. ஆத்ம விசாரணை செய்வதற்கு உரிய தகுந்த நிலை துரியாதீத நிலையாகும். துரியாதீத நிலை யிற்றான் ஆத்மாவிடம் மெய்யுணர்தல் மலரும் மெய்யுணர்தல் நிலையில் விசாரணை செய்தாற்றான் சத்திய தரிசனம் கிடைக்கும். ஆத்மாவைப் பற்றிய பூரணமான ஞானம் பெறலாம்.

ஆத்மஞானம் – சத்திய தரிசனம்:

இந்த வகையில் செல்லப்பா சுவாமிகள் யோகசுவாமிகளுக்கு அற்புதமாகப் படிப்பித்து அவரை சுயமாகவே சாதனை செய்து ஆத்ம ஞானம் பெறும்படி நெறிப்படுத்தியதாக அறிகிறோம். நல்லூர் கந்த சுவாமி கோயிற்தேரடியில்யோகசுவாமிகள்செல்லப்பாசுவாமிகளிடம் நயன ஸ்பரிச தீட்சையும், சன்மார்க்க உபதேசமும் பெற்றார். எனினும் பூரணமாக ஆத்மஞானம் பெறமுடியவில்லை. தனது குருவிடம் இருந்து பூரணமாக ஆத்மஞானம் பெறலாம் என்ற நம்பிக்கையில் அவர் குருவைப் பின் தொடரலாயினார்.பின் தொடர்வதில் பிரயோசனமில்லை. உபதேசம் செய்யப்பட்ட மகா வாக்கியங்களின் மறைபொருளைச் சுயமாகவே கண்டு பிடித்து அதற்குரிய சாதனை செய்து தாரகமாகிய திருவருள் மலரப்பெற்றது.

ஆத்மஞானத்தை முழுமையாகப் பெறும் வண்ணம் செல்லப்பா சுவாமிகள் சொல்லிப்பார்த்தார். அதைப் பொருட்படுத்தாது மீண்டும் குருவை பின்பற்றுவதில் அவர் ஈடுபட்டார். வேறு வழியின்றி செல்லப்பாசுவாமிகள் அவரை விரட்டித் துரத்திவிட்டார். அதன் பிற்பாடுதான் யோகசுவாமிகள் கதிர்காமத்துக்கு பாதயாத்திரையைச் செய்து ஜெபதியானத்துடன் ஆரம்பித்தார். இரண்டு மாதகாலம் இங்ஙனம் செலவிட்டு முடிவில் கதிர்காமம் அடைந்தார். அங்கு தனிமையில் தனித்திருந்து இருவினை ஒப்பு, சிவயோகபாவனை, பஞ்சாட்சர ஜெபதியானம் முதலிய சாதனைகள் ஒருமாத காலமாகப் புரிந்து பூரணமான ஆத்மஞானம் சுயமாகவே பெற்றார்.

பதஞ்சலி முனிவர் காட்டிய ராஜயோக வழியைப் பின்பற்றுபவர்கள் யோகப் பயிற்சி மூலம் மனத்தை அடக்க முயற்சிக்கின்றனர். மனதின் இயல்பு ஒடுங்குவதும் விரிவதும் அல்லாது அடங்குவது அல்ல. இதை உணர்ந்த தாயுமான சுவாமிகள் "சிந்தனையை அடக்கியே சும்மா இருத்தல் அரிது" என உபதேசித்துள்ளார். யோகசுவாமிகள் நிஜமாகவே சும்மா இருந்தும் வாழ்ந்தும் வந்தமை நாம் நேரிற் கண்டுள்ளோம். அவர் ராஜயோகப் பயிற்சியோ அல்லது அட்டமா சித்திகள் ஏதுமோ செய்ததாக நாம் காணவில்லை. அவர் செய்த ஒரே ஒரு உத்தம சாதனை மணிவாசகப் பெருமான் காட்டிய வழியில்,

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் அமுதமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒன்றுத்தன்றே வெறுத்திடவே"

எனும்படி சிவஜெப தியானமும் விசாரணையும் செய்தார். இச்சாதனையில் சரிவர ஈடுபடும் சாதகர் மனமாற்றம் பெறுவதை காணலாம்.

சிவயோகமாக கண்ட தவமுனி:

சிவோக பாவனையும் பஞ்சாக்சர ஜெபதியானத்தையும் இடைவிடாது பக்தி சிரத்தையுடன் சிறிதேனும் வழுவாது உரிய முறையில் செய்து வந்தால் ஆயுத ஊடகமாகச் செயற்படும் மனம் அற்புதமான பாரிய பூரண மாற்றமடைகிறது. அது திருவருட் பாத்திர ஊடகமாக மாறுகிறது. ஆயுதமாகச் செயற்படும் நிலை மாறி அது திருவருளை முழுமையாக ஏற்கும் அமுதச்சுரப்பாத்திரமாக மாறுகிறது. அதற்காக சாதகர் எவரும் மனதை அடக்கவோ அல்லது ஒடுக்கவோ எவ்விதமான பிரயத்தனமும் எடுக்க வேண்டியதில்லை. நாம் எடுக்கும் அடக்குமுறைப் பிரயத்தனம் அனைத்தும் மன விருத்தியின் செயற்பாடே ஆகும். மனப்பிரயத்தனத்தில் மாணிக்கவாசகப் பெருமான் எவ்வித தவ முயற்சியிலும் ஈடுபடவில்லை என்பதை அவர் "நானேயோ தவம் செய்தேன்?" எனும் வினாமூலம் இல்லை என விளக்குகின்றார். சிவஜெப தியானம் மூலம் அவர் தன்னுடைய ஏவல் மனதைத் திருவருளிற்கு ஏற்ற மௌன பாத்திரமாக மாற்றி விட்டார். அதே நெறியிற்றான் யோக சுவாமிகளும் திருவருளிற்கு சும்மா இருந்து பாத்திரமானார். அவர் செயற்கை முறையில் மனதைக் கட்டுப்படுத்தும் சாதனை எதுவும் செய்ததை நாம் அறியவில்லை.

அவர் தனது மனதை மாற்றமடையச் செய்து திருவருட்பாத்திர ஊடகம் ஆக்கிய பின்பே சிறந்த ஆத்ம விசாரணையிலீடுபட்டார். நினைப்பன நிலைக்கும் ஆற்றலைப் பெற்றார். ஒருபொல்லாப்பும் இல்லாது ஜீவன் முக்தி நிலையில் பூவுலகிலேயே வாழும் தெய்வீக வாய்ப்பை சரிவரப் பெற்றார்.

அவர் காட்டிய உத்தம நெறியில் மனதை திருவருளிற்குப் பாத்திரமாக்கிய பேறாகவே இவற்றைச் சந்தேகமின்றி தெளிவாக எழுத முடிகின்றது. ஒரு பொல்லாப்புமில்லாது பூரணமான தெய்வீக வாழ்க்கை வாழ விரும்பும் சாதகர்கள் யோக சுவாமிகள் காட்டிய நெறியில் எப்பவோ முடிந்த காரியம், நாம் அறிவோம் எனும் மஹா வாக்கியங்களை அவதானத்துடனும் விழிப்புணர்வுடனும் பக்தி சிரத்தையுடன் தெளிந்து அப்பியாசித்து வந்தால் நிச்சயமாக ஒரு பொல்லாப்புமில்லாது மன அருள் நிறைவு பெற்று வாழலாம்.

சச்சிதானந்த நிலை :

நாயன்மார்களும் சந்தான குரவர்களும் மஹரிஷிகளும் தனித்தனியே சாதனம் செய்து தாமே சுயமாகவே சத்திய சொரூபதரிசனம் அதாவது முழுதும் உண்மைப்புலப்பாடு பெற்றுள்ளார். சத்திய சொரூபமாகிய சிவனைச் சைவர்கள் "சச்சிதானந்தம்" என வழிபடுகின்றார்கள். அதன் நோக்கம் அவர்களிற்கு சச்சிதானந்தம் அடையவேண்டும் என்பதாகும். சச்சிதானந்தத்தின் உண்மை விளக்கம் அவன் "சத்" எனப்படும் உண்மையையும்,"சித்" எனப்படும் பேரறிவையும், ஆனந்தம் எனப்படும் பேரின்பத்தையும் முழுமையாகக் கொண்டவன் என்பதாகும். இது முழுவதும் உண்மை. மனிதன் சிரமப்பட்டு பெறும் உண்மையல்ல.

அவை அரைகுறையானவையாகும். அரைகுறையானவை ஒருபோதும் பூரணமாகமாட்டாது. ஏன் எனில் பகுதிகளை ஒன்றுசேர்த்துக்கூட்டுவதால் பூரணம் முழுவதும் உண்மை உண்டாவதில்லை.

இதை சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கும் சமஸ்கிருத உபநிடத சுலோகம் ஒன்றை இங்கு குறிப்பிடலாம்.

பூரண மத பூரண மிதம்!
பூர்ணாத் பூர்ணம் உதிச்யதே!
பூர்ணஸ்ய பூர்ணம் ஆ தாய!
பூர்ணம் ஏவா வசிஸ் யதே!

இந்த சமஸ்கிருத மொழிச் சுலோகத்தின் தமிழாக்கம் பின்வருமாறு.

அது பூரணம் இது பூரணம்
பூரணத்தில் இருந்து பூரணம் உதிக்கிறது.
பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தாலும்
பூரணம் ஒன்றே விஞ்சி விடுகின்றது.

யோக சுவாமிகள் அருளிய முழுவதும் உண்மை எனும் மஹா வாக்கியத்திற்கு இந்த சுலோகத்தை போல வேறெதுவும் சிறந்த உண்மை விளக்கம் கொடுப்பதாக தெரியவில்லை.

மறை பொருள் முழுமையாக புரியமாட்டாது. உண்மையாகவே நாம் திருவருளிற்கு பாத்திரமாக இருந்து அதை விழிப்புணர்வுடன் ஆய்ந்தாலறிந்து இதன் மறை பொருள் புலப்படாது. திருவருளே விவேகப் படைப்புச்சக்தியாக உள்ளிருந்து மலர்ந்து இதிலுள்ள பூரணத்துவத்தின் முழு உண்மைத் தன்மையை சுயமாக கிரகித்து உணரும் ஆற்றலைக் கொண்டிருக்கிறது.

சிவசக்தி– முருகப்பெருமானது சொரூபம்:

சிவசக்தியே முருகப்பெருமானுடைய சொரூபம் என்பதை உணர்ந்து யோகசுவாமிகள் வழிபட்டு வந்தார். சிவபெருமானிற்கும் சக்திக்கும் வேறுபாடில்லாதது போலவே சிவனிற்கும் முருகனிற்கும் வேறுபாடில்லை எனத் தெளிந்தார். சங்கர் காலத்தில் இருந்தே தமிழ்நாடு முருகவழிபாட்டை முதன்மையாக கொண்டிருந்தது. முருகன் அருளாலே அவர் எப்படி சைவ சித்தாந்தங்கள் கூறும் படிமுறைக்கிரமப்படி ஆத்மீக விடுதலை பெற்று முழுவதும் உண்மை உள்ளொழிமூலம் விளங்கப் பெற்றார் என்பதை சற்று அவதானிக்கலாம்.

சகல நிலையிலும் மூன்று மலங்களாலும் பீடிக்கபப் பட்டிருந்த அவர் முருகன் மீது பக்தி சிரத்தை கொண்டார். அரச உத்தியோகத்தை உதறித்தள்ளி விட்டு நல்லூர் கந்தன் சன்னதியை அடைந்தார்.

சிவசக்தியானது நாதம், விந்துகலையுருவில் ஆத்மாவிற்கு அருளி உதவுகின்றது. தூலவடிவில் அது திரோதன மாகவும், சூக்கும நிலையில் அது சுத்தமாகவும் புலப்படுகின்றது. சுத்த சக்தியாகிய நாதச் சொரூபமாக கணபதியும், விந்துசொரூபமாக முருகனும், இவற்றின் சொரூபமாக சரஸ்வதியும் திகழ்கின்றனர். தூலவடிவிற்றான் இச்சக்திக்கு புறப்பூசைகள் செய்கின்றோம். சூக்கும வடிவிலுள்ள போது அவைகளிற்கு புறப்பூசை செய்ய வேண்டிய அவசியமில்லை. அகப்பூசை செய்தல் அவசியமாகும். புறப்பூசை உலகியல் நன்மை கருதியும், அகப்பூசை ஆத்ம விடுதலையைக் கொடுக்கும் மலநீக்கம் குறித்தும் செய்யப்படுவனவாகும். யோக சுவாமிகள் அகப்பூசை செய்வதில் மட்டும் நாட்டம் கொண்டிருந்தார். அதுவும் இயங்கும் சக்தியாக முருகனையும், இயக்கும் சக்தியாக சிவபரம் பொருளையும் வேண்டியே அந்தர்யாக பூசை செய்து வந்தார்.

தவத்திரு சிவயோக சுவாமிகள்

சிந்தனைக்களம்

முடிவுரை:

யோகசுவாமிகள் காட்டிய ஆத்மீக சாதனாநெறி எந்த ஒரு குறிப்பிட்ட புறப்பாதையும் அல்ல. அது மெய்கண்ட தேவர் காட்டிய இல்வழியின் மறைஞான விளக்கமாகும் இல்வழி என்பது மனவிருத்தியை நிவிருத்தி செய்தலாம். அதை ஆங்கிலத்தில் (negative approach to education) கல்வி முறையின் எதிர்மறை அணுகுமுறை எனக்கூறுவர். அது உடன்பாட்டு நிலையில் சுட்டறிவு சம்பாதிக்கும் வழியல்ல. எதிர்மறை நிலையில் மக்களுடைய விவேகப்படைப்புச் சக்தி மலர்ச்சிக்குத் தடையாக உள்ளவற்றை நீக்குதலாகும். அருளொளி மலர்ச்சியே விவேகப்படைப்புச் சக்தியாகும் மனமலர்ச்சிக்குத் தடையாக உள்ளவை பந்த பாசங்களாகும். பந்த பாச நீக்கத்தையே தமது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு வெற்றி பெற்ற மஹரிஷி யோகசுவாமிகள் ஆவார். அவர் காட்டிய பாச நீக்கமாகிய இல்வழியையே நாமும் அனுசரித்தல் அவசியமானகடமையாகும்.

யோகசுவாமிகளே "சிவனடிக்கன்பே சிவயோகமாக கண்ட தவமுனி" எனும் உயர்சிறப்பைப் பெறுகின்ற தவமுனியாக சுவாமிகளை நாம் பார்க்க முடிகின்றது.

சிவ தொண்டு

நாங்கள் சிவனடியார்! நாங்கள் சிவனடியார்! நாங்கள் சிவனடியார்! நாங்கள் சிவனடியார்!. இது சரியை! இது கிரியை! இது யோகம்! இது ஞானம்! இது மந்திரம்! இது தந்திரம்! இது மருந்து.

இந்தத் தியானத்தில் நிலைத்தலே நிட்டை! இந்த நிட்டையுடையோர்க்குச் சீலமில்லை! தவமில்லை! விரதமில்லை! ஆச்சிரமச் செயலில்லை.

இவர்கள் தாம் விரும்பிய வண்ணம் மண்ணில் வாழ்ந்தார்கள், வாழுகிறார்கள், வாழ்வார்கள்! இவர் பெருமை யாவருமறியார்! கற்கண்டின் இனிமை கற்கண்டை உமிபவர்க்கே தெரியும்.

ஒரு பொல்லாப்புமில்லை. எப்பவோ முடிந்த காரியம். நாமறியோம். முழுதும் உண்மை.

– யோகர் சுவாமிகள்

"கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் – ஓர் ஆய்வு"

நூல் வெளியீட்டு விழாவில்

பிரதம விருந்தினரின் சிறப்புரை

குருர்ப்ரம்மா குருர் விஷ்ணு குருதேவோ மகேஷ்வரஹா
குருர் சாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ

தலைவரவர்களே, நல்லூர் ஆதீன முதல்வர் அவர்களே, மகாதேவக் குருக்கள் ஐயா அவர்களே, என் மதிப்பிற்குரிய ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களே! நூலாசிரியர் அவர்களே, மற்றும் கலாநிதி பாலகைலாசநாத சர்மா அவர்களே, நண்பர் ஆறு திருமுருகன் அவர்களே மற்றும் இங்கு வந்திருக்கும் ஆன்றோர்களே, சான்றோர்களே, எனதருமை சகோதர சகோதரிகளே, குழந்தைகளே!

பக்கத்தில் இருந்து படம் எடுப்பதற்கும் தூர இருந்து படம் எடுப்பதற்கும் வித்தியாசம் இருக்கின்றது. பக்கத்துப் படம் பளிச்செனத் தோன்றும். பக்கவாட்டில் இருப்பவை தென்படாது. பரவலாக இருக்கும் பின்புலம் புலப்படாது. தூரத்துப்படம் பலதையும் உள்ளடக்கியிருக்கும். பின்புலம் தெரியும். பிறிது பல புலப்படும். ஆனால் படம் சற்று மங்கலாகவே தோன்றும்.

இன்று உங்கள் மத்தியில் இந்தக் கூட்டத்தில்ப் பங்கு பற்றும் போது சிவத்தமிழ்ச் செல்வி சற்று மங்கலாகத் தான் தெரிகின்றார். பளிச்சென்று தெரியப் பலதையும் மறந்து அவருடன் பக்கத்தில் நின்று அளவளாவி வந்த காலம் இனி வராது என்ற எண்ணம் பெருமூச்சைத் தருகின்றது. அவரை இனி மங்கலாகத்தான் பார்க்க முடியும். ஆனால் பின்புலத்துடன் பலதையும் உள்ளடக்கியதாக எங்கள் பார்வை அமையும். இன்றைய நூல் அவ்வாறானதாகத் தான் அமைந்துள்ளது. தூரத்தில் நின்று துர்க்கா துரந்தரியை நோக்குகின்றோம். அப்பொழு தெல்லாம் ஆறடி உயரம் நின்று அண்மையில் அவரை வைத்து வாமனரூபத்தில் கண்டேன். இன்று நான் வாமனன் ஆகிவிட்டேன். அன்னையார் ஆறடி அல்ல அறுபது அடி உயரத்திற்கும் அப்பால் நின்று அடியேனைப் பார்த்துச் சிரிப்பது போல் ஒரு மயக்கம் ஏற்படுகின்றது.

புதுக்கடையில் நான் சட்டத்தரணி தொழிலில் ஈடுபட்டிருந்த காலத்தில், சுமார் 40,45 வருடங்களுக்கு முன்னர் என் அலுவலகத்தின் அண்மையில் மேதர் என்ற ஒரு சிரேஷ்ட சட்டத்தரணி தொழில் புரிந்து வந்தார். அப்போதெல்லாம் அவருக்குச் சுமார் எண்பது வயதிருக்கும். அவரின் மிக நெருங்கிய நண்பர் ஒருவர், அவருமொரு சட்டத்தரணியென்று நினைக்கின்றேன், இறந்து விட்டார். "Sir, செத்த வீட்டுக்குப் போகவில்லையா?" என்று அவரிடம் கேட்டேன். ''உயிருடன் பக்கத்தில் வைத்துப் பழகிப்போன எனக்கு அவரை உயிரற்ற சடலமாகப் பார்க்குந் திராணி கிடையாது. நான் வரவில்லை. நீ போ" என்றார். ''என்ன சேர்! கடைசி யாத்திரையில் கலந்து கொள்ள மாட்டேன்" என்கின்றீர்களே! என்றேன். ''யார் சொன்னது கடைசி யாத்திரை என்று? என் கடைசி யாத்திரை வரை அவன் என்னுடன் இருப்பான்" என்றார். மரணம் என்பது ஒரு விசித்திரமான நிகழ்வு. பக்கத்தில் பளிச்சென்று தெரியப் பலதையும் அளவளாவும் ஒருவர் மரணத்தின் பின்னர் எங்கள் எண்ணத்தில் மட்டுந்தான் நிறைந்து கிடக்கின்றார். எதிரிலே அவர் இல்லை.

அந்த நிலையில்த்தான் இன்று இருக்கின்றேன் நான். அன்னையாருடன் அதனையும் இதனையும் அங்கங்கு நின்று பேசிய அவையெல்லாம் இன்று கனவாகி விட்டது. அந்தக் கனவின் மத்தியில்த்தான் அவர் நினைவை வரவழைக்க இந்த ஆய்வு நூல் அரங்கத்திற்கு ஏறியுள்ளது. ஏழில் பிறந்த அவர் ஏகியே ஏழு வருடங்கள் ஆகிவிட்டன. ஏக்கத்துடன் அவரை வழியனுப்பிய நாங்கள் இன்று அவர் இன்றி ஏழ்மையடைந்துள்ளோம். எனினும் தம்பி செல்வமனோகரன் அவர்கள், அன்னையாரின் பணிகளைச் சமயம், சமூகம், தத்துவம், தமிழ்மொழி சார் தலைப்புக்களின் கீழ் ஆராய்ந்து ஆய்வு செய்து இன்றைய நூலை வெளியிட்டுள்ளார். அருகே அன்னையார் நிற்கும் போது புரியாத ஆய்வுக் தகவல்களையெல்லாம் அழகாக எழுத்தில் வடித்துள்ளார். அன்னையார் இனி அனைவருக்கும் ஆவணப்படுத்தப் பட்டுள்ளார். அத்தகையதொரு அழகிய நூல்தான் இன்று அரங்கம் ஏறியுள்ளது. இந்து மாமன்றத்திற்கு நன்றி. இதையெல்லாம் இனிதே நடந்தேறச் செய்துள்ள நீலகண்டனுக்கு நன்றி.

வழக்கமாக என்னை ஆய்வுரை செய்ய அழைப்பார்கள். அடியேன் அரசியலில் பிரவேசித்ததால் அந்தப் பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டுள்ளேன். இன்று அடியெடுத்துத் தந்தாலும் ஆய்வு வழங்க முடியாமல் அரசியல்ப் பணிகள் என்னை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. அழகாக ஆய்வு செய்து அமைதி வாழ்க்கை வாழ்ந்து வந்த என்னை அரசியல் அரங்கேற வைத்தவர்களில் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரும் ஒரு குற்றவாளி. எனக்குக் குற்றமிழைத்துவிட்டு அவர் குறுநகையுடன் பவனி வருகின்றார். அன்னையாரின் ஆய்வு நூலை அலசிப் பார்க்கக் கூட அவகாசம் அளிக்காத அரசியல் வாழ்க்கையில் என்னை அவதிப்பட வைத்துள்ளார்.

இன்று அன்னையாரின் நூலில் ஏதேனும் ஒரு பகுதியை ஆழப் பார்ப்போம் என்று தான் இருந்தேன். அதற்கெங்கே அவகாசம் இருக்கின்றது? அதனால் நேற்று எனக்குக் கிடைத்த நூலை நோக்கி என் கைவிரல்கள் வீணையை வருடுவதுபோல் வருடின. அந்த வருடலின்பால் எனக்குத் தரப்பட்ட தரவை வைத்து ஒரு சில வார்த்தைகள் கூறலாம் என்று நினைக்கின்றேன். அதற்கு முன் நண்பர் நீலகண்டனின் நெற்றிக் கண்ணிற்கு ஆளாகாமல் இருக்க ஒரு விளக்கம் தேவை. முடிவடைந்த நூலை நேற்று கொழும்பு வந்தே பெற்றேன். முற்றுப் பெறாத முதல் நூலொன்றை இரு வாரங்களுக்கு முன்னர் அவர் தந்துதவியதை நான் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். காமராஜர் ''ஆகட்டும் பார்க்கலாம்" என்று அன்று கூறியது போல் நானும் ''ஆய்வு நூல் அழகாக வெளிவரும்; அப்போது பார்க்கலாம்" என்றிருந்து விட்டேன். ஆனால் காலம் சதி செய்துவிட்டது. நேற்றிரவு தம்பி நீலகண்டன் தொலைபேசியில் பேசிய போது ஆய்வு நூலை அரை நிமிடங் கூட அளந்து பார்க்க அவகாசம் கிட்டவில்லை. ஐயா! ஆகாய விமானத்தில் அமைதியாகக் கொழும்பு செல்வோம் என்று வந்த என்னை அதற்குள்ளேயே வைத்து அன்னியர் ஒருவர் நேற்று பேட்டி எடுத்து விட்டார் என்றால் என் அலைப்பையும் அமைதியின்மையையும் என்னதான் சொல்வது! முடியாது என்றிருக்கலாம். முயன்று முயன்று பார்த்து முதல்வரைச் சந்திக்க முடியாமல் போன அவர் முந்திக்கொண்டு வந்து ''நீங்கள் முதல்வர் அல்லவா?" என்றார். ''ஆம்" என்றேன்.

''நான் கலாநிதிப் பட்டம் பெற்றவன். நூல் எழுதுகின்றேன். என்னைத் தெய்வம் கைவிடவில்லை. ஒருசில வினாக்கள் உங்களிடம் கேட்கலாமா?" என்றார். இல்லை முடியாது. நான் அதிகாலையில் இருந்து அலைந்தவாறு இருக்கின்றேன். அமைதியாக உறங்க விடுங்கள்!" என்று அவரிடம் கூற மனம் விடவில்லை. அந்தரத்தில் பறந்த அந்த விமானத்தை அவரின் ஆய்வுக்குப் பயன்படுத்திக் கொண்டார் அந்த அன்னியர். வீட்டுக்கு வந்த போதுதான் அன்னையின் வகிபாகம் பற்றிய ஆய்வு நூல் அறிவுக்குப் புலப்பட்டது. ஆனால் இன்று காலை வழங்க வேண்டிய கல்லூரிப் பேச்சு நிறைபடாமலே நின்றது. ஆகவே இன்று அதிகாலையில்த் தான் அன்னையின் ஆய்வு நூலின் மேல் என் விரல்களைப் பரவ விட அவகாசம் கிடைத்தது.

அதில் கிடைத்த செய்தி தான் ஆசிரியர் குறிப்பிட்ட ஒரு சொற்றொடர். பக்கம் 74ல் அவர் கூறுகின்றார் ''அன்னையாரின் சொல்லும் செயலும் சாதாரணமானவர்களுக்கே உரியது" என்று. முற்றிலும் உண்மையான அந்தக் கூற்றை ஒட்டியே ஒரு சில வார்த்தைகள் கூற விழைகின்றேன். அன்னையாரின் சொற்கள் பாமரர்களுக்குத் தெட்டத் தெளிவாகத் தெரிய வைப்பதாய் அமைந்திருந்தன. தன் புலமைத்துவத்தை புரியாதவர்களின் புலன்களுக்குள் புகவைப்பதை அவர் விரும்பவில்லை. சைவசித்தாந்தக் கருத்துக்களை கல்வி வளம்பெறாத பாமர மக்களும் புரிந்து கொள்ளத் தக்க வகையிலேயே அன்னையாரின் தத்துவப் பேச்சுக்கள் அமைந்திருந்தன. பதி என்றால் என்ன என்று எளியவர்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் பின்வருமாறு கூறியுள்ளார் -

''சைவம் என்பது சிவத்தை முழுமுதலாகக் கொண்டது. சிவம் என்பதற்கு அன்பு, பூரணம், செம்மை, இன்பம், மங்கலம் எனும் பல பொருட்கள் உண்டு. அச் சிவத்தை பதி என்றும் கடவுள் என்றும் பரம்பொருள் என்றும் அழைப்பர்" என்றார்.

சைவசித்தாந்தம் எதனைக் குறிப்பிடுகின்றது என்று கூற வந்த அன்னையார் பின்வருமாறு கூறியுள்ளார். ''சைவசித்தாந்தம் மூன்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. அவை உலகினை இயக்கும் கடவுளைக் குறிப்பனவாயும், மக்களைக் குறிப்பனவாயும் மக்கள் வாழும் உலகினைக் குறிப்பனவாயும் உள்ளன."

எனவே அன்னையார் பதி, பசு, பாசம் என்ற சொற்களைப் பாவிக்காமல் கடவுள், உயிர், உலகம் என்ற பதங்களை பாமரர் நலன் கருதிப் பாவித்துள்ளார்.

இன்னுமொரு இடத்தில் ''இறைவனை உருவம் கொடுத்து வழிபடும் முறை சைவ சமயத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. அதற்குக் காரணம் வணங்குவோருடைய மன ஒருமைப்பாட்டுக்கேயாகும். எல்லோரும் தமது மனதைக் கட்டுப்படுத்தி வணங்கும் ஆற்றல் உடையவர்கள் அன்று. அப்படியானவர்களுக்கு உள்ளத்தில் நிலை பெற்று விளங்குவதற்காகவே ஆலயங்களைக் கட்டி உருவங்களை அமைத்தனர்" என்றார். அவரின் சொற்கள் சாதாரணமானவர்களுக்கு ஏற்றவாறு வெளிவந்தன என்பதற்கு இந்தச் சில உதாரணங்கள் எடுத்துக் காட்டுக்கள் ஆவன.

அவரின் சொற்களுடன் அவரின் செயலும் சாதாரணமானவர்களுக்கு ஏற்றாற்போல் அமைந்திருந்தன. ஆசிரியர் இது பற்றி பக்கம் 72ல் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

''..... அம்மையார் விரதத்தை அனுஷ்டித்தும் அதைப் பற்றிப் பேசியும் எழுதியும் மற்றவர்க்கு வழிகாட்டினார். ஆறுமுக நாவலர் வழிநின்று விரதத்திற்கு விளக்கம் அளித்தார். ஆலயத்திற்கு வருவோர் அனைவருக்கும் விரத அனுஷ்டானம் தொடர்பான விளக்கங்களை அளித்து முறைப்படி ஒழுக அவர்களுக்கு வழிகாட்டி நின்றார். தன் வாழ்வியலினூடாக சைவ சித்தாந்த தத்துவார்த்த சிந்தனையை பாமர மக்களும் புரியும் படி செய்தவராக அம்மையார் திகழ்கின்றார் என்பது மிகையாகாது" என்றார்.

எனவே மக்களோடு மக்களாய் வாழ்ந்து மானிடர்களை வளமான வாழ்க்கை வாழ வழிவகுத்தவர் துர்க்கா துரந்தரி அவர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவை அவரை நடத்தி வைத்த கைதேர்ந்த கருத்துக்கள். கண்ணியம் மிக்கவராக வாழ்ந்தார். கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தார். கடமையே கண்ணென்று வாழ்ந்தார்.

அன்னார் பற்றிய நூல் ஆய்வு நூலாக வெளிவருகின்றது. அன்னையாரின் ஆலயத்திருப்பணிகள் ஏராளம். ஆராய்ந்தளித்த ஆய்வுக் கட்டுரைகள் ஏராளம். அவருடைய சமயம் சார் கட்டுரைகளைப் பிரித்து நோக்குகின்றார் ஆசிரியர் பக்கம் 26ல். பேச்சும் அவரின் பெரு எழுத்தும் அவரின் மக்கள் சேவையின் பெருமாதாரங்கள். இவற்றைப் பற்றியெல்லாம் நூல் ஆராய்கின்றது.

1925ம் ஆண்டு ஜனவரி மாதம் ஏழாந் திகதி தெல்லிப்பளையில் பிறந்த அன்னையார் படித்துப் பண்டிதையாக முதலில் வெளிவந்தார். காலக்கிரமத்தில் சைவத்தையுந் தமிழையும் வளர்க்க வேண்டும் என்ற ஈடுபாடு கொண்டார். அப்பொழுதான் அவர் தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளராகக் கடமையாற்றும் பேற்றைப் பெற்றார். தொடர்ந்து அந்தத் தேவஸ்தானத்தின் அபிவிருத்திக்கு, வளர்ச்சிக்கு ஆழ்ந்த துணையாக இருந்தார். அவர் காலக் கிரமத்தில் பல பொதுசேவைப் பணிகளில் ஈடுபட்டார். சைவத் தமிழ் ஆய்வு நூலகம், சிவத்தமிழ்ச் செல்வி அன்னை இல்லம், ஸ்ரீ துர்க்காதேவி அன்ன சத்திரம், துர்க்காபுரம் மகளிர் விடுதி போன்ற பலதையும் அவர் பார்த்துப் பராமரித்து வந்தார். சைவ சமயிகள் அவரைத் ''துர்க்கா துரந்தரி" என்று பட்டமளித்து அழைத்தனர். 1991ம் ஆண்டில் அரசாங்கம் அவருக்கு கலாசூரி பட்டம் அளித்தது. 1998ம் ஆண்டில் யாழ் பல்கலைக்கழகம் அவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் அளித்தது.

மொத்தத்தில் அறிவிலும், அன்பிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கிய அன்னையார் எமது மக்களுக்கு, விசேடமாக எமது மகளிர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். அவர் பணிகளை மற்றையோர் கொண்டு நடத்த வேண்டும். இப்பேர்ப்பட்ட நூல்கள் அன்னையாரின் நினைவை மனதில் இருந்து நீங்க விடாத தன்மை வாய்ந்தன.

நல்லதொரு நூலை நமக்களித்த ஆசிரியருக்கு நன்றி. அதனை ஆவணப்படுத்தியமைக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தினருக்கு நன்றி. அன்பான அழைப்பை எனக்களித்த தம்பி நீலகண்டனுக்கு நன்றி. அனைத்தையும் பொறுமையுறக் கேட்ட அனைவருக்கும் நன்றி.

சத்திய வித்தகர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்
முதலமைச்சர், வடமாகாணம்

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாம்ம செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே."

(திருமந்திரம்)

6.3.2015 அன்று நடந்த அகில இலங்கை இந்து மாமன்ற வைரவிழா ஆரம்ப நிகழ்வில் மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் ஆற்றிய தலைமை உரை

எல்லாம் வல்ல எம்பெருமானை வணங்கி அவன் திருவருள்வேண்டி என் உரையை ஆரம்பிக்கின்றேன்.

வணக்கத்திற்குரிய குருமார்களே, பெரியோர்களே, தாய்மார்களே, பிள்ளைகளே அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வரலாற்றில் இன்று ஒரு பொன்னாள். இன்று மாணிக்கப்பிள்ளையாரை வணங்கி வைரவிழா ஆண்டு நிகழ்வுகளை ஆரம்பிக்கின்றோம்.

இப்புனித சந்நிதியில்தான் எமது முன்னோர்கள் அறுபது ஆண்டுகளுக்கு முன் எம்பெருமான் விநாயகப் பெருமானைப் போற்றி வழிபட்டுக்கொண்டு இந்நாட்டின் இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பாக இந்து மக்களின் உச்ச நிறுவனமாக மாமன்றத்தை ஆரம்பித்தனர்.

எனக்கு முன் மாமன்றத்தைத் தலைமை தாங்கிய பிரபல சிவில் சேவை அதிகாரியும் உயர்ஸ்தானிகருமான அமரர் சி. குமாரசாமி அவர்கள், பிரபல சிவில் சேவை அதிகாரியும் அமைச்சரும் திருக்கேதீச்சர திருப்பணிக்குத் தன்னையே அர்ப்பணித்த அமரர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள், என் தந்தையின் கல்லூரித் தோழனாக வளர்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர் அமரர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள், சட்டத்தரணிகள் சங்கத் தலைவராக புகழ்பெற்ற அமரர் எஸ். சோமசுந்தரம் அவர்கள், என்னை ஒரு சட்டத்தரணியாக உயர் நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்வித்து வைத்த உயர் நீதிமன்ற நீதியரசர் அமரர் வி. சிவசுப்பிரமணியம் அவர்கள், கொழும்பில் மாமன்றத்திற்கு காணியைப் பெற பெரும் பாடுபட்ட அமரர் ஆ. சின்னத்தம்பி அவர்கள், எழும்பாத மாமன்றத் தலைமையகக் கட்டடத்தை கட்டியெழுப்புவதை ஆரம்பித்த பெருமைக்குரிய அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள், இரு தசாப்தங்களாக மாமன்ற வரலாற்றை மாற்றி நான் பொதுச் செயலாளராக இருந்த பெரும் பகுதியில் என்னை வழிநடத்தி, தன் தலைமையை என்னிடம் ஒப்படைத்த மனிதநேயமாமணி இறைசிரோரத்தினம் வி. கயிலாசபிள்ளை அவர்கள் போன்ற பெருமக்களை எண்ணிப் பார்க்கும் போது சிறியேனுக்கு இந்த ஆசனத்தில் அமர தகுதி போதாது என்ற பதட்டமே எனக்கு ஏற்படுகின்றது. ஆனால் என்னுடன் தோளோடு தோள் நின்று உழைக்கும் சகோதரர்கள், எங்களுக்கு வழிகாட்டும் ஆன்மீகச் சுடர் தொண்டுநாதன் சுவாமிகள் மற்றும் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் உட்பட்ட குருமார்கள் ஆலய அறங்காவலர்கள் மனிதநேயமாமணி கயிலாசபிள்ளை உட்பட்ட பெரியோர்கள் தரும் ஊக்கமும் ஆதரவும் மற்றும் இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் இந்து மக்கள் எங்களுக்குத் தொடர்ந்து தரும் நல்வாழ்த்துக்களும் இறைபணிநின்று எமது கடமைகளை நிறைவேற்ற உதவுகின்றன.

சிறியேனுக்குச் சிறுவயதுமுதல் என்னைப் பெற்றெடுத்து வளர்த்த பெற்றோர்கள் தந்த ஆன்மீக உணர்வும் என்னை வழிநடத்திய ஆசிரியப் பெருமக்கள் தந்த வழிகாட்டலும் உங்கள்முன் எழுந்து உரையாற்றும் துணிவைத் தந்துள்ளது. குறிப்பாக என்னைத் தமிழ் மேடையில் ஏற்றி கடந்த மாதம் இறையடியெய்திய என் தமிழ் ஆசான் சிவசம்புப் புலவரின் பேரன் திரு. காங்கேசு நீலகண்டன் மாஸ்டரை இக்கட்டத்தில் நினைவுகூர்ந்து அஞ்சலி செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இக்கட்டத்தில் எமது சேவைகள் பற்றி சுருக்கமாக எடுத்துக் கூறி நம் சகோதர சகோதரிகளுக்கான சேவைகளைத் தொடருவோம், என்ற உறுதி மொழியையும் தருகின்றோம்.

மாமன்றத் தலைவர் தனது உரையில் மாமன்றம் செய்துவரும் பின்வரும் பணிகளையும் தொட்டுக் காட்டினார்.

எமது மாணவர் விடுதிக்கும் கல்வி நிதியத்திற்கும் பங்களிக்க வேண்டுமெனக் கேட்டு தங்களை வரவேற்கின்றோம். நீங்கள் இந்த உயரிய சேவைக்குப் பங்களிக்க விரும்பினால் எம்மைத் தொடர்பு கொள்ளலாம்.

சமூக நலன் சேவைகள்

போரினாலோ சுனாமி, வெள்ளம் போன்ற பேரனர்த்தங்களாலோ பாதிக்கப்படும் எம் சகோதர சகோதரிகளுக்கு நாம் உடன் ஓடிச் சென்று உதவிகள் வழங்குகின்றோம். இதற்காக "அனர்த்த நிவாரண நிதியம்" ஒன்றைப் பேணுகின்றோம். நீங்களும் இதில் உங்கள் நிதிப்பங்களிப்பை வழங்கலாம்.

சிவதொண்டர் அணி அமைத்து இளைஞர்களையும் சமூகநலனில் இணைத்துச் சேவை செய்து வருகின்றோம். சிவதொண்டர் அணி விஸ்தரிக்கப்பட வேண்டும்.

வைத்திய சேவை

தேவை ஏற்படும்போது எம்மக்களின் வைத்திய சேவைக்காக நாம் கைகொடுத்து வருகின்றோம். இதனால் பலபேர் சிகிச்சை பெற்றுப் பலனடைந்திருக்கின்றனர்.

நீங்களும் இவ்வாறான மனிதநேய நடவடிக்கைகளுக்கு உதவ விரும்பினால் எமது வைத்தியநிதியத்திற்குப் பங்களிப்பு செய்யலாம்.

இந்து இளைஞர்

போர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்புற்ற பிள்ளைகள் மற்றும் முதியோர்களுக்கான தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு மேலாக அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த கால யுத்த அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளாகி 2009ஆம் ஆண்டு வன்னியில் இருந்து அனாதரவாக வந்த 275 யாழ் பல்கலைக்கழக மாணவர்களை அரவணைத்து மனிதநேய நிதியம் மற்றும் லண்டன் கனக துர்க்கை அம்மன் ஆலயம் என்பவற்றுடன் இணைந்து அவர்களது கல்வி நடவடிக்கைக்காக மாதந்தோறும் நிதியுதவியளித்து வந்திருக்கின்றோம். இவ்வுதவியைப் பற்றி அன்றைய யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பகிரங்கமாகப் பாராட்டி ரூபா. இரண்டாயிரத்தை ஒரே நாளில் காணாத என் பிள்ளைகளுக்கு இந்து மாமன்றம் ஒழுங்கு செய்துள்ள உதவி பேருதவியாகும் என குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யாழ் பல்கலைக்கழகம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக கணனிகள் அன்பளிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். கணனி மூலம் எங்கள் மாணவர்கள் சர்வதேச ரீதியில் வளரும் அறிவைப் பெறவேண்டும் என்பதே எமது விழைவு.

அறிவுசார் கருத்திட்டங்கள்

இந்து சமய நூல்கள் பலவற்றை தமிழிலும், ஆங்கிலத்திலும் பிரசுரித்து வருகின்றோம். எம்மால் தமிழில் வெளியிடப்பட்ட "இந்து மக்களுக்கோர் கையேடு" வெளிநாட்டில் வசிக்கும் எம் மக்களிடத்தில் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. நாம் இந்நூலுக்கான பதிப்புரிமையைக் கோரவில்லையென்பதால் காலஞ்சென்ற தமது மூதாதையரின் நினைவு நாளிற்கு வெளிநாட்டிலுள்ள இந்துக் குடும்பங்கள் இந்நூலை அதிக அளவில் பதிப்பித்து விநியோகம் செய்கின்றார்கள்.

இந்நூலின் ஆங்கில ஆக்கத்தை இவ்வாண்டு வெளியிடநடவடிக்கை எடுக்கப்படுகின்றது. வெளிநாட்டில் வசிக்கும் எமது இளம் சந்ததியினரும் சர்வதேசப் பாடசாலைகளில் படிப்போரும் தமிழை வாசிக்க முடியாதவர்களாயிருப்பதால் ஆங்கிலத்தில் இந்நூலை வெளியிட தீர்மானித்தோம். எம்மால் ஏற்கனவே வெளியிடப் பட்ட வேறு நூல்களைப்பற்றி அறிய விரும்பினால் எமது E Books இணையத்தளத்தில் அறிந்து கொள்ளலாம் www. hinducongress.lk. இப்பொழுது மாமன்றத்திற்கு முகநூலும் திறக்கப்பட்டுள்ளது. முகநூல் விலாசம் "allceylonhinducongress"

நவீன கால மாற்றங்களுக்கு ஏற்ப நாங்களும் எங்கள் செயற்திட்டங்களையும் மாற்றியமைத்து இந்து மக்களின் - குறிப்பாக இளம் சமுதாயத்தின் - நலன் கருதி பணியாற்றி வருகின்றோம்.

எமது இணையத்தளத்தில் "வினா விடை" பகுதி

மின்னஞ்சல் மூலம் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு அனுப்பப்படும் வினாக்கள்/ஐயப்பாடுகள் போன்றவற்றிற்கு எமது ஆலோசனை சபை அங்கத்தவர்கள் மூலமான விடைகளை அறிந்து கொள்வதற்கான வசதிகளை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

மேற்குறிப்பிட்டவை எமது சேவைகளின் முழுமையான விபரங்கள் அல்ல. குறுகிய நேரத்தில் இரத்தினச் சுருக்கமாக சில விடயங்களை எடுத்துச் சொன்னேன்.

இந்து மக்களின் குரலாக

இந்த நாட்டின் இந்து மக்களின் குரலாகத் தொடர்ந்தும் ஒலித்துவருகின்றோம். அரசசார்பற்ற முறையில் எமது மக்களின் தேவைகளை அரசாங்கத்திற்கும் வெளிநாட்டு தூதரகங்களுக்கும் எடுத்துக் கூற மாமன்றம் என்றும் தயங்கவில்லை.

நான்கு மணித்தியாலங்களுக்கு முன்தான் ஜனாதிபதி அலுவலகத்தில் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி விசேட அணியின் உறுப்பினனாக நியமனம் ஏற்று வந்திருக்கின்றேன். இந்த நியமனம் கூடச் சிறியேனுக்குக் கிடைத்த அங்கீகாரம் இல்லை, அது அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு கிடைத்ததாகவே கருதுகின்றேன். எமது இனத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் எவருக்கும் தாரைவார்த்துக் கொடாது நாம் எமது உரிமைகளை நிலைநாட்டிப் பெறக் கூடிய வாய்ப்புகளையும் தவறவிடக் கூடாது என்பதிலும் கண்ணும் கருத்தாக இருக்கின்றோம்.

எல்லோரும் ஒன்று திரள்வோமாக

இந்நாட்டு தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மையினர் இந்து மக்கள். வடக்கு, கிழக்கு, மலையகம் வேறு பிரதேசம் என்ற வேறுபாடின்றி நாங்கள் எல்லோரும் ஒன்று திரள வேண்டும். இந்து மக்கள் எல்லோரும் மாமன்றத்துடன் இணைந்து செயலாற்ற வருமாறு நேசக்கரம் நீட்டி, உங்கள் எல்லோருக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

நற்சிந்தனை

எக்கருமத்தை செய்யும் பொழுதும் ஊக்கத்தோடுஞ் சிரத்தையோடும் மன மகிழ்ச்சியோடுஞ் செய்து பழகுதல் வேண்டும். அப்படி செய்து பழகி வந்தால் மனவுறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தை பொருந்தும். பொருந்தவே ஆன்மசக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்தில் புகுந்து கவலையை உண்டாக்காது.

- (யோகர் சுவாமிகள்)

தவத்திரு யோகர் சுவாமிகளையும், கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களையும் போற்றி நினைவுகூரப்படும் இந்த இதழில் "பெரியோரைப் பின்பற்றுவோம்" என்ற தலைப்பில் பெரியோர்கள் காட்டிய நெறியில் வாழவேண்டும் என்பதை திரு. த. மனோகரன் எடுத்துரைக்கிறார். இளம் சமுதாயத்தினர் பெரியோர்களின் வழியைப் பின்பற்றி வாழ இன்றைய ஆசிரிய உலகம் வழிகாட்டவேண்டும்.

பெரியோரைப் பின்பற்றுவோம்

த. மனோகரன்
உப தலைவர் - அகில இலங்கை இந்து மாமன்றம்
செயலாளர் - மாமன்றக் கல்விக்குழு

பிறப்புண்டு, வாழ்வுண்டு, இறப்புமுண்டு. இது இயற்கை நீதி. உலக உயிரினங்களில் மனித இனத்தைத்தவிர ஏனைய உயிரினங்கள் யாவும் பிறக்கின்றன, உண்கின்றன, உறங்குகின்றன. இனப்பெருக்கம் செய்கின்றன, ஈற்றிலே மரணித்து விடுகின்றன. மனிதனின் நிலையும் அதுவேயானாலும் பகுத்தறிவு என்ற ஆறாம் அறிவுகொண்ட மனிதன் சிந்தித்துச் செயலாற்றும் ஆற்றல் கொண்டதால் அவற்றிலிருந்து வேறுபடுகின்றான். உயர்நிலையில் கொள்ளப்படுகின்றான்.

ஏனைய உயிரினங்கள் ஒரு வரையறைக்குள் தம் வாழ்வை அமைத்துக்கொள்ளும் நிலையில் மனிதகுலம் மட்டும் தம் வாழ்வை தம் சிந்தனையின் போக்கில் வடிவமைத்துக் கொள்கின்றன. அதனால் மனிதகுலம் மனம்போன போக்கில் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வழிகாட்டி நெறிப்படுத்துபவை சமயங்களும், அவற்றின் கோட்பாடுகளும், தத்துவங்களுமாகும், சமயங்களின் கோட்பாடுகளையும், தத்துவங்களையும் அவனியினர் அறிந்து கொள்வதற்கு வழிசெய்து நல்வாழ்வு வாழ வழிகாட்டி நெறிமுறை தவறாது வாழவைக்க காலத்திற்குக் காலம் பெரியார்கள் தோன்றுகின்றனர். அவர்களது வாழ்வு இப்படித்தான் வாழவேண்டுமென்று அவனியினரை அறிவுறுத்தும் திறந்த புத்தகமாக அமைந்து விடுகின்றது.

ஆதிமுதல் இன்றுவரை இந்து சமயத் தத்துவங்களுக்கு உயிரூட்ட பல மகான்கள் இப்புவியில் அவதரித்துள்ளனர். அந்த வரிசையிலே இன்றும் நாம் போற்றிப் பெருமைப்படும் நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் உட்பட பலர் உள்ளனர். இராமானுஜர், ஆதிசங்கர், கபிலர், தாயுமானவர், அருணகிரிநாதர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், சாரதாதேவியார் என்று வரிசை நீண்டுகொண்டே போகின்றது.

நமது இலங்கை நாட்டிலும் இந்து சமயத்திற்குப் பெருமை சேர்த்த பெரியார்கள் பலர் வாழ்ந்துள்ளனர். இந்துக்களின் பெருமையை உயர்த்தியுள்ளனர். இந்நாட்டின் இந்துக்களின் இருப்புக்குச் சிறப்பளித்துள்ளனர். நல்லூர் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான், கிழக்கின் காரைதீவு பெற்றெடுத்த சுவாமி விபுலானந்த அடிகளார், சேர். பொன்னம்பலம் இராமநாதன், கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, இந்துபோர்ட் சு. இராசரத்தினம், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார், காசிவாசி செந்திநாதையர், திரு. பசுபதிச் செட்டியார், நீதியரசர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. ஆசிஸ்ன்னத்தம்பி, வைத்திய கலாநிதி. க. வேலாயுதபிள்ளை, தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி உட்பட பலரைக் குறிப்பிடலாம். கல்விக்கும், சமூக நலனுக்கும், தமிழரின், இந்துக்களின் பெருமைக்கும் இவர்களாற்றிய பணியால் மறைந்தும் மறையாதவர்களாக மக்கள் மனங்களில் வாழ்கின்றனர்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க இன்றும், என்றும் நமது சமூகத்தின், சமயத்தின் காவல் தூண்களாக இருப்பரென்பது திண்ணம். பெயர் குறிப்பிடப்படாத மேலும் பல உத்தமர்கள் நம் மத்தியில் வாழ்ந்து மறைந்துள்ளனர்.

தமது தத்துவக் கருத்துக்களால் மக்களை வசீகரித்த சித்தர்களாக போற்றப்படும் குடைச்சாமியார், செல்லப்பா சாமியார், கொழும்புத்துறை யோகர்சுவாமிகள், சித்தானைக்குட்டி சாமியார், நவநாதசித்தர் உட்படப் பலர் இந்த இலங்கை மண்ணில் இத்தத்துவம் உயிர்பெற்று வளம் செழிக்க வைத்தனர்.

வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டிய பெருமக்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன் குருபூசை நடத்துவதாலோ, விழாவெடுப்பதாலோ முடிந்துவிடாது. நமது சமுகத்திலே ஒழுக்கம், நேர்மை, உண்மை, ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, சுயநலமின்மை, உதவும் பண்பு உட்பட பலவற்றைக் கட்டிவளர்த்து சமுக உயர்வுக்கும், மேன்மைக்கும் உழைப்பதே நம்மை நேரிய வழியில் வாழவைக்க முனைந்த பெரியார்களுக்கு நாம் அளிக்கும் அன்புப் பரிசாகும். நல்லாரைக் காண்பதுவும் நன்று, நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்று என்பதைக் கருத்தில் ஏற்று அவர்கள் காட்டிய நெறியில் வாழ வழிசமைத்துக் கொண்டால் அதுவே சமய வாழ்வாகும். வாழ்வைச் சீர்செய்து சிறப்பிக்கும்.

இரத்மலானை மாணவர் விடுதியின் தந்தையாகப் போற்றப்படும் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை

அறுபது வருடங்களை நிறைவு செய்வதன் மூலம் வைரவிழா காணும் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் உழைத்தவர்கள் பலர். இவர்களுள். வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களையும் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

இரு தசாப்த காலத்திற்கு முன் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமூக நலன் குழுத் தலைவராகவிருந்த வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை வசதி குறைந்த மாணவர்களுக்கு ஒரு விடுதி ஆரம்பிக்கப் படவேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டி. அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு அரும்பாடுபட்டவர். மாணவர் விடுதி வேலைகள் பூர்த்தியாவதற்கு முன்னரே 1997ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ஆம் திகதியன்று அவர் இறைவனடி சேர்ந்துவிட்டார். எனினும். அவரது விருப்பம் 1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதியன்று மாணவர் விடுதி ஆரம்பமாகியதன் ஊடாக முழுநிறைவு பெற்றிருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம். அந்த வகையில் இவரை மாணவர் விடுதியின் தந்தை என்று சொல்வது பொருத்தமாகவிருக்கும்.

இவர் 1927ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் திகதியன்று உரும்பிராய் கிராமத்தில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையிலும், உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் பயின்ற பின்னர், யாழ் இந்துக் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்தார். கொழும்பு மருத்துவக் கல்லூரியில் மருத்துவத் துறையில் பட்டம் பெற்றார். காலி அரசினர் வைத்தியசாலை, கொழும்பு கண் வைத்தியசாலை ஆகியவற்றில் பணியாற்றி யிருக்கிறார். கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களில் வைத்திய நுண்ணுயிரியல் துறையிலும், சமூக சுகாதார நலத்துறையிலும் டிப்ளோமா பட்டத்தைப் பெற்றவர். அங்கொடை தொற்றுநோய் வைத்தியசாலை, லேடி றிட்ஜ்வே ஞாபகார்த்த சிறுவர் வைத்தியசாலை ஆகியவற்றில் சமூக சுகாதார நல நுண்ணுயிரியல் துறை ஆலோசகராகவும், கொழும்பு மருத்துவக் கல்லூரியில் துறை ஆலோசகராகவும், விரிவுரையாளராகவும், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பகுதிநேர விரிவுரையாளராகவும் சேவையாற்றி யிருப்பதுடன், உலக சுகாதார நிறுவனத்தின் அழைப்பை ஏற்று பல சர்வதேச மாநாடுகளில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவுகளையும் ஆற்றியிருக்கிறார். இவர் மருத்துவராகக் கடமையாற்றியதன் ஊடாக சிறப்பாகச் சேவையாற்றியவர். தனது மருத்துவப் பணிக்கு மேலதிகமாக, சமய சமூகநல சேவைகளிலும் அதிக ஈடுபாடுகொண்டு பெரும் பங்களிப்புச் செய்துவந்தவர். ஈழத்து திருநெறித் தமிழ் மன்றத்தின் ஸ்தாபகராகவும், பின்னர் அதன் உப தலைவராகவும் செயற்பட்டவர். அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவராகவும், கொழும்பு விவேகானந்த சபை, இந்து வித்தியா விருத்திச் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும், இலங்கை ஞானசம்பந்தர் இல்லத்தின் காப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

இவரது பெருமுயற்சியின் காரணமாக இயங்கத் தொடங்கிய இரத்மலானை மாணவர் விடுதி அமைந்துள்ள மண்டபத்திற்கு "வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை நினைவு மண்டபம்" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. நாற்பது மாணவர்களுடன் ஆரம்பமான இந்த மாணவர் விடுதியில் இன்று நூற்றிஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கியிருந்து கல்விகற்று வருகிறார்கள் என்பது ஒரு சிறப்பான தகவலாகும். இந்து மாமன்றத்தின் விடுதிப் பணியின் இரண்டாம் கட்டமாக சிறுபருவ பெண் பிள்ளைகளும், முதியோர்களும் தங்கியிருப்பதற்காக "சக்தி இல்லம்" என்ற பெயரில் புதிய விடுதியொன்று 2002ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9ம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இரத்மலானை மாணவர் விடுதியின் ஆண்டு நிறைவின்போது வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளையின் சேவையைப் போற்றும் வகையில், இவரை நன்றியுடன் நினைவுகூர்ந்து இந்து மாமன்றம் வருடந்தோறும் நினைவுப் பேருரையை ஏற்பாடுசெய்து நடத்திவருகிறது. தனது வளர்ச்சிப் பாதையில் பதினெட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இரத்மலானை மாணவர் விடுதி, அமரர் க. வேலாயுதபிள்ளை அவர்களை என்றென்றுமே நினைவூட்டிக் கொண்டிருக்கும் ஒரு சின்னமாகத் திகழுகிறது என்று சொல்லலாம்.

வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களது இவ்வருட (2015) நினைவாக, இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில், ஏப்ரல் 5ஆம் திகதி கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் வைரவிழா சிறப்பு நிகழ்வின் ஓர் அம்சமாக ஞாபகார்த்த சிறப்புரை இடம்பெறுகிறது. ஓய்வு பெற்ற கல்லூரி பிரதி அதிபரும், அகில இலங்கை இந்து மாமன்ற உப செயலாளருமான திரு. மா. கணபதிப்பிள்ளை "கலாநிதி வேலாயுதபிள்ளை காட்டிய பாதையில் வன்னிக்கும் எங்கள் சேவையை எடுத்துச் செல்வோம்" என்ற பொருளில் ஞாபகார்த்த சொற்பொழிவாற்றுகிறார்.

Speech by

Justice Saththiya viththagar C.V. Wigneswaran (Chief Minister of Northern Province)

when he received

Prime Minister of India, Honourable Narendra Modi

on his visit to Jaffna at Library Auditorium, Jaffna on 14th March 2015

Honourable Narendra Modi, the Prime Minister of India, Honourable Pallihakara, Governor of the Northern Province, Your Excellency Mr.Y.K.Singha, the High Commissioner for India in Sri Lanka, Honourable Minister Mr.Karu Jayasuriya, Honourable Minister Mr. Mangala Samaraweera, Honourable Minister Mr.Laxman Kiriella, Shri Ajit Doval, National Security Adviser, Dr.S.Jai Shanker, Foreign Secretary of India, distinguished high officials from India and Sri Lanka, my dear brothers and sisters!

I am no doubt flattered that I have been blessed with the task of welcoming you Sir, the Prime Minister of Bharath , whom I had wanted to meet several years ago even while your Honour was the Chief Minister of Gujarat. You were known then to have been an excellent administrator. You transformed Gujarat into a successful State. You had brought international recognition to Gujarat and conceived the Gujarat model for development, which I referred to in my congratulatory message to you Sir in May 2014. Your excellent leadership and people centered approach was possible due to the nature of center-periphery framework and content and quantum of devolution that is prevalent under the Indian constitution, which is a Union, secular by design.

Your achievements in Gujarat in building a highly responsive public administration system to ensure women empowerment, infra-structure development, economic and industry development initiatives have given us great inspiration. You have shown us a model for us to draw lessons from.

You are empowering each state in India to craft their own success stories by untangling the burdening bureaucracy, fighting corruption and embarking on national scale programs. You are in effect on a mission to unease the potential of every Indian regardless of their class, creed or gender. No wonder you referred to your firm belief in co-operative federalism yesterday in Parliament.

Needless to say the relationship between our two Countries is quite long and ancient. The Bridge of Rama connects our two Countries close to where you Sir, had unveiled a Plaque today inaugurating the Talaimannar Pier Railway Station. It is the desire of our citizens that close collaboration continue between **our peoples** in the field of trade, commerce, business, Information Technology and other Technologies, education, sport, culture and many other fields.

Your nation has for long welcomed the persecuted, the dispossessed, the war affected and the stateless. From the Jews escaping the Romans 2000 years ago, to Syrian Christians escaping religious persecution in 4 century AD to the modern day Tibetans and nearly 100 thousand of our own have sought and found sanctuary in your nation. I take this opportunity to offer our profound thanks to your people for your long and continuous humanitarian gestures.

You have Sir, risen from humble beginnings with sheer commitment and determination to the highest office in India despite determined and formidable opposition against you over decades. We are aware that it was your yearning to serve the people of India and to create an India to be taken note of in the 21 century that has ensured your ascendency to power. We have no doubt Sir, that you will usher in political, economic, social and cultural renaissance in your Country. Your forthrightness in wanting the full implementation of the 13th Amendment when Mr.Rajapakse met you on your ascension to power was a step in the right direction though the path to ultimate resolution and settlement is going to be long and arduous. Thirteenth Amendment can never be the final solution.

You have Sir, after assuming office as Prime Minister dismantled centralized planning process to facilitate greater performance and productivity among the States in the Indian Union. We are no doubt happy you are yourself a proponent and an advocate of devolution. That exactly is what we are agitating for in Sri Lanka.

The current 13th Amendment Framework and the existing Sri Lankan constitutional architecture that had evolved since the first Republican Constitution of 1972 without the consent and participation of Tamils of North and East of our Country, poses formidable challenges and hindrances in realizing the quantum of devolution required to fulfill the needs and aspirations of the Tamil Speaking People of North and East of Sri Lanka. Indian Constitution provides for the facilitation of sustainable development, internal security, law and order, policing and protection pertaining to lands and so on within the State. Our inability to function in our Province to the extent you were able to help Gujarat under the Indian Constitution needs to be understood.

Especially the inadequacies of the Thirteenth Amendment. Even when the Indo-Lanka Accord of 1987 was signed there was a historic communication by our leaders to the then Indian Prime Minister, late Shri Rajiv Gandhi on

28 October 1987, pointing out hollow and inadequate the 13th Amendment had been. They sought the then Indian Government's intervention on behalf of the Tamils of North East Province of Sri Lanka. When Indo Lanka Accord was negotiated ostensibly as a solution to the Tamil Question, India whilst addressing Indian Security and Strategic concerns, stood as a guarantor on behalf of the Tamils of North-East. That situation prevails in North-East Provinces in Sri Lanka even today. We need the services of a guarantor and it is our considered view that the Government of India under your stewardship is best suited for this role!.

The emaciated Thirteenth Amendment has not brought the required and expected devolution to the North and East. Even today parallel administrative structures exist one directed by the Centre and the other by the Province despite the appointment of an amiable Governor!

Our former President in May 2009 released a joint statement with the UN Secretary General during latter's visit to Sri Lanka relating to the core issues and post war context and the causes of the conflict. Later in January 2010 he promised Mr.Manmohan Singh, your predecessor, that he will go beyond the Thirteenth Amendment. Hence, it is time that we take note of the commitment expressed by the then Sri Lankan Head of State, consider our post war context, needs, priorities and concerns and move forward with the active support of your friendly Country under your leadership.

We seek positive action to be taken to resolve our problems. May I suggest Sir, that there be talks among the Indian Government, Sri Lankan Government and the NPC and the EPC without taking refuge under the current constitutional provisions and protocols to find ways of resolving the central problem of the Tamil speaking people in an innovative and creative manner bearing in mind the root causes of our ethnic conflict and post war needs and priorities of the people of the Northern and Eastern Provinces? We seek justice and fair play to be established in the political arena and the constitutional framework in Sri Lanka to live with equity, equality and dignity.

We have many requests to make. But it is not appropriate for me to present our want list when we are happily welcoming you into our midst. Suffice to say a concerted effort on the part of the Central and Provincial Administrations of our Country with yours would no doubt bring alleviation to the vast numbers of War affected families and individuals in our part of this Country. Even though security concerns should be left to the Central Administration in any Country it should not transgress the limits of protection of the Country to a protracted pursuit of purposeful military occupation with political undertones in place. I could give statistics of such purposeful occupations. But we are here to welcome you Sir, not to burden you with a testament of our trials and tribulations. Let us hand over to you today separately our humble requests to rebuild our post war Province. I fervently believe that it is during your time in office with your leadership that we will finally be able to resolve longstanding political conflict, restore peace, security and stability in the lives of our people. I thank all of you for your patient hearing.

Loga samastha sugino bhavanthu!

Justice C.V.Wigneswaran
Chief Minister,
Northern Province

Indian Prime Minister Hon. Modi in Sri Lanka



When it was noticed that in the iternary of Indian Prime Minister Narendra Modi's visit to Sri Lanka on 13 and 14 March 2015 no prayer at a Hindu Temple was included. All Ceylon Hindu Congress urged His Excellency High Commissioner for India to arrange for Hon. Prime Minister Narendra Modi to pray at one of the Ishwarams Naguleshwaram or Thiruketheeswaram. ACHC was assured that Indian PM Modi would visit Naguleswaram. Accordingly Indian PM Modi prayed at Naguleswaram. These pictures show his praying at Naguleswaram on Saturday 14 March 2015.

World will be able to view. !!!

World's tallest Temple in Vrindavan - India.

About the temple

Vrindavan Chandrodaya Mandir is the world's tallest temple under construction at Vrindavan, Mathura, India. At cost of INR300 crore (US$49 million) it will be one of the most expensively built temple in world by ISKCON.

- The temple has a footprint of about 5 acres
- Rises to a height of about 700 feet (213 meters or 70 floors)
- a built-up area of 5,40,000 sq. Ft.
- The project is set in 62 acres of land and will includes 12 acres for parking and a helipad..

The temple is planned to be vibrant with festivals and religious activities throughout the year. A look-alike of the verdant forests of Vrindavan will be recreated around this magnificent temple. It will be spread over a sprawling 26 acres, it will consist of the twelve forests (dvadashakanana) of Braj, With varieties of lush vegetation, green pastures, elegant vistas of fruit bearing trees, Flower laden creepers serenaded by bird songs, clear water lakes with lotuses and lilies And water falls that tumble from small artificial hillocks – all recreated from descriptions in the SrimadBhagavatam and other source books of Lord Sri Krishna – to transport the visitors to Krishna's times in Vrindavan.

The structural design has been outsourced to a US-based company, TRC Worldwide Engineering Brentwood. Structural design advisor's are from Civil Engineering Department IIT and Sanrachna Consultants, New Delhi. The lead architects are Ingenious Studio Pvt Ltd. Quintessence Design Studio will carry out landscaping for the whole temple area. HVAC (heating, ventilation, and air conditioning) will be installed by Gupta Consultants & Associates. All the electricals and wiring will be done with the help of WBG Consultants. The temple, with a traditional Nagra architecture at the entrantce, will have elements of a glass façade That would stretch to the 70th floor.

Courtesy: Wikipedia
http://en.wikipedia.org/wiki/Vrindavan_Chandrodaya_Mandir





"இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம்"

கொழும்பில் நடந்த நூல் வெளியீட்டு விழா

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் வழிகாட்டலில் மாமன்றம் வெளியிட்டுள்ள "இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம்" என்ற ஆய்வு நூலின் வெளியீட்டு விழா கடந்த மாதம் (மார்ச்) 7ஆம் திகதியன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது வடமாகாண முதலமைச்சர் சத்தியவித்தகர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இணுவில் தர்ம சாஸ்தா குருகுலத்தின் அதிபர் சிவஶ்ரீ தா. மகாதேவக் குருக்கள் ஆசியுரை வழங்கும் போது "மாமன்றம் ஆற்றிவரும் நற்பணிகள் மேன்மையானவை. அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய இரண்டு ஆகம கிரந்தங்களை மீள்பதிப்பாக வெளியிட்டு, இலவசமாக வழங்கியமை மாமன்றம் அந்தணப் பெருமக்களுக்கு செய்த பேருதவியாகும். தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது பல்வேறு பணிகளை ஆராய்கின்ற வகையில் யாழ் பல்கலைக்கழக சமூகத்துடன் இணைந்து மாமன்றம் செய்திருக்கும் இந்த சேவையானது சிறப்பாகப் போற்றத்தக்கது" என்று கூறினார்.

ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் வழங்கிய ஆசியுரையின் போது "தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா ஆலய நிர்வாகத்தில் இருந்து கொண்டு சமூக சேவை செய்திருப்பது போற்றத்தக்கது. அம்மாவின் அஸ்தியை காசியிலுள்ள கங்கையில் கரைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. ஒரு ஆலயம் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டியவர் இவர். நூல் நிலையம், வைத்தியசாலை, மகளிர் இல்லம் என்பவைகளை உள்ளடக்கிய நிறுவனமாகவே ஆலயத்தை நிர்வகித்தவர்" என்று குறிப்பிட்டார்.

இந்த வைபவத்தில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் "சமய விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட்டுவரும் இந்து மாமன்றம் துர்க்காதேவி ஆலய தலைவியாக இருந்தவருடைய வாழ்க்கை வரலாற்றை ஆய்வு நூலாக வெளியிடுவது போற்றத்தக்கது. சிவத்தமிழ்ச்செல்வி அம்மா தனித்து நின்று சமயத்தின் பெருமையையும் மொழி மற்றும் இனத்தின் சிறப்பையும் வெளிப்படுத்தும் வகையில் ஆலயத் தொண்டு செய்தவர்.

சமயத்தின் அடையாளத்தை வைத்து பணியாற்றி வரும் இந்து மாமன்றம், அரசுத் தலைமைகளை சந்தித்து இந்து மக்களுக்கு தேவையானவற்றை செய்து வருகிறது. இந்து மக்கள் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய வகையில் மாமன்றப் பணிகள் அமைந்துள்ளன." என்று குறிப்பிட்டார்.

நிகழ்வுக்கு தலைமைவகித்த மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் உரையாற்றும்போது, "மாமன்ற வரலாற்றில் அறுபது ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் நேற்று முதல் நிகழ்ச்சிகளை நடாத்திக் கொண்டிருக்கிறோம். மாமன்றத்தில் பொதுச் செயலாளராக, தலைவராக பணியாற்றுவதற்கு எனக்கு கிடைத்துள்ள பாக்கியத்தை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். மாமன்றப் பொன்விழாவை 2005ஆம் ஆண்டில் கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் நடத்தியபோது சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு "தெய்வத் திருமகள்" என்ற பட்டத்தை வழங்கியிருந்தோம். இந்து சமய வரலாற்றில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் அம்மையார். இதன்மூலம் புதிய சமுதாயத்தை உருவாக்கித் தந்துள்ளார்" என்று தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் நூலை அறிமுகம் செய்து உரையாற்றும் போது "அம்மையாரின் வரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. சைவப் பெண்கள் சைவப் பாரம்பரிய கலாசாரத்துடன் வாழவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் இவர்" என்று குறிப்பிட்டார்.

நூலாசிரியரான யாழ் பல்கலைக்கழக இந்து மெய்யியல், இந்து நாகரிகத்துறை வருகைதரு விரிவுரையாளர். திரு. தி. செல்வமனோகரன் நூலின் சமர்ப்பண உரையின்போது, "ஈழத்து சைவசமூகம் தனக்கென ஒரு வரலாற்றுப் பெண்மணியைப் பெற்றுக்கொண்டமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்க விஷயமாகும். இவர் தனித்து நின்று, உலகம் முழுவதும் சென்று தன்மொழியில் பேசி, சேவை செய்தவர். இவர் ஒரு வரலாற்று நாயகி என்பதற்கு அப்பால், சமய சமூகப் பணிகளின் ஊடாக சிறப்புற்று விளங்கியவர். இவர் விட்டுச் சென்ற பணிகள் இப்போதும் தொடருகின்றன" என்று தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. பாலகைலாசநாத சர்மா நூலின் ஆய்வுரையை வழங்கினார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் ஆற்றிய உரையைத் தொடர்ந்து செஞ் சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் நிறைவுரையாற்றினார். மாமன்றப் பொதுச் செயலாளர் கலாநிதி மு. கதிர்காமநாதன் ஆற்றிய நன்றியுரையுடன், நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

"இலங்கையின் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம்"

யாழ் நகரில் நூல் வெளியீட்டு விழா

அகில இலங்கை இந்து மாமன்ற வெளியீடான மேற்படி நூலின் வெளியீட்டு விழா கடந்த மாதம் (மார்ச்) 20ஆம் திகதியன்று மாலை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெற்ற இந்த வைபவத்தின் போது மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சீ. யோகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகள் வழங்கினார்கள்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் நூலின் அறிமுகவுரையையும், நூலாசிரியர், திரு. தி. செல்வமனோகரன் நூல் சமர்ப்பண உரையையும், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் வெளியீட்டுரையையும், யாழ் பல்கலைக்கழக முன்னைநாள் உபவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் ஆய்வுரையையும் ஆற்றினார்கள். செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் நிறைவுரையாற்றினார்.

மாமன்றம் வாழ்த்துகிறது

பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்

அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவை சிறப்பு உறுப்பினர்களுள் ஒருவரான திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் பேராசிரியர் பட்டம் பெற்றிருப்பதையிட்டு மாமன்றம் இனிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. இவர் இப்போது சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறையின் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியின் பழைய மாணவரான இவர், 1979ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் மேற்பார்வையின் கீழ் "ஈழத்து நவீன தமிழ்க் காவியங்கள்" என்னும் தலைப்பில் ஆய்வை மேற்கொண்டு கலைமாணி தமிழ் சிறப்புப் பட்டத்தை பெற்றுக் கொண்டார். 1988ஆம் ஆண்டில் "யாழ்ப்பாணத்து முருகப் பிரபந்தங்கள்" என்னும் பொருளில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் மேற்பார்வையின் கீழ் ஆய்வு செய்து முதுகலைமாணி (M.A) பட்டத்தைப் பெற்றார். 2008ஆம் ஆண்டில் "சுதேச மருத்துவம் பற்றிய இலங்கைத் தமிழ் நூல்கள் - பொருள் மரபும், இலக்கிய வளர்ச்சியில் அவற்றின் பங்கும்" என்னும் தலைப்பில் பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறையில் ஆய்வை மேற்கொண்டு கலாநிதி பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் நாடறிந்த இலக்கிய சமயச் சொற்பொழிவாளராகவும், பட்டிமன்றப் பேச்சாளராகவும், கதாப்பிரசங்க கலைஞராகவும் விளங்குகிறார். தமிழ் இலக்கியம் மற்றும் சமயத்துறை சார்ந்த பல நூல்களை எழுதி வெளியிட்டிருப்பதுடன், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் ஏராளமான கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். "ஈழநாடு" நாளிதழிலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சமய நிகழ்ச்சிப் பிரிவிலும் கடமையாற்றியிருப்பதன் மூலம் ஊடகத்துறையிலும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

இவர் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய பரம்பரை அறங்காவலராகவும் இருக்கிறார். இவருக்கு பல சமய நிறுவனங்களும், ஆலய அறங்காவலர் சபையினரும் பல்வேறு சிறப்புப் பட்டங்களை வழங்கி கௌரவித்திருப்பதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

"இலங்கையில் சைவத்தமிழ்ப் பண்பாடு வளர்ச்சியில் தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் - ஓர் ஆய்வு" நூல் வெளியீடு - நல்லூர் கூர்க்கா மணிமண்டபத்தில் 20. 03. 2015 அன்று நடந்த வேளையில்

ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்

மாமன்றத் தலைவர் திரு க. நீலகண்டன்

பேராசிரியர் மா. வேதநாதன்

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம்

முன்னைநாள் உபவேந்தர் பேராசிரியர். நா. சண்முகலிங்கன்

பிரதமவிருந்தினர் மாண்புமிகு சீ. யோகேஸ்வரன் பா. உ

கலாநிதி ஆறு.திருமுருகன்

பிரதமவிருந்தினர் நல்லூர் ஆதீன முதல்வரை கௌரவிக்கின்றார்.

ஆன்மீகச்சுடர் நூலை வெளியிட்டு வைக்கிறார்.



உபவேந்தருக்கு மாமன்றத் தலைவர் சிறப்புமலர் வழங்குகிறார். அருகே நூலாசிரியர் செல்வமனோகரன்

தெய்வத்திருமகளின் சகோதரிக்கு உபவேந்தர் சிறப்பு மலரை வழங்குகிறார்

மேடையில் கலாநிதி ஆறு.திருமுருகன், நல்லூர் ஆதீன முதல்வர், ஆன்மீகச்சுடர், பேராசிரியர் சண்முகலிங்கன், மாமன்றத் தலைவர், பிரதமவிருந்தினர், உபவேந்தர், பேராசிரியர் மா. வேதநாதன், திரு. செல்வமனோகரன்

மாமன்ற உபதலைவர் திரு. எஸ்.பி.சாமி, திருமதி நாச்சியார் செல்வநாயகத்துக்கு சிறப்புமலர் வழங்குகிறார்

சபையோர்

மாமன்ற வைரவிழா ஆரம்ப நிகழ்வு - 06-03-2015

ஆலய அறங்காவலர் மாணிக்கவாசகரை மாமன்றத் தலைவர் கௌரவிக்கின்றார்.

நல்லூர் ஆதீன முதல்வருக்கு இந்து ஒளி சிறப்பிதழை ஆலய அறங்காவலர் மாணிக்கவாசகர் வழங்குகிறார்.

இராமகிருஷ்ணமிஷின் தலைவருக்கு திரு. மாணிக்கவாசகர் இந்து ஒளி சிறப்பிதழை வழங்குகிறார்.

பொதுச் செயலாளர் நன்றியுரை

கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலையில் தேவகாந்தன் - தனலட்சுமி கட்டிடம் திறப்புவிழா - 21. 03. 2015



கட்டிடம்



திரு.தேவகாந்தன் மங்களவிளக்கேற்றுகிறார்.

திருமதி தனலட்சுமி தேவகாந்தன் மங்கள விளக்கேற்றுகிறார்

மேடையில்...

பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும்



சபையோர்

கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் சிரமதானப் பணி

மாமன்ற யாழ் பணிமனை சிவத்தொண்டர் அணியிலுள்ள யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலய மாணவர்கள் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் தலைமையில் கோண்டாவில் சிவபூமி பாட்சாலையில் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருப்பதையும், மேற்படி மகா வித்தியாலய ஆசிரியர் திரு. யுகேஸ் அவர்களையும் படங்களில் காணலாம்.





மனக் கஷ்டங்களைப் போக்கும் இந்துமத தியானம்

"உன்னை ஆராய்வதற்கு அறிவை பயன்படுத்து
பிறரை ஆராய்வதற்கு அன்பை பயன்படுத்து"

நமக்கு இடர்பாடு வரும் போதெல்லாம் நமது மானசீகக் கோயிலில் அவ்வப்போது பகவான் காலடியில் விழுந்து வணங்கி தீவிரமாக மந்திரம் சொல்லி அரைமணி நேரமாவது தியானித்து வந்தால் நமது உணர்வு, மனம், புத்தி இயக்க உடனே மின்சாரம் என்ற இறைசக்தி நம்முள் வந்து சேரும். இதனால் அருள்சேரும், பொருள்சேரும், இறைக் கவசம் கிடைக்கும்.

இருகைகளையும் ஒருமுறை தேய்த்தவுடன் சூடு வராது. நாம் பலமுறை தேய்த்தவுடன் கையில் சூடு பிறக்கும் அல்லவா! இதைப்போன்று தினமும் மந்திரம் கூறி பகவானை பலமுறை நினைத்தால்தான் மனம் நிலைப்படும், தியானம் என்ற இறை நினைப்பு கை கூடும்.

தண்ணீரில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருப்பவன் தனது முகத்தைத் தண்ணீரில் பார்க்க முடியாது. இதுவே உலக வாழ்க்கை. ஆனால் அதே மனிதன் தண்ணீரை விட்டு மேலே வந்தபின் தெளிந்த நீரில் தனது முகத்தை நன்கு பார்க்க முடியுமல்லவா! இதுவே ஞான வாழ்க்கை, அதாவது தியானத்தின் வெற்றி.

"விசுத்தி மகேசுரனை விழிதிறந்து பாராமல்
பசித்துருகி நெஞ்சம் பதறினேன் பூரணமே"

(பட்டினத்தார்)

பட்டினத்தார் நான் கண் விழித்தவுடன் பகவானைப் பார்க்காமல் பசிக்குதே என்று நெஞ்சம் பதறினேன் என்று வருந்தி பாடுகிறார். கடவுளை அடைய வேண்டும் என்று நினைப்பவன் பாக்கியவான். அவர்கள் எண்ணம் வெற்றி பெற இறை நினைப்பு, சேவை என்ற உழைப்பு வேண்டும்.

ஆலமரம் ஓரிரவில் வளர்ந்து விடுவதன்று. மன பரிபக்குவம் நினைத்த மாத்திரத்தில் வந்து விடுவதன்று. பல்லாண்டு அதைப் பண்படுத்திக் கொண்டே வரவேண்டும். மனம் பக்குவம் அடைய

நம்மை நாம் கண்காணிக்க வேண்டும். அப்படி மனம் புலன்கள் வழியாக வெளியில் செல்லும் போது அதை தடுத்து இறை மந்திரம் கூறி மீண்டும் பகவானை நினைக்க வைக்க வேண்டும்.

"தன்னைத்தானே சீர்திருத்திக் கொள்பவர் தான்
உண்மையான சீர்திருத்தக்காரர்."

பொதுவாக இனம் புரியாத கவலை, தேவையில்லாத குழப்பம், அவ்வப்போது கற்பனை செய்து பயத்தில் வாழ்தல், இது இப்படி ஆனால் என்ன செய்வது? - இல்லை அப்படியானால் என்ன செய்வது? என்ற குழப்பத்தில் வாழ்பவர்கள் ஏராளம் ஏராளம். இந்த குழப்பம் நீங்கி மனம் திடம் பெறுவதற்கு தினமும் நூறு முறையாவது மந்திரம் சொல்லி அவ்வப்போது பகவானை நினைக்க வேண்டும்.

வெற்றியின் இரகசியம் சான்றோர்கள் கூறும் அறிவுரைகளை கேட்பதிலும், படிப்பதிலும் அதை நடைமுறைப் படுத்துவதிலும் தான் இருக்கிறது. "கலப்படம் இல்லாத பொருள் பரம்பொருள்" என்பதை நாம் உணர வேண்டும். பொதுவாக நமது மனதில் இறை நினைப்பும், இறை மந்திரம், தியானமும் தடைப்பட்டு நின்று விட்டால் உள்ளத்தில் இருள் சூழ்ந்து விடும் என்பதை நீங்கள் உணரவேண்டும்.

"ஆசை, கோபம், பயம், காமம் இவற்றில் இருந்து விடுபட வேண்டுமென்றால் என்னிலே மனம் லயித்து, என்னை சரண் அடைந்து விடவேண்டும். இப்படிப் பலர் என்னிடம் வந்துள்ளனர். அவர்கள் எல்லோரும் என்னிடம் பக்தி காட்டியவர்கள்."

- பகவான் ஸ்ரீகிருஷ்ணர்.

ஒரு கடை வைக்க பல இடங்களில் சென்று பல்வேறு பொருள்களை வாங்கிச் சேர்த்துத்தான் வியாபாரத்தை ஆரம்பிக்க வேண்டும். இதைப்போன்று பக்தியை மக்களிடம் பரப்ப வேண்டுமானால் பல இறைமார்க்க விசயங்களைத் தன்னுள் சேகரம் செய்து கொண்டுதான் மற்றவர்களிடம் சொல்ல வேண்டும். பிறகுதான் அந்த பக்தியை சிறப்பாக பரப்பி வெற்றி பெறச் செய்ய முடியும்.

இப்படிப்பட்ட நிலையில் பணியாற்றும் பக்தர்களைத் தான் "இறைதொண்டர்" என்று அழைக்கின்றனர். இவர்களுக்கு ஆன்மீக அறிவு அதிகம் இருக்கும். மக்களிடம் பக்தியைப் பரப்ப பகவானால் நியமிக்கப்பட்டவர்களே இவர்கள். மனிதர்கள் மேல் வைக்கும் அன்பு, இன்பம் போன்று துவங்கி துன்பத்தில் முடியும். ஆனால் தெய்வீக அன்பு அதாவது பகவான் மேல் வைக்கும் அன்பு பிரிவிலும் இறப்பிலும் கூட துன்பம் தராது. இம்மை மறுமை இரண்டிலும் வெற்றி தரும்.

பொதுவாக இறைவன் மேல் நாட்டம் வரும்போது தன்னுடைய கீழான செயல்களில் இருந்து விடுபட மனிதன் தீர்மானித்து விடுகிறான்.

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மான் என்று
பாடு மின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே" - திருமந்திரம்

"உழைக்காமல் கிடைக்கும் பொருளுக்கு மதிப்பில்லை. அப்படியே அது கிடைத்தாலும் அது நிலைப்பதில்லை". ஒரு பக்தன் கோயில் கோயிலாகச் சுற்றி அலைந்து சிவபெருமான் என்றெல்லாம் பாடி பணிந்து கடைசியில் ஒரு நிலைப்பட்ட மனதுடன் இருக்கும் போது உள்ளத்தில் கோயில் உருவாகிவிடுகிறது. பகவான் தரிசனமும் கிடைத்து விடுகிறது என்று தனது தெளிவான அனுபவ விளக்கத்தைத் திருமூலர் கூறியிருக்கிறார்.

விசயம் தெரிந்த பக்தர், தெரியாதவர்களுக்குப் பக்தியைப் போதிக்கும் முறை இன்னும் இருக்கத்தான் செய்கிறது. அந்த அடிப்படையில் தான் குருமார்க்கம் நிலைப்பெற்றிருக்கிறது.

நன்றி : இணையம் (இந்து ஒருங்கிணைப்பு மேம்பாட்டு இயக்கம்)

இந்தச் சுடரில்...

- பஞ்ச புராணங்கள் 1
- ஆன்மீகச்சுடரின் அருள்மடல் 3
- மாமன்ற வைரவிழா ஆரம்ப நிகழ்வு 4
- மாமன்றம் நடத்திய சிந்தனைக்களம் 5
- யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைகள் 6
- யோகர் சுவாமிகளின் போதனைகளும் மகா வாக்கியங்களும் 10
- சிவதொண்டு ஆற்றுவதே சிவனடியார்களின் தொழில் என்பதை உணர்த்திய ஆன்மீகஞானி 15
- ஈழத்துச் சித்தர்களின் பரம்பரை வரிசையில் தவத்திரு சிவயோக சுவாமிகள் 22
- சிவனடிக்கன்பே சிவயோகமாகக் கண்ட தவமுனி 30
- சத்திய வித்தகர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரனின் சிறப்புரை 34
- மாமன்றத் தலைவரின் தலைமையுரை 36
- பெரியோரைப் பின்பற்றுவோம் 38
- நினைவலைகள் - வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை 39
- Speech by - Saththiya viththagar Hon. C.V. Wigneswaran 40
- World will be able to view. 42
- சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வகிபாகம் - நூல் வெளியீடு 43
- மாமன்றம் வாழ்த்துகிறது. 44
- மனக் கஷ்டங்களைப் போக்கும் தியானம் 47

என் குருநாதன்

'புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றாகக் கொள்பவன்
சிங்காரமான நடையொடு சிரிப்பினையுடையான்
ஆரறிவாரென்று அடிக்கடி சொல்லுவான்
தேரடிப் படியில் சிங்கார மாய்கிடப்பான்
பேரறி வாளனெனப் பிறரெவரு மோவறியார்.
பித்தனென் றுலகோர் பேசுவர் ஏறுவர்.'

- யோகர் சுவாமிகள்

"ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம்
முழுவதும் உண்மை, நாமொன்றும் அறியோம்"

தவத்திரு சிவயோகசுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை ஆண்டு நிறைவு சிந்தனைக்களம்
(பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம் - 07.03.2015 காலை)

ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் நந்திக்கொடி ஏற்றுகிறார். அருகே விடைகொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா.

திருமதி ரவிராஜ் நற்சிந்தனைப்பாடல் பாடுகிறார்

சிந்தனைக்களத்தில் பங்குபற்றியவர்கள் மாமன்றத் தலைவருடனும் பொதுச்செயலாளருடனும் (இ. வ) திரு. கந்தையா நீலகண்டன், கலாநிதி ஆறு.திருமுருகன், திருமதி சாந்தி கேசவன், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன், பேராசிரியர் கலாநிதி வ. மகேஸ்வரன், பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன், பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்.



நல்லூர் ஆதீன முதல்வரை திரு. சுப்ரமணியம் கௌரவிக்கிறார்

ஆன்மீகச்சுடர் ரிஷிதொண்டுநாதன் சுவாமிகள் தவத்திரு யோகர்சுவாமிகளுக்கு கற்பூர ஆராத்தி

சபையோர்

இறை வணக்கம்

கலாநிதி ம. பாலகைலா நாதசர்மாவை கொழும்பு மாநகரசபை உறுப்பினர் திரு. பாஸ்கரா கௌரவிக்கிறார்.

கலாநிதி ஆறு. திருமுருகனின் நிறைவுரை

நல்லூர் ஆதீன முதல்வருடன் சிந்தனைக்களத்தில் பங்குபற்றியோர்

கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரத்தின் தலைமையுரை

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/41/NEWS/2015

மாமன்ற வைரவிழா ஆரம்ப நிகழ்வு - 06-03-2015

வெள்ளவத்தை சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள்

9 772012 964007